மண்ணும் மக்களும்

பண்பாட்டு ஆய்வு மாத இதழ்

www.aatrupadai.com

ஆகஸ்டு -2024 இதழ்-08 ஆடி - ஆவணி



ஆற்றுப்படை

வெளியீடு

மண்ணும் மக்களும்

பண்பாட்டு ஆய்வு மாத இதழ்

இதழ்-08 | ஆகஸ்ட் | 2024

ஆக்கம்
வே. பார்த்திபன்

தொகுப்பு
பா. பிரபாகரன்
அ.சி. நடராஜன்

ஆற்றுப்படை குழு
979 007 6772 / 902 551 6415

இந்த ஆய்வு மாத இதழ், வணிக நோக்கம் ஏதுமின்றி தகவல்களை அனைவரிடமும் கொண்டு சேர்க்க வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளது. இதிலுள்ள தகவல்கள் அனைத்தும் கட்டுரையாசிரியர்களுக்கே சொந்தம். இந்த கருத்துகளை பயன்படுத்த எண்ணினால் கட்டுரையாளர்களிடம் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்.

மண்ணும் மக்களும்

செவ்வியல் பாடல்களில் கீரையுணவு





முனைவர் போ. மணிவண்ணன்
தமிழ்த் துறைத் தலைவர்
அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி
அவிநாசி 641654

திணை சார்ந்த வாழ்வியலைச் செவ்வியல் இலக்கியங்கள் முன் வைக்கின்றன. ஐந்நில வாழ்வின் ஆவணமாக சங்க இலக்கியங்கள் திகழ்கின்றன. உலகியல் வாழ்வை உயர் குறிக்கோளோடு வாழ முற்பட்ட தமிழரினத்தின் வரலாறும் பண்பாடும் உலக நாகரிகங்களில் ஒப்பற்றதாக விளங்குகிறது. அதில் பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புகின்ற பண்பு இயல்பாகவே காணப்படுகின்றது. மாபெரும் விருந்துணவாயினும் மிக எளிய இலைக்கறியுணவாயினும் நோயில்லா இயற்கை நெறியுடன் பகிர்ந்து உண்டுள்ளனர் .உண்பது நாழி உடுப்பது இரண்டு என்ற கொள்கையுடன் மனத்துக்கண் மாசின்றி விருந்தோம்பல் செய்து வாழ்ந்துள்ளனர். அவ்வகையில் மிக எளிமையாகக் கிடைக்கின்ற கீரையினைப் பெரும்பாலானோர் உட் கொண்டுள்ளனர். செவ்வியல் பாடல்களில் ஆங்காங்கு தோன்றும் கீரையுணவு குறித்த பதிவுகளை இக்கட்டுரை முன்வைக்கிறது.

கீரைகள்

பழந்தமிழரின் உணவுகள் மிகவும் பண்பட்ட உயர் நிலையில் அமைந்துள்ளன .பழங்கள் ,காய்கறிகள், கீரைகள், கிழங்குகள் பால் உணவுகள், அசைவ உணவுகள் என்று உணவு வகைகள் மிகப்பெரும் பட்டியலாக நீள்கின்றன. நாம் உண்ணும் உணவில் பலவிதமான சத்துக்கள் அடங்கியிருந்தாலும் குறிப்பாக தேவைப்படுவது ஆறு வகையான சத்துக்கள் ஆகும் அவை புரதச்சத்து, மாவுச்சத்து, கொழுப்புச்சத்து, உலோகச்சத்து, நீர்ச்சத்து, வைட்டமின் சத்து என்பனவாகும்.

இச்சத்துக்கள் அடங்கிய உணவைச் சீரான அளவில் உண்ணாவிட்டால் உடல் பலவீனமடைந்து செயல் திறன் இழந்து நோய்க்கு ஆளாகி விடுகிறது. செவ்வியல் இலக்கியங்களில் தமிழ் மக்களின் உணவுப் பண்பாடு விரிவாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. அறுசுவை விருந்தாயினும் எளியோரின் உணவாயினும் பகிர்ந்துண்ணும் பண்பாடு வலியுறுத்தப்படுகிறது.

பூமகளின் மடியில் கிடைக்கும் மூலிகைகள் தான் கீரைகள். மண்மகள் உயர்திணை உயிர்களுக்கும் அஃறிணை உயிர்களுக்கும் அளித்த மகத்தான கொடைதான் கீரைகள். நிறைந்த சத்துகளையுடைய கீரை உடலின் நோயை விரட்டி வலுவினை அளிக்கிறது. கீரையை இலைக்கறி என்றும் அழைப்பர். கீரை உணவின் பயனைப் பெருமளவு ஏழை மற்றும் நடுத்தர மக்கள் நன்கு அறிந்துள்ளனர். ஒவ்வொரு நாளும் கீரைகளில் ஏதேனும் ஒன்றை உணவுடன் சேர்த்துக் கொள்வது நல்வாழ்வுக்கு வழிவகுக்கும்.

கீரைகளில் ஏராளமான இரும்புச்சத்தும் சுண்ணாம்புச்சத்தும் நிறைந்துள்ளன. மண்ணின் வளத்தையும் சூரியனின் ஒளியையும் நேரடியாகப்பெறும் இலைகள் மனிதர்களுக்கு உணவாகும்போது நோயற்ற உடலுக்கு வழிவகுக்கின்றன. ஆண்டு முழுவதும் கிடைக்கின்ற ஒரே தாவரம் கீரை மட்டுமே ஆகும். மிகச் சிறிய இடத்தில் கூட இதனைப் பயிரிட்டுப் பலன் பெற்று விட இயலும் என்பது இதன் சிறப்பம்சமாகும் .

அடகுக்கீரை, முஞ்ஞைக்கீரை, வேளைக்கீரை, குப்பைக்கீரை வேளைக்கீரையின் போன்ற இலைக்கறிகள் குறித்த பதிவுகள் சங்கப்பாடல்களில் காணப்படுகின்றன.

“பசித்தன்று அம்ம பெருந்தகை ஊரே”

குடக்கோ இளஞ்சேரல் இரும்பொறையைப் பாடி பெருஞ்செல்வம் பெற்ற சிறப்பிற்குரிய புலவர் பெருங்குன்றூர்கிழார் ஆவார்.ஒருமுறை போரில் ஈடுபட்டு வெற்றி வாகை சூடி வந்த தலைவன் ஒருவனைக் கண்டார் .அவன் தன் வேந்தனுக்காகக் கடும் போர் புரிந்தவன் ஆவான். போரில் வேந்தன் துன்புற்று இறந்து இருந்தால் தலைவனாகிய போர் வீரனின் ஊரும் பசியால் வருந்தும் என்று பொருள்படும்படி புறநானூற்றில் ஒரு பாடலைப் பாடுகின்றார். அதில் உணவிற்காகப் பறித்து வந்த இலை கறிகள் வாடவும்; அவற்றை சமைப்பதற்காகக் கொண்டு வந்த விறகுகள் காய்ந்து உலரவும்; மயில் போன்ற அழகிய சாயலையும் மாயை நிறத்தையும் உடைய மனைவியோடு பெருந்தகுதியுடைய வீரனின் ஊரே பசியால் துன்புற்ற நிலையைக் கூறுகின்றார்.

“கொய் அடகு வாட தருவிறகு உணங்க

மயில் அம் சாயல் மாஅயோளொடு

பசித்தன்று அம்ம பெருந்தகை ஊரே”

(புற:318)

பறித்து வந்த அடகுக்கீரைகள் சமைக்காமல் வாடிவதங்கும் கொண்டு வந்த விறகு உலர்ந்து கெடும் படியாகச் சட்டென போர் வந்துவிட்டது.

ஒரு வேளை தலைவன் சார்ந்திருக்கும் வேந்தன் வெற்றி பெறாமல் போயிருந்தால் ஊரே பசியில் தவித்திருக்கும் என்கிறார். தலைவன் வெற்றி பெற்றதால் அவன் வீட்டுக் குருவிகள் எதிரி நாட்டின் பாணர்கள் வீசி எறிந்த யாழ்களின் நரம்பில் கூடு கட்டித் தம் துணையுடன் சேர்ந்து அரிசியை உண்டு வாழ்ந்தன என்று பாடுகின்றார்.

“தேற்றா ஈகை”

நடுவு நிலைமை தவறாத புலவர்களை நோக்கி அவ்வையார் ஒரு கேள்வி எழுப்புகின்றார். பெரிய பலா மரங்களையுடைய நாஞ்சில் நாட்டு அரசன் நிச்சயம் அறியாமை மிகுந்தவன் தானா? என்கிறார். தன்னுடன் வந்த வளையல் அணிந்த விறலியர், வழியில் கண்ட தோட்டத்தில் பறித்த அடகுக் கீரையைச் சமைக்க நினைத்த பொழுது, அக்கீரையின் மேல் தூவுவதற்காக நாஞ்சில் வள்ளுவனிடம் கொஞ்சம் துவரையும் அரிசியும் கேட்டர்கள். நாஞ்சில் வள்ளுவனோ யானையைப் பரிசாகக் கொடுக்கின்றான். கொடைமடம் என்பது இதுதானோ என்கிறார்.

“தடவுநிலைப் பலவின் நாஞ்சில் பொருநன்

மடவன் மன்ற செந்நாப் புலவீர்!

வளைக்கை விறலியர்

படப்பைக் கொய்த அடகின் கண்ணுறை ஆக

யாம்சில அரிசி வேண்டினெம் ஆகத் தான்பிற

வரிசை அறிதலில் தன்னும் தூக்கி.

இருங்கடறு வளைஇய குன்றத்து அன்னதோர்

பெருங்களிறு நல்கியோனே;

அன்னதோர்' தேற்றா ஈகையும் உளதுகொல்

போற்றார் அம்ம பெரியோர் தம் கடனே?”

(புற:140)

ஒரு முறை, சில விறலியருடன் அவ்வையார் நாஞ்சில் வள்ளுவனைக் காணச் சென்றார். விறலியர் அங்குள்ள கீரையப் பறித்து, சமைக்க ஆரம்பித்தார்கள். அக்கீரைக் கறியின் மேலே தூவுவதற்காகக் சிறிது துவரை அரிசி வேண்டுமென்று நாஞ்சில் வள்ளுவனைக் கேட்டார்கள். அரிசி கேட்ட விறலியருக்கு, நாஞ்சில் வள்ளுவன் ஒரு யானையைப் பரிசாக அளித்தான். அதைக் கண்ட அவ்வையார், "அரிசி கேட்டதற்கு யானையையா கொடுப்பர்கள்?" என்று நாஞ்சில் வள்ளுவனின் கொடைத்தன்மையை வியக்கிறார். என் வறுமையைக் கருதாமல், தன் தகுதியை எண்ணி, பெரிய காடுகள் சூழ்ந்த மலைபோன்ற ஒரு யானையை அளித்தான். இப்படி ஆராயாது அளிக்கும் ஈகையும் உண்டோ? என்று அவ்வையார் வியக்கின்றார்.

"உப்பில்லா குப்பைக்கீரை"

பெருஞ்சித்திரனார் காட்டும் காட்சியில் நம் உள்ளம் உருகுகின்றது. தான் பல ஆண்டுகள் வாழ்ந்தும் இன்னும் தன் உயிர் போகவில்லையே என்று தன் வாழ் நாட்களைப் பலவாறாக வெறுத்து கோலைக் காலாகக் கொண்டு அடிமேல் அடிவைத்து நடப்பவளாய், வெள்ளை நூல் விரித்தது போன்ற முடியுடையவளாய், கண் பார்வை பழுதடைந்ததால் முற்றத்திற்குப் போக முடியாதவளாய் அவர் தாய் இருக்கிறாள்.

ஒளியிழந்த மேனியுடன் வறுமைத் துயரம் வாட்டுவதால் வருந்தி இடுப்பில் பல சிறு குழந்தைகளுடன், குழந்தைகள் பிசைந்து பால் குடித்ததால் வாடிய மார்பகங்களுடன் பெருந்துயர் அடைந்தவளாய் அவர் மனைவி காணப்படுகிறாள்.

குப்பையில் முளைத்த கீரைச் செடியில், முன்பு பறித்த இடத்திலேயே மீண்டும் முளைத்த, முற்றாத இளந்தளிரைக் கொய்து உப்பில்லாத நீரில் வேகவைத்து மோரும் சோறும் இல்லாமல் வெறும் இலையை மட்டுமே உண்டு, அழுக்குப் படிந்த கிழிந்த ஆடையை உடுத்தி, இல்லற வாழ்வைப் பழித்திடாமல் அவரை விரும்பி வாழ்கின்ற மனைவி இருக்கிறாள்.தன் தாயும் தன் மனைவியும் மனம் மகிழ குமணன் பரிசு வழங்க வேண்டும் என்று பாடுகின்றார்.

"குப்பைக் கீரைக் கொய்கண் அகைத்த

முற்றா இளந்தளிர் கொய்துகொண்டு உப்பின்று

நீர்உலை யாக ஏற்றி மோரின்று

அவிழ்ப்பதம் மறந்து பாசடகு மிசைந்து"

(புற:159)

வறுமையின் கொடுமையைக் காட்டும் இப்பாடலில் குப்பைக்கீரை வளரக்கூட விடாமல் மீண்டும் மீண்டும் பறிக்கின்ற செயலைக் காட்டி நம்மை வாட்டுகின்றார்.

"முன்றில் முஞ்ஞை"

சோழன் குராப்பள்ளித் துஞ்சிய பெருந்திருமாவளவனை கோனாட்டு எறிச்சலூர் மாடலன் மதுரைக் குமரனார் பாடும் போது முஞ்ஞைக் கொடியில் கிடைக்கும் கீரை குறித்துப் பாடுகின்றார்.

'"எம்மால் வியக்கப் படூஉ மோரே,

இடுமுள் படப்பை மறிமேய்ந்து ஒழிந்த

குறுநறு முஞ்ஞைக் கொழுங்கண் குற்றடகு,

புன்புல வரகின் சொன்றியொடு,

பெறூஉம், சீறூர் மன்னர் ஆயினும்,

எம்வயின் பாடறிந்து ஒழுகும் பண்பி னோரே;

மிகப்பேர் எவ்வம் உறினும்,

எனைத்தும் உணர்ச்சி யில்லோர் உடைமை யுள்ளேம்;

நல்லறி வுடையோர் நல்குரவு உள்ளுதும்,

பெரும! யாம், உவந்து நனி பெரிதே!"'

(புற:197)

காற்றைப்போல் தாவிச் செல்லும் குதிரை கொடி பறக்கும் தேர் கடல் போல் ஆட்படை; தோற்றத்தால் மலையையும் மலைக்கவைக்கும் களிறு ;இடி போல் முழங்கும் முரசம்;

இவற்றையெல்லாம் கொண்டவராய் போரில் வெற்றி கண்டவர் ஆயினும் மண்ணகமெல்லாம் பரந்து நிற்கும் தானை உடையவர் ஆயினும்; வெற்றியின் அடையாளமாக ஒளிறும் பூண் உடைய வேந்தராயினும்; அவரது வெண்கொற்றக்குடைச் செல்வத்தைக் கண்டு நான் வியக்கமாட்டேன்.

எம்மால் வியக்கப்படுபவர் ஆட்டுக்குட்டி மேய்ந்த பின்னர் வீட்டு முள்வேலியில் துளிர்த்துப் படர்ந்திருக்கும் முஞ்ஞைக் கொடியைச் சமைத்து வரகரிசிச் சோற்றுடன் உண்ணும் சிற்றூர் மன்னர் ஆயினும் என் பெருமையை உணர்ந்து நடந்து கொள்ளும் பண்பாளரே ஆவர். மிகப் பெருந் துன்பத்தில் உழன்றாலும் இரக்க உணர்ச்சி இல்லாதவருடைய செல்வத்தைப் பெறநினைக்கவும் மாட்டேன். நல்லறிவு உடையோர் வறுமையை எண்ணிப் பார்த்துப் பெருடைகொள்வேன் என்று பாடுகின்றார்.

முஞ்ஞைக்கீரை தாளி போன்ற தொட்டியில் வீட்டுச் சமையலுக்கு வளர்க்கப்படும் அதனை வீட்டைச்சுற்றி வளரும் முயல்கள் வந்து கறித்து உண்ணும் என்பதை புறநானூற்று 328 ஆம் பாடல் கூறுகின்றது.

வீட்டு முற்றத்தில் முஞ்ஞை, முசுண்டைக் கொடிகள் பம்பிக் கிடக்கின்ற காட்சியையும் புறநானூறு காட்டுகின்றது. அன்றாடம் சமையலுக்கு இக்கீரைகளைப் பயன்படுத்தியுள்ளனர் என்பதை

"முன்றில் முஞ்ஞையொடு முசுண்டை பம்பி ,

பந்தர் வேண்டாப் பலா தூங்கு நீழல்"

(புற:320)

என்று பாடுகின்றார்.

"ஈத்திலை குப்பை"

செல்வச்செழிப்பில் வாழ்ந்த பாரிமகளிர் குறித்து மனமிரங்கி கபிலர் பாடிய பாடலில் குப்பைக்கீரை பற்றிய குறிப்பு காணப்படுகிறது.

"தீநீர்ப் பெருங்குண்டு சுனைப்பூத்த குவளைக்

கூம்பவிழ் முழுநெறி புரள்வரும் அல்குல்

ஏந்தெழில் மழைக்கண் இன்னகை மகளிர்

புல்மூசு கவலைய முள்மிடை வேலிப்

பஞ்சி முன்றில் சிற்றில் ஆங்கண்

பீரை நாறிய சுரைஇவர் மருங்கின்

ஈத்திலைக் குப்பை ஏறி உமணர்

உப்புஓய் ஒழுகை எண்ணுப மாதோ!"

(புற:116)

பாரிமகளிர் இருக்கும் சிறிய வீடு பல தெருக்கள் கூடுமிடத்தில் புல் முளைத்த பாதைகளுடையதாகவும், முற்றத்தில் பஞ்சு பரந்தும் முள் செறிந்த வேலியால் அடைக்கப் பட்டதாகவும் உள்ளது.

அங்கே பீர்க்கங்காய்களும் சுரைக்காய்களும் கொடிகளில் முளைத்திருக்கின்றன. அவற்றிற்குப் பக்கத்தில் ஈச்ச மரத்தின் இலைகள் நிறைந்த குப்பை மேடுகளில் ஏறிப் பாரி மகளிர் அவ்வழியே வரிசையாகச் செல்லும் உப்பு வண்டிகளை எண்ணுகிறார்கள். முன்பு அவர்களின் தந்தையைக் காணவரும் மன்னர்களின் குதிரைகளை எண்ணி விளையாடியவர்களின் நிலை இன்று இப்படியானதே என்று கபிலர் வருந்திப் பாடுகின்றார்.

"குப்பை வேளை உப்பிலி"

எளியவர்களும் வறியவர்களும் உண்ணும் உணவில் முதன்மை பெற்றதாக வேளைக்கீரை இருந்துள்ளது. அதே நேரத்தில் விலையின்றிக் கிடைக்கும் இக்கீரையை உண்பதைப் பிறர் காண்பது இதனைச் சிறுபாணாற்றுப் படை காட்டுகின்றது.

"காழ் சோர் முது சுவர்க் கணச் சிதல் அரித்த

பூழி பூத்த புழல் காளாம்பி,

ஒல்கு பசி உழந்த ஒடுங்கு நுண் மருங்குல்,

வளைக் கை கிணைமகள், வள் உகிர்க் குறைத்த

குப்பை வேளை உப்பிலி வெந்ததை,

மடவோர் காட்சி நாணிக் கடை அடைத்து,

இரும்பேர் ஒக்கலொடு ஒருங்கு உடன் மிசையும்,

அழி பசி வருத்தம் வீட"

(புற:133-140)

கூரையின் கைம்மரம் தளர்ந்து விழும் பழைய சுவரில் கறையான் கூட்டம் அரித்த புழுதியில் உள் துளையுடைய காளான் பூத்திருக்கும். வருந்துவதற்குக் காரணமான பசியால் ஒடுங்கிய மெலிந்த இடையையும், வளையல் அணிந்த கையையும் உடைய கிணைப் பறையை அடிப்பவனின் மகள் பசியுடன் வருந்துவான்.. அவள் தனது பெரிய நகத்தால் குப்பையில் முளைத்த வேளைக் கீரைகளைக் கிள்ளி எடுத்து வந்தாள். உணவு உண்ணாமல் பசியோடு வாடிக்கிடக்கும் தன் சுற்றத்தினருக்கு அதனை வேக வைக்க உப்பும் இல்லாமல் அப்படியே சமைத்தாள். அவ்வாறு வெந்ததை உண்பதைக் கண்டு பழித்துப் பேசுவோர் புறங்கூறுதலைக் காணுதற்கு நாணி, தலை வாயிலை அடைத்து விட்டுத் தனது பெரிய சுற்றத்துடன் ஒன்றாக இணைந்து இருந்து உண்பாள். அவர்களை அழிக்கின்ற பசியின் வருத்தங்கள் கெடுமாறு நல்லியக்கோடன் நல் உணவுகளைத் தந்து உதவினான்.

பதிற்றுப்பத்தும் வேளைக்கீரை பற்றிய குறிப்பைத் தருகின்றது. பூளைச்செடி வளர்ந்துள்ள இடத்திலும் சுரைக்கொடி படர்ந்துள்ள தரிசு நிலங்களிலும் வேளைக்கீரை வளரும் என்பதை

"தொல்கவின் அழிந்த கண் அகன் வைப்பில்

வெண் பூ வேளையொடு பைம் சுரை கலித்து"

- (பதி 15/9)

"வெண் பூ வேளையொடு சுரை தலைமயக்கிய"

- (பதி 90/29)

என்று உரைக்கின்றது. ஆளில்லா காட்டிலும் தெருவோரங்களிலும் முளைக்கும்.

"புளி பெய்து அட்ட வேளைக்கீரை"

பாண்டிய நாட்டின் வட எல்லையாகிய ஒல்லையூர் நாட்டை சோழ வேந்தர் கைப்பற்றிக் கொண்டனர் .இதனால் பாண்டியர்களுக்கு ஏற்பட்ட மானக் குறைவை நீக்க சோழனோடு போரிட்டு வென்ற பெருமையுடையவன் பூதப்பாண்டியன். இதனால் ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன் என்றும் போற்றப்படுகின்றான் . பூதப்பாண்டியன் சிறப்பாக ஆட்சி நடத்தி வந்தான். அவன் இறந்த போது அவன் மனைவி பெருங்கோப்பெண்டு தீ பாய்ந்து உயிர் துறக்க எண்ணுகிறாள். அரசியல் துறையில் அறிவு மிகுந்த பெருங்கோப்பெண்டு ஆட்சிக் கட்டிலில் அமர்ந்து அரசு நடத்த வேண்டும் என்று அரசியல் சுற்றத்தினர் வேண்டினர். ஆனால் பெருங்கோப்பெண்டு அரசியாக வீற்றிருந்து ஆட்சி நடத்தினாலும் கணவனைப் பிரிந்த கைம்மை நோன்பை நோற்றே வாழ வேண்டி வரும் என்பதனால் தீப்பாய்ந்து உயிர்விடவே துணிகின்றாள். அப்போது அவள் வற்றாத கண்ணீருடன் கையறு நிலையாகப் பாடிய பாடல் புறநானூற்றில் காணக் கிடைக்கின்றது.

அப்பாடல் கைம்மை நோன்பை நோற்கும் விரத கால உணவில் வேளைக்கீரையை முதன்மையாக குறிப்பிடுகின்றாள்.அணிலின் முதுகில் உள்ள கோடுகளை போல உள்ள கோடுகள் உள்ள வெள்ளரிக்காயின் விதையைப் போல உள்ள சோற்றுத் திறளில் மென்மையும் நறுமணமும் மிகுந்த நெய் இடப்படவில்லை. புளியுடன் சேர்த்து சமைக்கப்பட்ட வேளைக்கீரையும் வெள்ளை எள்ளால் செய்த துவையலும் அச்சோற்றுடன் உணவாக கைம்மை நோன்பு நோற்கும் மகளிர் உட்கொள்வர்.

"அணில் வரி கொடுங்காய் வாள் போழ்ந்திட்ட

காழ் போல் நல்விளர் நறு நெய் தீண்டாது

அடை இடைக் கிடந்த கை பிழி பண்டம்

வெள் எள் சாந்தோடு புளி பெய்து அட்ட

வேளை வெந்தை வல்சி ஆக "

-(புற:246)

இதனால் ஐம்புலன்களை பக்குவமாக்கும் பத்திய உணவாக இப்பாடலில் வேளைக் கீரை அறியப்படுகிறது. வேளைக்கீரையை புளியின்றி சமைக்க இயலாது என்ற சமையற்குறிப்பையும் பெற முடிகிறது. அதன் கசப்புச்சுவை பல்வேறு நோய்க்கு மருந்தாக இருந்துள்ளது.

"நிறைவுரை"

உடலில் நோய் பற்றுவதற்கு மூல காரணங்களாக அமைவது உணவு முறைகள் தான் .தன் உடல்நிலைக்கேற்ற உணவு வகைகளை தேர்ந்தெடுத்து உட்கொண்டு வந்தால் எக்காலத்திலும் நோய் பற்றாது .உடலில் போதிய சத்துக்கள் இல்லாவிட்டால் பலவிதமான நோய்கள் வருவதற்கு வாய்ப்பாகி விடுகிறது. ஆகையினால் சத்துக்கள் அடங்கிய உணவு வகைகளை வரையறுத்து உண்ண வேண்டும். கீரையை நாம் உணவில் அடிக்கடி சேர்த்துக் கொள்வதின் மூலம் உடல் நலத்தைப் பல வகைகளில் பேணிப் பாதுகாக்கலாம். அன்றாடம் பகல் உணவின்போது ஏதாவது ஒரு கீரையைப் பயன்படுத்திக் கொண்டால் உடல் நலத்துடன் வாழலாம். கீரையைச் சமைக்கும்போது முதலில் புல் பூண்டு இல்லாமல் தூய்மையாக்கிக் கொண்டு பின்னர் கழுவி நறுக்கி சமைக்க வேண்டும். நறுக்கிய பின்னர் கீரையைச் கழுவினால் அதில் உள்ள உயிர் சத்துக்கள் தண்ணீரோடு சேர்ந்து போய்விடும். இரும்புச்சத்து ஆணை விட பெண்ணுக்கு அதிகம் தேவை. தாய்மைஅடைந்த பாலூட்டும் பெண்ணுக்குச் கூடுதலாக தேவைப்படும். மாதாவிடாயில் அதிக ரத்தப்போக்கு உள்ள இளம் பெண்ணுக்கும் இன்னும் அதிகம் இரும்புச்சத்து தேவை. இரும்புச் சத்து குறைந்திருப்பின் எந்த நோயும் இன்னும் அதிகமாக துன்புறுத்தும்.

உணவு உயிர் வாழ்வதற்கான ஒரு பொருள் என்ற நிலையில் அது சமூகத் தேவை சார்ந்ததாகிறது. ஆனால் உணவின் மேல் ஏற்படும் விழுமியங்கள் பண்பாடு சார்ந்து அமைகின்றன. எனவே இறைவன் அளித்த வரமாகிய எளிய கீரைகளை உணவில் சேர்த்து வளமாய் வாழ்வோம்.

"துணைநூற் பட்டியல்"

1. **மருந்தென வேண்டாவாம்,**
மருத்துவர் கு. சிவராமன்,
விகடன் பிரசுரம்,
டிச.2016,
சென்னை.

2. **உணவு நூல்,**
மயிலை சீனி வேங்கடசாமி,
தடாகம்,
டிச.2014,
சென்னை.

3. **புறநானூறு,**
பாகம் 1&2,
ஔவை துரைசாமிப்பிள்ளை,
பூம்புகார் வெளியீடு,
மார்ச் 2010,
சென்னை.

4. **செம்மொழி இலக்கியங்கள்,**
மா. பசுபதி (ப.ஆ),
தஞ்சைப்பல்கலைக்கழகம்,
டிச.2010.



பிடிமண்



பிரியதர்ஷினி D.TEd

நாட்டார் வழக்காற்றியல் ஆர்வலர்

எங்கு வேண்டுமானாலும் எப்போது வேண்டுமானாலும் எளிதில் போய்விட முடிகிறது நம்மால். ஒரு நூற்றாண்டு முன்பு வரை அப்படி அல்ல. தொலைதூரம் சென்று மீளாதவர்கள் ஏராளம். மீளாதோருடைய இல்லங்கள் ஏராளம், குடும்பங்கள் ஏராளம். எல்லைகள் கடந்து எங்கெங்கோ நம் இனம் பரவி இருப்பதில் மீளாதோரின் பங்கு ஏராளம்.

கல்வி பொருட்டோ பணி பொருட்டோ ஆன்மீகம் பொருட்டோ ஆக்கிரமிப்பு, தாக்குதல், போர் பொருட்டோ புலம்பெயரும் மக்களில் பெரும்பான்மையினர் திரும்பியதே இல்லை.

எனவே நிலம் நீங்குவோர் தமது மண்ணை ஒரு கைப்பிடி அளவு அள்ளி சிறு துணியில் இட்டு முடிச்சிட்டு கொண்டு செல்வர்.

இதில் இரண்டு வகை உள்ளன. ஒன்று நாம் மண்ணைக் காப்பது மற்றது மண் நம்மைக் காப்பது.

புவி இப்பேரண்டத்தின் ஒரு துகில் போல மணல் இப்பெரும் பூமியின் ஒரு துகள். பருஉடலின் அத்தனை அம்சங்களும் கொண்ட அதன் ஒரு செல் போல பூமியில் ஒரு மணல். ஏனைய ஏழு கிரகங்களில் இல்லாத உயிர் தன்மை கொண்ட ஒரு தனித்துவ கிரகத்தின் ஒரு துகள்.

அனாதி காலத்தில் இருந்து இங்கு மண் தான் முதல் சாமி. அதுதான் ஒருமழைக்கே தன்னைப் புதுப்பித்துக் கொண்டு உயிர்ப்பிக்கச் செய்கிறது.

முடிச்சிட்டு வைத்திருக்கும் அப்பிடிமண் அதன் திசையை நினைவூட்டிக் கொண்டே இருக்கும். திரும்ப வேண்டிய பாதையை நேரத்தை திசையை நிலப்பகுதியை பிடிமண் நினைவூட்டி கொண்டே இருக்கும். இன்றும் என்பது, தொண்ணூறு வயதுடைய பெரியவர்கள் வசிக்கின்ற வீடுகளில் வெளியூருக்கு கிளம்பும் குடும்பத்தினரிடம் பிடிமண் கொடுத்து அனுப்புவார்கள். நாம்தான் அதன் பின்னிருக்கும் சூக்குமம் புரியாமல் அவர்களை மதியாது நடந்து கொள்கிறோம். குழந்தைகள் காரணம் தெரியாமல் அழும்போது முச்சந்தி மண்ணெடுத்து சுத்திப் போடும் வழக்கம் நாம் அறிந்தது தான்.

மண் வெறும் நினைவூட்டல் மட்டுமல்ல ஆற்றல் மிக்கதும் கூட. அதன் ஆற்றல் உணர இரண்டு கைகளையும் மணிக்கட்டு அளவு மண்ணுக்குள் புதைத்து கால்/அரை மணி நேரம் அதனை கூர்ந்து இருங்கள். அதன் ஆற்றல் உணர கடவீர்கள். வீட்டில் எங்கேயும் முடிச்சுட்டு முன்னவர்கள் வைத்திருக்கும் படி மண்ணை காப்பது எவ்வளவு முதன்மை என்றும் உணர்வீர்கள். வழிநடத்திய முன்னவர்கள் தானே முந்நாளில் தெய்வங்கள். உயிர் விட்ட பின்னர் முன்னோர்களின் உடல் புதைத்த மண்ணை அந்த உடலையும் அதன் ஆற்றலையும் பெற்றுக் கொண்ட மண்ணாக கருதி அதனை வணங்கினர். அம்மண்ணைத் தொட்டு நெற்றியில் இட்டுக் கொண்டனர்.

புலம்பெயரும் சூழல் எழும் போது நடுக்கல் நட்டு தொழுது வருகின்ற முன்னோரின் உடல் கொண்ட மண்ணை கைப்பிடி அளவு அள்ளி எடுத்து பத்திரமாக முடித்துக் கொண்டு செல்வார்கள். அந்தப்பிடி மண்ணை அவராக எண்ணி வணங்குவார்கள். மண்ணுக்கு தான் அதிர்வையும் ஆற்றலையும் ஏற்றுக்கொண்டு உயிர் செய்யும் தன்மை உள்ளது அல்லவா? அதனால் தானே நம் முன்னவர்கள் நல்லவர்களின் காலடி மண்ணைத் தொட்டு நெற்றியில் இட்டுக் கொண்டார்கள்.

பிடிமண்ணை பருத்தித் துணியில் முடிச்சிட்டோ கலையங்களில் இட்டுக்கொண்டோ புலம்பெயர்ந்த அவர்கள் இருப்பிடம் அமைக்கும் இடங்களில் மண்ணை வைத்தும் கலையம் வைத்தும் நடுகல் நட்டு அதனை கோயிலாக்கிக் கொண்டார்கள். தன் புலம் தன் அருகிலேயே இருப்பதை உறுதி செய்து கொண்டார்கள். தம் முன்னோர் மண் வடிவில் தம்மைக் காப்பதை உறுதியாக நம்பினார்கள். இன்றும் குலதெய்வக் கோயில்கள் புதிதாக கட்டப்படும் போது பழைய இடத்தில் இருந்து பிடிமண் எடுத்து வந்தே கட்டுகிறார்கள்.

சாலை விரிவாக்கம், பாலம் அமைத்தல், அணை கட்டுதல், சுரங்கம் அமைத்தல் போன்ற காரணங்களுக்காக நிலம் எடுக்கப்படும் போது எத்தனை கோயில்கள் வீடுகளோடும் மக்களோடும் சேர்த்து அகற்றப்படுகின்றன?

கோயில் இழப்புகளை பிடிமண் ஈடு செய்து விடும். அந்தரத்தில் சுழலும் உயிர்மிக்கக் கோள் ஒன்றின் ஒரு பகுதி அது.



முனைவர் இரா.மணிமேகலை
இணைப்பேராசிரியர் தமிழ்த்துறை
கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி
கோயம்புத்தூர் - 29

முகவுரை:

காவிரியின் நீர்வளத்தால் திருமேனி செழித்த நாடுகளில் முதன்மையானது தமிழ்நாடு. கோள்கள் நிலை திரிந்து தீமை புரிந்தாலும் தான் நிலை திரியாமல் தமிழ்நாட்டிற்கு நன்மை தரும் **"தண்டமிழ் தமிழ்ப்பாவை"** என்று காவிரியை **"சீத்தலை சாத்தனார்"** போற்றுகின்றார். "வானமே பொய்த்துப் போய் மக்கள் வாழ்விழந்து வாடும் போது தான் மட்டும் பொய்த்து விடாமல் மலையிறங்கி வந்து நம் மனம் குளிர்விக்கும் பேரருள் படைத்தவள்" என்று பழந்தமிழ் இலக்கியமாகியப் **பட்டினப்பாலை** கூறும்.



ஆடி வரும் காவேரி

காவிரி என்பதன் மறு பெயர் என்னவென்று கேட்டால் **'தப்பாத கருணை'** என்று மாபாரதம் சுட்டும். அவள் நடந்துவரும் பேரழகின் ஒயிலில் மனம் பறி கொடுத்த **பெரும்புலவன் இளங்கோவடிகள்** நதிக்கரை வரலாறாக காவிரியின் கவிதையாகவே காப்பியத்தைப் பாடுகின்றார்.

"மருங்குவண்டு சிறந்தார்ப்ப மணிப்பூ ஆடை அதுபோர்த்துக்

கருங்கயற்கண் விழித்தொல்கி நடந்தாய்வாழி காவேரி

கருங்கயற்கண் விழித்தொல்கி நடந்தவெல்லாம் நின்கணவன்

திருந்துசெங்கோல் வளையாமை அறிந்தேன்வாழி காவேரி."

காவிரிப் பெண்ணே! அழகிய இரு கரைகளும் உன் கைகள், கரம் வீசி நடந்து வருகிறாயே... உன் கை வளையல் ஒலிப்பதுபோல வண்டுகளின் சேர்ந்திசைப் பாடல்.

கரையெங்கும் உள்ள மரங்களின் பூக்களை ஏந்திப் பின்னலிட்ட பூவாடை அணிந்து ஆடி வருகிறாய்.உன்னிலே கயல்மீன்கள் துள்ளித் திரிகின்றன. கயலாகிய கண்ணால் விழியசைத்து அன்புடன் எங்களைப் பார்க்கிறாயே.... எப்படி இவையெல்லாம் நடக்கின்றன? உன் கணவன் சோழனின் வளையாத செங்கோலாட்சியால் அல்லவா? என்பதை நான் அறிவேன்.

இந்த நாடும் அறியும்.

நடந்தாய் வாழி காவேரி நீ வாழ்க !நீ வாழ்க !

காவிரியைப் பெண்ணாய் பாவித்து சிலேடையாக இப்பாடலை அழகு சொட்ட வடித்திருக்கின்றார். தாயாய் நின்று நீ புரியும் பேருதவிக்கு இந்த ஊழி அழிந்தாலும் நன்றியோடு இருப்போம் என்று அப்பெருங்கவி கைமாறு இல்லாத காவிரியின் உதவியைப் பாடுகின்றான்.

இந்த நதியின் பயணத்தில் தான் சந்தித்த காதலையும் காதலர்களையும் பற்றிச் சொல்வதற்கு மாபெரும் யுகக் கவிஞர்கள் பிறந்தாலும் போதாது. வரலாற்றின் வழித்தடத்தில் சில நேரம் வழிப்போக்கராய் உலவினாலும் காவிரியின் பாடல்கள் தீராது. எண்ணற்ற கதைமாந்தர்களைக் கண்ட காவிரியின் மடியில் பிறந்து வளர்ந்த சிற்சில காதலர்களைக் காண்போம் வாருங்கள்.

நதியளித்த நினைவலைகள்:

மேற்குத் தொடர்ச்சி மலை குடகில் ஊற்றெடுத்த காவிரியாள் தன் பாதம் பதித்த இடமெல்லாம் பூமணத்துடன் பாமணக்கும் தமிழ் வளம் தந்தவள். நீரின்றி அமையாத இவ்வுலகத்தில் நீயின்றி இங்கு எதுவும் அமையாது என்று தமிழ்நாட்டின் வரமாய் வந்தவள் காவிரியாறு. அவளது மணற் கரையெங்கும் மனித வாழ்வு கடந்து வந்த சுவடுகள். பண்பாட்டுத்தொட்டிலை அசைத்து மனித நாகரித்தை வளர்த்தெடுத்த அன்னையின் வற்றாத ஜீவ ஊற்று.

நதியலையில் நடைபயின்ற காதலின் வரியலை இது. அலைகளின் பாடலாய் ஒலித்த கலையின் தேடல் இது. இயற்கையே பிரித்தாலும் இதயத்தால் இணைந்திருக்கும் பேரன்பின் கவிதை இது. பகை முரண்களுக்கிடையே பூத்து விட்ட ஆபூர்வ மலர் இது. நதியின் பாதையெங்கும் தான் தொலைத்து விட்ட காதலைத் தேடியலைந்த ஒருத்தியின் பயணம் தான் இந்த வரலாற்றுக் கதை.

ஆதிமந்தி ஆட்டனத்தி:

ஆதிமந்தி சங்க காலத்தைச் சேர்ந்த பெண் புலவர்களில் ஒருத்தி. இவளது பாடல் குறுந்தொகையில் இடம் பெறுகின்றது. கரிகாற்பெருவளத்தான் என்ற சோழ அரசனின் மகள் இவள்.

ஆம்! காவிரிக்குக் கரையமைத்துப் பொன்னி வளநாடு என்ற பெருமையைச் சோழநாட்டுக்கு ஈட்டித் தந்த கரிகாலனின் மகள்தான் இளவரசி ஆதிமந்தி. ஆடல் கலையிலும் பாடும் துறையிலும் ஈடு இணை இல்லாதவள். அன்பு கனிந்த பெண்மை குடிகொண்ட அழகிய தமிழ் மகள் அவள். முத்தமிழ்

வித்தகியாய் ஏழிசை வல்லபியாய் விளங்கும் இளவரசி ஆதிமந்தியின் தாயார் வேண்மாள் ஆவாள்.

ஆட்டனத்தி என்பவன் சேர நாட்டு இளவரசன். அவனது தந்தை சேரலாதன். ஆட்டனத்தியின் இயற்பெயர் அத்தி என்பதாகும். ஆட்டன் என்பது அவனது தனித்திறனால் அவனுக்குக் கிடைத்த சிறப்புப் பட்டமாகும்.. ஆடற்கலையில் சிறந்து விளங்குவதுடன் புனல்நடனம் எனப்படும் அரிதாகிய கலையாகிய நீச்சல் நடனத்தை (Synchronized Swimming) ஆடக்கூடிய மிகச்சிலரில் ஒருவன் அவன். தனது கலைத் திறமையால் எவர் மனமும் கவர்ந்திழுக்கும் பண்புடையவன்.

கரிகாலன் உறையூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரியும் போது அவனைச் சிறுவனாக் கருதிப் பாண்டியனும் சேரனும் பகைத்து முரண்பட்டனர். வெண்ணி என்னும் இடத்தில் அவர்களிடையே போர் மூண்டது. அதில் கரிகாலன் அவர்களைப் புறமுதுகிட்டு ஓடவைத்தான். அவனை எதிர்த்து நின்ற பெருஞ்சேரலாதன் வெண்ணிப்போரில் தோல்வியடைந்தமைக்காக மட்டுமல்லாமல் மார்பிலே காயம் படாமல் முதுகில் புறப்புண் பெற்றதற்காக நாணமடைகின்றான். இதனால் அவன் வடக்கிருந்து உயிர் துறக்கின்றான். போரில் வெற்றி பெற்றவனைக்காட்டிலும் அப்போரிலே பெற்ற புறப்புண்ணுக்கு வெட்கப்பட்டு வடக்கிருந்த சேரனது புகழ் ஓங்கி ஒலிக்கிறது சங்கப்பாடல்களில். "நின்னிலும் நல்ல என்றே" என்று கரிகாலனோடு சேரனை ஒப்பிட்டுப் பாடுகிறார் வெண்ணி குயத்தியார் என்ற பெண் கவிஞர்.இவையெல்லாம் வரலாற்றில் நிகழும் இனிய நகைமுரண்கள். சரி.. இரு பெரும் பகையரசர்களின் மக்களாகியஆதிமந்தியும் ஆட்டனத்தியும் சந்தித்தார்களா?

உறவும் பகையும்:

புறப்புண் நாணி வடக்கிருந்து உயிர் துறந்த சேரன் பெருஞ்சேரலாதனின் மகன் ஆட்டன் அத்தி. போரிலே சேரனை வென்ற புகழ் மிக்க சோழ அரசன் கரிகாலனின் மகள் ஆதிமந்தி. போரின் காரணமாக நீரில் உறங்கியிருக்கும் நெருப்புப் போல நெடுங்காலமாய் பகை பூத்து நிற்கும் இரு வேறு அரசுகளின் வாரிசுகள் இவர்கள். காதலர்கள் இருவரின் தந்தைகளும் நேருக்கு நேர் எதிரிகள்.

ஆயினும் கலையும் காதலும் எப்போதும் போல எல்லாத் திசைகளையும் உடைத்து நொறுக்கி உள் நுழைந்து விடுகிறது. எவ்வளவு தான் காலம் இருண்டிருந்திருந்தாலும் இதயத்தையே அகலாக்கி தூய அன்பினையே தீபமாக ஏந்தும் போது பகைமை எல்லாம் விலகுமல்லவா? ஒரு காலத்தில் ஆராதனைக்குரிய புனிதங்கள் மற்றொரு காலத்தில் தேவையற்றவையாக ஆகிப்போகின்ற வாழ்வியலில் காதல் மட்டும் அமரத்துவமாய் அப்படியே இருந்து விடுமா என்ன? என்ற வினாவும் எழலாம். ஆனால் காலத்தின் விளையாட்டைக் காவிரியல்லவா கதையாக எழுதத் தொடங்குகிறாள்.

"ஆயிரம் கோடி மனித மனங்களில்

ஆசை அழிகிறது

அது தான் கவிஞன் நெஞ்சில் புகுந்து

கவிதை பொழிகிறது

பாயும் கண்ணீர் நதிகளில் வாழ்க்கைப்

படகுகள் தெரிகிறது

பகலும் இரவும் அது தான் எனக்குப்

பாடலைத் தருகிறது"

என்று ஒரு புதுக்கவிஞன் எழுதியது போல தீராநதியாய் பொங்கிப் பிராவகிக்கின்றாள் காவிரி.

கழார் துறைமுகம்:

கரிகாற்சோழன் புதுப்புனலாட்டு விழாவை கழார் என்னும் துறைமுகத்தில் நடத்துவான். கழார் முன் துறை எனப்படும் காவிரிக்கரையின் துறை தான் இப்போது கழுதக்காரன் துறை என்று திரிந்து வழங்கப்படுவதாக சதாசிவப் பண்டாரத்தார் குறிப்பிடுகின்றார். புனலாட்டு விழா அல்லது நீராட்டு விழாவைச் சிறப்புடன் நடத்திக் கொள்ளவே இத்துறை சோழன் காலத்தில் பயன்பட்டுள்ளது.இன்றைய காலத்தின் ஆடிப்பெருக்கு விழாவே பழங்காலத்தில் புதுப்புனலாட்டு விழாவாகும்.

நாகப்பட்டினம் மாவட்டம் பூம்புகாரின் ஊருக்குள் நுழைகின்ற போது தாண்ட வேண்டிய காவிரியின் கடைசி கடை மடைப் பகுதி.#கழார் முன் துறை என்று சங்க நூல்கள் பகரும்.

நிலத்தின் பிற பகுதியில் இருந்து கழன்று கடலுடன் கலக்கும் ஆற்றின் பகுதியாகும். ஈராயிரம் ஆண்டுகட்கு முன் பூம்புகாரின் நுழைவாயில் இது. இப்பகுதியைப் புனித நீராட்டுக்குரிய கட்டப் பகுதியாக சிலப்பதிகாரமும் புறநானூறும் கூறுகின்றன.

கழார்த்துறையில் ஆட்டனத்தி புனலாடினான். அப்போது அவன் தன் ஆற்றலை வெளிப்படுத்தி பல சாகசங்களைச் செய்து காட்டினான். அவற்றை அரசன் கரிகாலன் கண்டு களித்தான். ஆட்டனத்திக்கும், காவிரி என்பாளுக்கும் இடையில் நடந்த நீச்சல்நடனப் போட்டிக்கு நடுவராகவும் விளங்கினான்

இடம் மாறும் இதயங்கள்:

கழார் துறைமுகத்தில் தான் தனது நாட்டியத்தை நிகழ்த்திக் காட்டுகின்றான் அத்தி. ஆதிமந்தியின் கலையுள்ளம் அவனை விரும்புகின்றது.

ஆடற்கலையில் வல்லவனாகிய அத்தி தனது திறமையைக் கரிகாற் சோழன் அவைக்களத்திலே நடித்துக்காட்டிய போதே இருவர் உள்ளமும் இடம் மாறியிருந்தது. அகம் உணரும் அன்பினைப் பரிமாறத் தொடங்கியிருந்தது. அத்தியின் அற்புத நடனம் கண்ட சோழன் "ஆட்டன்" என்ற சிறப்புப் பட்டத்தை வழங்கி பெருமைப்படுத்துகின்றான். அத்தியோ... தனது திறமைக்குப் பரிசாக சோழ இளவரசி ஆதிமந்தியை மணம் முடித்துத் தருமாறு அரசனிடம் விண்ணப்பம் செய்கின்றான்.

சோழனும் பழையை பகைமை பாராட்டாமல் சாலப் பரிந்து கருத்து ஒருமித்த காதலர்களை இணைத்து வைத்துத் திருமணம் முடித்து வைக்கின்றான். மலையருவிகள் ஆர்ப்பரிக்கும் சேரநாட்டு அன்பு காட்டாற்று வெள்ளமாய் கட்டுக்கடங்காமல் பாயும் சோழ நாட்டுக் காவிரியுடன் கலக்கின்றது. ஆட்டனத்தியும் ஆதிமந்தியும் இல்லறத்தை இனிதே தொடங்குகின்றனர். அவர்களோடு அவர்களின் கலையும் விட்டு விலகாமல் தொட்டுத்தொடர்கின்றது.

வான மழை நீ எனக்கு! வண்ண மயில் நானுனக்கு!

காவிரி ஓடிக் கொண்டிருக்கிறாள்.

மணமக்கள் தலைநோன்பி:

பொங்கி வரும் புதுவெள்ளம் மழலை ஓட்டமாகக் காவிரியில் கரைபுரள்கிறது. சின்னஞ்சிறு கிளியாய் அவளைக் கொஞ்சியழைத்துக் கொண்டிருக்கின்றனர். அப்போது காலத்தின் பேரேட்டைக் கடவுள் படித்துக் கொண்டிருக்கிறார்.

அத்தியின் ஆடற்கலைக்கு மகிழ்ந்து தன் மகள் ஆதிமந்தியை மணமுடித்து வைத்த சோழனின் மனம் மகளைக் காண விரும்புகின்றது. சிவபிரானின் ஆடலுக்கு மனமுருகி தன் மகள் மலைவளர் காதலியாகிய பார்வதியைப் பெண் கொடுத்து மணமுடித்து வைத்த மலையரசனைப் போலவே கரிகாலனின் உள்ளமும் இருந்தது. தன் மகளையும் மருகனையும் ஆடிப்பெருக்கு நீர் விழாவுக்கு அழைக்க முடிவு செய்கிறான் சோழன். சேரநாட்டிலிருக்கும் புதுமணமக்கள் வாக்காலும் மனதாலும் செயலாலும் ஒருவரை ஒருவர் விரும்பி ஒருமையுடன் வாழ்ந்து வருகின்றனர். சோழனின் அழைப்பிற்கிணங்கி தலைமக்கள் இருவரும் காவிரிப்பூம்பட்டினம் வருகின்றனர். திருமணத்திற்குப் பிறகு வருகின்ற முதல் விழா எனப்படும் தலை நோன்பியாக அது அவர்களுக்கு அமைகின்றது.

கலையுள்ளத்தால் இணைந்த காதலர்களாகிய அவர்கள் இருவரும் அன்றை நாளிலும் மக்கள் மன்றத்தின் முன்னிலையில் ஆடலும் பாடலும் நிகழ்த்துகின்றனர். அத்தியின் ஆடலுக்கு ஆதிமந்தியின் பாடல் சொல்லுக்குப் பொருளாகி நின்றது. மங்கை மணாளனான சிவபிரான் வாக்கையே நோக்கியிருந்த சிவகாமியாக அவள் பாடினாள். அந்த நடன மேடை பரமனின் படைப்பாக இருந்தது. பார்த்தவர்களின் மன

மேடையில் கவிமலர்களைக் கண் விழிக்க வைத்த களி நடனமாக இருந்தது.

இந்த வேளையில் நடனம் நிறைவு பெற்று மக்களின் மகிழ்ச்சி ஆராவாரம் எங்கும் முழங்குகிறது. கலைவேந்தர்களை வஞ்சி நாட்டு மக்களும் சோழநாட்டு மக்களும் போற்றுகின்றனர். காவிரியில் வெள்ளம் புதிய கொந்தளிப்புடன் புறப்படுகிறது.

அலையில் மறைந்த ஆட்டனத்தி:

அடுத்தாக அத்திதன் தனித்திறமையாகிய நீச்சல் நடனத்தை நிகழ்த்திக் காட்டுவதற்குக் கழார் துறைமுகம் செல்கிறான். ஆதிமந்தியும் உடன் செல்கிறாள். காவிரி மிகக் கொந்தளிப்புடன் இருப்பதைக் கண்டு ஆதிமந்தி அச்சம்கொள்கிறாள். அமைதியான நதியினிலே ஆடல் நிகழ்த்துவதில் பெருமை என்ன இருக்கிறது? ஆர்ப்பரிக்கும் ஆற்றிலே ஆடுகிறேன் பார் என்றான் ஆட்டனத்தி. அவனைத் தட்ட முடியாமல் தடுக்க இயலாமல் தாய் காவேரி தயை புரியவேண்டுமென்று மனதிலே பாராயணம் தொடங்குகிறாள் ஆதிமந்தி. ஆட்டனத்தி அவளை மாளாத காதலுடன் ஆழமாய் ஒற்றைப் பார்வை பார்க்கின்றான். பிறகு தன் ஆடலுக்குப் பாடலொன்று பாடுமாறு அவளிடம் கேட்டு விட்டு காவிரியில் சாடிக்குதிக்கின்றான். வெள்ளத்தில் பாய்ந்த அத்தி வித்தைகள் பலவற்றை நீரிலே நிகழ்த்திக் காட்டுகிறான். கரையிலேஆதிமந்தியின் பாடல் ஒலித்துக்கொண்டிருக்கிறது. இதுவரை யாரும் காணாத ஆனந்த அலை எங்கும் வீசுகிறது. இருவரின் இணைப் பொருத்தத்தையும் எல்லோரும் பாராட்டி "ஆதலினால் காதல் செய்வீர் உலகத்தீரே" என்று போற்றுகின்றனர்.

எங்கும் மகிழ்ச்சியாக எல்லோரும் கலை மதுவால் பித்தாகி களிப்புண்டு மயங்கிய நேரம். காவிரியில்கரை மீறிய வெள்ளம் பாய்ந்தோடுகிறது. திடீரென்ற வெள்ளப் பெருக்கில் நீர் விளையாட்டு ஆடிய அத்தியைக் காணவில்லை. மூச்சைப் பிடித்து உள்நீச்சல் ஆடி வெளிவருவரோ என்று மக்களும் ஆதிமந்தியும் காத்திருக்கின்றார்கள். காலம் விரைகிறது காரியம் கைமீறிப் போய் விட்டது என்பது புரிகிறது. அத்தியை தேடும் ஓலங்கள் ஓங்காரமிடுகின்றன.

"ஐயோ...என் ஆட்டனத்தி...

அம்மா காவிரித்தாயே....

என் கணவனை என்ன செய்தாய்?"

சித்தம்கலங்கி மூர்ச்சையடைந்து காவிரி மணலில் விழுகிறாள் ஆதிமந்தி,

"காவியப் பறவைகள் தங்களது கற்பனைச் சிறகுகளை விரித்து மேக ஊஞ்சலில் உலா வருகின்ற காலம்."

காவிரி ஓடிக்கொண்டிருக்கிறாள்.

ஒரு கணத்தில் உலகமே சூனியமாகி விட்டது ஆதிமந்திக்கு. மயங்கிக் கிடந்தவள் கண் விழித்து எழுந்தவுடன் அனலில் பட்ட புழுவைப் போல அலறித்துடிக்கின்றாள். தன் கணவனைக் காணாது விம்மியழுது காவிரி மணலைக் கலைந்து வீசிக் கதறுகிறாள். மருத்துவர்கள் ஆதிமந்திக்கு சிகிச்சை அளிக்கத் தொடங்குகின்றார்கள். அனைவரின் உள்ளத்திலும் மயான அமைதி குடிகொண்டு விட்டது. நாலாபுறமும் சோழன் படை ஆட்டனத்தியைத் தேடிச் செல்கின்றது. ஓடக்காரர்கள் ஓயாமல் படகு செலுத்தி நதியைச் சல்லடை போட்டுச் சலிக்கின்றனர். ஆட்டனத்தி அகப்படவில்லை. அவன் உயிரோடு இருப்பதற்கான சாத்தியக்கூறுகள் குறைந்து கொண்டே இருந்தன.

ஆட்டனத்தியின் ஆற்று நடை:

காவிரித்தாய் ஒரு நாளும் தன்னை வஞ்சிக்க மாட்டாள் என்று தேம்புகின்றாள் ஆதிமந்தி. பித்து நிலை முற்றி விடுகின்றது. தாயும் தந்தையும் மகள் நிலைகண்டு மனம் கலங்குகின்றனர். அரண்மனைக்கு அழைத்துச் செல்கின்றனர். அரை நிமிடம் கூட அங்கு தரிக்க முடியாமல் காவிரிக்கரைக்கு ஓடி வந்து விடுகிறாள் ஆதிமந்தி. எவரின் ஆறுதலும் அவளைத் தேறுதல் செய்ய முடியவில்லை.

தன் மனத்திற்குள் தானே மாய வலையாய் எண்ண அலையைப் பின்னிக்கொள்கிறாள்.

ஆட்டனத்தி வெள்ளத்தில் மூழ்கவில்லை விளையாட்டுக் காட்டிக் கொண்டு இருக்கிறான் என்று. அரண்மனையில் அவளை அடக்கி வைத்திட முடியவில்லை.

கழார் பட்டினத்துறைமுகத்தில் புறப்பட்டவளின் ஆற்று நடை எல்லா மரபுகளையும் உடைத்து விட்டு அன்புக் கணவனை தேடுவதே இலட்சியமாகக் கொண்டிருந்தது. கனியினும் இனிய கவிப்பெருக்கினைத் தந்து தங்களைச் காலமெல்லாம் வாழ வைக்க வேண்டிய காவிரித்தாயே தன் கண்ணீர்ப் பெருக்கிற்குக் காரணமாகிப் போன வேதனையை என்னவென்று சொல்வாள் ஆதிமந்தி. ஆடிப்பெருக்கு என்று உன்னைத் தேடி வந்த ஆடல்மகள் மனம் வாடி காதலனை நாடி கரையங்கும் ஓடிக்கொண்டே இருந்தாள்.அவளது ஒற்றை கோரிக்கையான

"காவிரித்தாயே என் கணவனைக் கொடு"

என்ற புலம்பலைக் கேட்டவர்கள் நெஞ்சமெல்லாம் நீராய் உருக வைத்தது. நைந்துபோன குரலில் உறுதியுடன் கேட்டவாறே நடக்கத்தொடங்குகிறாள்.

புத்தி பேதலித்து நடந்து செல்லும் மகளின் போக்கைக் கட்டுப்படுத்தினால் உயிருக்கே இழப்பு ஏற்பட்டுவிடும் என்பதை உணர்ந்த சோழன் அவள் நம்பிக்கையைக் குலைக்க விரும்பவில்லை. கலைத்தாகம் கொண்டவள் காவேரி; அதனால்தான் என் கலை நாயகனைக் கவர்ந்துகொண்டாள்; விரைவிலே எனக்கே திருப்பித் தந்து விடுவாள் என்று சொல்லி ஆதிமந்தி கலகலவெனச் சிரிக்கும் ஓசை எல்லோரின் இதயத்தையும் பிளந்தது. சோழன் தன் மகள் ஆதிமந்தியின் பாதுகாப்புக்குச் சிறுபடையை பின்னே அனுப்பி வைத்துவிட்டு கண்காணித்தவாறு இருக்கின்றான். யாரைப் பார்த்தாலும் "அவரைக் கண்டீர்களா?" என்ற ஒரே கேள்வி மட்டும்தான் அவள் பேசும் மொத்த உரையாடலாக மாறிப்போனது.

வழியெங்கும் தன் கணவனுக்குப் பிடித்த மலர்களைக் காணும்போது அவற்றைக் கொய்து பூ அலங்காரம் செய்துகொண்டு அவன் உண்ணும் பழங்களைச் சேகரித்தவாறு அவன் கூத்திற்கு வேண்டிய பாடல்களைத் தாளமிட்டுப் பாடியவாறு சென்று கொண்டே இருக்கிறாள் ஆதிமந்தி. வலிமிகுந்த தொலைவுகளை இதயத்திலிருந்து பிறக்கும் பாடல்களால் கடக்க முயற்சிக்கிறாள்.

சங்கப்பாடல்களில் ஆதிமந்தியின் காதலைத் தொலைத்த தனிமையின் ஓலத்தைக் குறித்து வாழ்வியலைப் பாடும் விருப்புடைய பரணர் மட்டுமேயாக அகநானூறில் நான்கு பாடல்களில் (76, 222, 236, 396) பதிவு செய்கிறார். அப்பாடல்கள் அவள் வரலாற்றுக்குப் பெரும் அகச்சான்றாகத் திகழ்கின்றன.

"ஆட்டனத்தியைக் காணீரோவென

நாட்டின் நாட்டின் ஊரின் ஊரிற்

கடல் கொண்டன்றெனப் புனலொளித் தன்றென

கலுழ்ந்த கண்ணன் காதலற் கெடுத்த

ஆதிமந்தி "

(பரணர், அகநானூறு 236:16-21)

இதே வரலாற்றுக் குறிப்பினை வெள்ளி வீதியாரும் பாடுகின்றார். சங்க இலக்கியத்தையடுத்துத் தோன்றிய சிலப்பதிகாரத்திலும் வஞ்சின மாலையில் வைத்துப் பாடுகின்றார் இளங்கோவடிகள். புராணக்கதையில் வரும் சாவித்திரி எமனிடமிருந்து மீட்ட சத்தியவானின் கதை நாடெங்கும் பரவலாக அறியப்பட்ட கதை. ஆனால் ஆதிமந்தி புராணக்கதை மாந்தர் அன்று. நகமும் சதையுமாக நம்மில் இருந்து புறப்பட்ட வரலாற்று மகள் ஒருத்தியின் கதை.

சங்ககாலப் பெண் புலவர்களில் ஒருவராகிய வெள்ளிவீதியாரும் தன் தலைவன் தன்னை விட்டுப் பிரிந்த போது தேடியிருக்கின்றார். கணவனைக் காவிரியில் பறிகொடுத்த ஆதிமந்தி போல பித்தாகி நானும் அலைவேனோ (அகம்:45)என்று பாடுகின்றார்.

எத்துணை நெடிய இரவும் விடியத்தானே வேண்டும்?

வைகறையின் அரும்பில் வசந்தங்கள் பிறக்கத்தானே வேண்டும்!!!

காவிரி ஓடிக்கொண்டிருக்கிறாள்.

திரும்ப வந்த உயிர்:

பொன்னி வளநாட்டு பூம்புகாரில் ஆதிமந்தியின் காதல் சரிதம் கண்ணீரால் எழுதப்படுகிறது. காவிரியின் மணற்பரப்பில் கலையாத சுவடுகளை வரலாற்றில் பதிக்கின்றது. ஆற்றில் அடித்துச் செல்லப்பட்ட ஆட்டனத்தியை ஆற்றிலேயே தேடுகின்றாள். தன் கணவனைத் தேடி புலம்பி வரும் ஆதிமந்தி கரையில் மருதி என்பவளைச் சந்திக்கின்றாள்.

மருதி பல்வகைக் கலைகளில் திறமை பெற்ற பாணர் குலமங்கை. ஆற்றில் நெடுந்தொலைவு அடித்து வரப்பட்ட ஆட்டனத்தியை அவள் காப்பாற்றுகின்றாள். உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கும் அவனை மருத்துவம் செய்து மீட்கிறாள். தான் காப்பாற்றியது சேர இளவரசன் என்பதை அறியாது அவன் பிழைத்து வர பெருமுயற்சி செய்கிறாள்.இவளது தியாகம் மிகுந்த சொல்லப்படாத காதல் இதயத்தைப் பற்றி இலக்கியங்களில் பேசப்படவில்லை.

பரணர் தம் பாடலில்

"ஆதிமந்தி காதலற் காட்டிப்

படுகடல் புக்க பாடல் சால் சிறப்பின்

மருதி அன்ன மாண்புகழ்பெறீஇயர்"

(அகம் 222)


என்று பாராட்டுகின்றார். தொலைத்த ஒன்று மீண்டும் கிடைக்கும்போது போன உயிர் திரும்ப வந்ததாக ஆதிமந்தி உணர்கிறாள். மருதி ஆட்டனத்தியை ஆதிமந்தியிடம் ஒப்படைத்துவிட்டு ஒளித்து வைத்த காதலை வெளிப்படுத்தாமலேயே கடல் தெய்வமாய் மறைந்து புகுந்து பெரும்புகழ் கொண்டாள்.

"போய் வருவாய் பெண்ணங்கே - உன்

பேரன்பை யார் அறிவார்?"

என்று தலைமக்கள் இருவரும் அவளை அடி தொழுது காவிரிப்பூம்பட்டினம் மீள்கிறார்கள். சோழனும் வேண்மாளும் பூம்புகார் நகர மக்கள் புடைசூழ வரவேற்று மகிழ்கிறார்கள். ஆடிப்பெருக்கின் நீர் வழிபாடுகள் தொடர்கின்றன.

தாயாய் பரிந்து பாலூட்டும் காவிரி எல்லோரின் வாழ்விலும் அகசாட்சியாய் நின்று அரசாட்சி செய்கிறாள்.



கோயிற் கட்டிடக்கலை அறிமுகம்



விஜய்பட்
மென்பொறியாளர்
கோவில் கட்டிடக்கலை ஆய்வாளர்
சென்னை.

பாகம்-8

கோயில் கட்டிடக் கலைக்கான வாஸ்து முறை:

ஆயாதி கணிதம் ஓர் ஆலயத்தை அமைக்கும் காரணகர்த்தா, தெய்வம் இடம் இவற்றிற்குடையேயான ஜோதிட ரீதியிலான பலன்களைக் கண்டு பொருத்தம் பார்த்து நல்ல நாள், நேரம் தேர்ந்தெடுப்பது.

பதினாறு பொருட்களான “**ஆயம், வியயம், யோனி, தினம், வாரம், அம்சம், வம்சம், திதி, இராசி, வயது, பூதம், குணம், சூத்ரம், திருஷ்டி, யோகம் & கணம்**” இவற்றைக் கொண்டு கணிக்கும் **பூர்ணயாதி** முறையே கோயில் கட்டுமானத்தில் பயன்படுகிறது.

பிரசாத வாஸ்து திருக்கோயில்களுக்கு ஏற்ற வாஸ்து முறை:

வீடு விடைகிழக்காம் ஆவணிதேள் ஐப்பசிதைகூடு வடக்காம் குளிர்மிதுனம் - நீடுசிலை பெண் கும்பம் தெற்காம் பேசரிய மேற்காம் மீன்வண்வாஸ்து சென்னி வைக்குமால்.

வாஸ்து புருஷன் பரவியுள்ள நிலம் வாஸ்து புருஷமண்டலம்.



Figure 1 VastuPurushan



Figure 2 VastuPurushan2


பதவின்யாசப் பகுப்பு முறைகள்:

தேர்ந்தெடுக்கப் பட்ட நிலமான வாஸ்து புருஷ மண்டலத்தை, தெய்வத்தின் குணத்திற்கேற்ப,

பிம்ப வாஸாத் பிரசாதம் - ஏற்கெனவே உருவப் பிரதிமை உள்ள கோயில்களுக்கு (சுயம்பு/பழமையான).

லிங்க வஸாத் பிரசாதம் - சுயம்பு இலிங்கத்திற்கு பிரசாத்.

Figure 3 Linga Bhaagam



வஸாத் பிம்பம்:

புதிதாக மூலவரும், கோயிலும் அமைத்தல் போன்ற பதவின்யாச பகுப்பு முறை கருவறையின் மானசூத்ர (கால்புறவாய் விஸ்தாரம்) அளவுகளை அடிப்படையாக கொண்டு அளவிடப் படும்.



Figure 4 Hanuman Installation

மனைத் தேர்வு:

ஆதாரம், வர்ணம், மணம், ரூபம், சப்தம், ஸ்பரிசம் இவற்றுக்கான நியதிகளுடன் சரியான நிலத்தை தேர்ந்தெடுத்தல்.

பிரதிமேஷ்டிகை:


நவரத்னப் பிரதிஷ்டை செய்து, மேற்கொள்ளும் ஆலயத்திற்குத் தகுந்தவாறு அதே மூலப் பொருட்களால் மாதிரி நிர்ணயித்தல்.

காசியபம், சுப்ரபேதம், மானசார காமிகாகம நூல்களில் இதற்கான விதிகள் உள்ளன.

கருவறைப் பதவின்யாசம்:

கருவறை உட்கூடு அளவான - அப்யந்திர விஸ்தார- மேற்கொண்ட ஆகம நூல்களுக்கு உட்பட்டு பல பதங்களாகப் பிரித்து, தெய்வத்தின் தன்மைக்கேற்ப - தெய்வீகம் மானுஷம், சுயம்பு- பிரதிஷ்டை செய்தல்

விஸ்வகர்மீயம் - 20 பதங்கள் பொதுவாக
மரீஷிசம்ஹிதை - 256 பதங்கள் - வைணவ ஆலயங்களுக்கு



1. Icon; 2. Pāda-Pīṭha; 3. Adhishṭana-śita; 4. Yoga-nāla; 5. Kanaka-Kūmara; 6. Rajata-kūrma; 7. Śilā-padma; 8. Nidhi-kumbha; 9. Ādhāra-śilā.

Figure 6 Parameshtika Vidhi

Figure 7 Parameshtika Vidhi





Figure 8 Brahmasthanam- Peruvudayar Kovil





திரு.கா.பாலகிருஷ்ணன்
முதல்வர் மற்றும் தாளாளர்
பாரதி பதின்ம மேனிலைப் பள்ளி
திருச்சி-21

எவாரிஸ்ட் கலாய்ஸ்

நண்பர்களே அக்டோபர் 25 பிரான்ஸ் நாட்டில் பிறந்த சபிக்கப்பட்ட கணிதயியலாளர் ஒருவரைப்பற்றித்தான் எழுதப்போகிறேன். சபிக்கப்பட்ட என்ற வார்த்தையை மீண்டும் ஒருமுறை சரிபார்த்தீர்கள்தானே?

ஆமாம்! பரிதாபத்திற்குரிய அந்த ஜீவன் இன்றைய நவீன கணிதத்தின் நாயகன் தான் இறக்கப்போகும் நாளைக்கு முதல்நாள் இரவில் ஒரே மூச்சில் எழுதி முடித்ததைத்தான் இன்று நாம் GROUP THEORY என்று படிக்கிறோம்.

கணினி செயல்பாடுகளுக்கு அடிப்படையாக அமையும் இந்த குலங்களை (GROUP ANALYSIS) பயண்டுத்தியே ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் ஒளி மடிதலை விளக்க முடிந்தது என்றால் பாருங்களேன்.

இத்தனைக்கும் இந்த சாதனையை ஒரு சிறையின் இருண்ட சுவர்களுக்கிடையே அவகாசம் இல்லாமல் ஒரே இரவில் எட்டியிருந்போது அவருக்கு வயது இருபது. அடுத்த நாள் நடந்த சண்டையில் முகம் தெரியாத ஒரு பெண்ணிற்காக குதிரையின் மேலேயே கொல்லப்பட்ட 20 வயதே நிரம்பிய ஒருவரை எப்படிக் குறிப்பிடுவது? பரிதாபத்திற்குறிய ஜீவன் என்றா? சபிக்கப்பட்டவர் என்றா?

கதையை ஆரம்பிப்போமா?

அவர் பெயரையே நான் இன்னும் குறிப்பிடவில்லையே.

எவரிஸ்ட் காலாய்ஸ் (Evariste Galois)



அக்டோபர் 25, 1811 ஆம் ஆண்டு பிரான்ஸ் நாட்டின் பாரிசில் பிறந்த கணிதவியலாளர் தன்னுடைய 19வது வயதிலேயே கணிதத்தில் ஒரு மாபெரும் சாதனையைச் செய்தவர். **பல்லுறுப்புச் சமன்பாட்டை (POLYNOMIAL EQUATION)** விடுவிப்பதற்கு துல்லியமான இயற்கணித நிபந்தனைகளைக் கண்டுபிடித்து இருபதாவது நூற்றாண்டின் சில கணிதத் துறைகளுக்கு 19வது நூற்றாண்டின் முதல் பாதியிலேயே அடிகோலியவர்.

ஆனால் பரிதாபமாக அரசியல் சூறாவளியிலும் தன்னை ஈடுபடுத்திக்கொண்டு, 21 வயதிலேயே உயிர் துறந்தார். அவர் விட்டுவிட்டுப்போன 60-பக்க கணித சொத்து விலைமதிப்பற்றது.

காலாய்ஸ் 12 வயது வரையில் தன்னுடைய அன்னையிடமே இலக்கியங்களில் பழமைச் சிறப்பு பெற்ற நூல்களைப் படித்து வந்தார். 1823 இல் 12வது வயதில் பாரிஸ் நகரத்தில் லூயி லே கிராண்ட் என்ற பள்ளியில் சேர்ந்தார். பிரான்ஸ் நாட்டு மக்கள் அப்பொழுதும் புரட்சி நாட்களை மறக்கவில்லை. காலாய்ஸ் தான் காதால் கேள்விப்பட்ட அடாவடிச் செயல்களை யெல்லாம் நேரில் பார்க்க ஆரம்பித்தார்.

காலாய்ஸின் கவனம் கணிதத்தில் திரும்பியது. ஆனால் பள்ளியிலோ கணிதத்திற்கு எந்த முக்கியத்துவமும் கொடுக்கப்படவில்லை. இருந்தாலும் லெஜாண்டரின் வடிவியல் இச்சிறுவன் வழியில் வந்தபோது அதை அனாயாசமாகப் படித்து முடித்தான். அவனுக்கு பள்ளியில் கிடைத்த இயற்கணித புத்தகத்திலோ அவனுடைய கூர்மையான மூளைக்கு சவாலாக ஒன்றுமே இல்லை. லெஜாண்டரைக் கரைத்துக் குடித்தவன், லக்ராஞ்ஜையும், ஏபெல்லையும் ஏதோ நாவலைப் படிப்பதுபோல படித்து முடித்தான். 14 வயதே ஆன இச்சிறு பையன் கணிதவல்லுனர்களுக்காக இன்னும் பெரிய வல்லுனர்கள் எழுதியதை விழுங்கி சீரணித்துக்கொண்டிருந்தான். சமன்பாடுகளின் விடுவிப்புக் கணிப்புகள், Theory of analytic functions, Calculus of functions இவையெல்லாம் அவனை வெகுவாக ஈர்த்தன.

மனதிலேயே அவன் பெரிய பெரிய கணிப்புகளைப் போடக்கூடியவன். ஆசிரியர்கள் தேர்வுகளில் கணிப்புக்காகக் கேட்கும் வழிகளெல்லாம் அவனுக்கு எளிமையாகத்தெரிந்தன. கணிதத்தில் என்னென்ன பரிசுகள் உண்டோ அத்தனையும் அவனுக்குத்தான். கணிதத்தில் அவனுக்கிருந்த அபார சக்தியை நம்பினவர்களும் இருந்தனர், அதை நம்பாமல் அதெல்லாம் ஒரு நடிப்பு என்றவர்களும் அக்காலத்திலும் இருந்தனர்.


"முதல் ஆய்வுக்கட்டுரை"

17 வது வயதில் 'ரிச்சர்ட்' என்ற கணித ஆசிரியர் அவனுடைய கணிதத்திறமையை நன்கு உணர்ந்து ஊக்கப்படுத்தி அவனை வகுப்பிலும் பள்ளியிலும் உயர்த்திப்பேசினார். அவருடைய ஊக்குவிப்பினால் மற்றவர்கள் அவனை வெறும் கெட்டிக்காரனாக மட்டும் பார்க்காமல், பெரிய கணித மேதையாகவும் பார்க்கத் தொடங்கினர்.

1829, மார்ச் 1ம் தேதி அவனுடைய தொடரும் பின்னங்களைப் பற்றிய ஆய்வுக்கட்டுரை வெளியிடப்பட்டது. ஆனால் பள்ளியில் கட்டுப்பாடுகளும் தண்டனைகளும் ஒன்றன்பின் ஒன்றாக வந்துகொண்டுதான் இருந்தன. அவை ஒன்றும் தான் ஒரு கணிதவியலர் ஆகிவிடவேண்டும் என்ற அவனுடைய கொள்ளை ஆசையை அணைக்க முடியவில்லை. உண்மையில் அவன் ஏற்கனவே ஒரு கணிதவியலர் ஆகிவிட்டிருந்தான். மற்றவர்களுக்குத்தான் அது புரியவில்லை.

அவர்கள்மேல் தூக்கியெறிந்து கொஞ்சநஞ்சம் இருந்த வாய்ப்பையும் இழந்தான்.

இச்சமயம் தான் அவனுடைய தந்தையார் அரசியல் அவதாறு புகார் காரணமாகத் தற்கொலை செய்துவிட்டிருந்தார். 1827 இல் அவர் ஒரு மேயராக இருந்தார். அரசியல் காரணமாக அவரை ஒரு அவதூறில் சிக்கவைத்து கடைசியில் அவர் தற்கொலை செய்துகொள்ளும்படியான சூழ்நிலையை உண்டாக்கிவிட்டனர். இதெல்லாம்



Galois.
Je soussigné Evariste Galois né au Bourg-la-Reine (Département de la Seine) le 25 Octobre 1811 nommé élève de l'école préparatoire par ordonnance du Roi en date du 25 octobre 1829, déclare, conformément au voeu de l'ordonnance Royale du 9 Mars 1826, prendre l'engagement de rester pendant dix ans au service de l'Instruction publique.
Fait à Paris, le 11 Février 1830
E Galois

“தோல்விமேல் தோல்வி”

16வது வயதில் எகோல் பாலிடெக்னிக் என்ற சிறந்த ஆய்வுக்கூடக் கல்லூரியில் சேர்வதற்காக தேர்வு எழுதினான். இக்கல்லூரிதான் பிரெஞ்சுப் புரட்சிகாலத்தில் ஆரம்பிக்கப்பட்டு பிற்காலத்தில் அத்தனை பிரெஞ்சு நாட்டு கணித அறிவியலர்களையெல்லாம் உற்பத்தி செய்து உலகத்துக்கு அளித்தது. ஆனால் காலாய்ஸ் அத்தேர்வில் தோல்வியடைந்தான். 18வது வயதில் அதே தேர்வுக்கு மறுபடியும் தயாரானான். அவனுடைய கால் தூசிக்குச் சமமில்லாத கணித ஆசிரியர்களெல்லாம் அவனுடைய தேர்வுத் தாள்களை மதிப்பிட்டு அவனை மறுபடியும் தோல்வியடையச் செய்தனர். அந்தத் தேர்வில்தான் அவனுடைய விதி தீர்மாணிக்கப்பட்டது. எல்லாவற்றையும் மனதிலேயே கணிக்கக்கூடிய அவனுக்கு, தன்னை நேர்முகத்தேர்வு நடத்திய ஆசிரியர்களின் கணித இயலாமையையும் அவர்களுடைய பிடிவாதத்தையும் நேருக்குநேர் பார்த்து கோபத்தால், கையிலிருந்த சாக்கட்டியை



சேர்ந்து காலாய்ஸுக்கு உலகத்தின்மேலேயே வெறுப்பேற்படும்படிச் செய்துவிட்டது.



“பிரெஞ்சு அகாடெமி”

கோஷி என்ற அக்காலத்தின் மிகப்பெரிய கணித வல்லுனர் பிரெஞ்சு அகாடெமிக்காக காலாய்ஸினுடைய ஆய்வுகளை தரம் பார்த்து மதிப்பிடவேண்டியவர். இதற்காக காலாய்ஸ் தான் அதுவரை கண்டுபிடித்ததையெல்லாம் திரட்டி அகாடெமிக்கு அனுப்பியிருந்தான். அவனுடைய துரதிர்ஷ்டம் அவர் அவனுடைய ஆய்வுக்கட்டுரைகளைத் தொலைத்துவிட்டாரா அல்லது அவர் அவைகளைப் படித்துத் தரம் பார்த்து பிரசுரிக்காமல் விட்டாரா என்பதில் மாறுபட்ட கருத்துகள் நிலவுகின்றன.

ஒருவழியாக *1829* ஆம் ஆண்டு டிசம்பர் *29* இல் அவனை பல்கலைக்கழகம் ஏற்றுக்கொண்டது, ஆனால் அவன் தனிமையிலேயே உழைக்க வேண்டியிருந்தது. மூன்று ஆய்வுக்கட்டுரைகள் எழுதி பிரென்சு அகடெமிக்கு அனுப்பினான். இயற்கணிதச் சமன்பாடுகளைப்பற்றிய மிக உயர்ந்த ஆய்வுகள் அவை. இதை அவன் அனுப்பியிருந்தது 'கணிதத்தில் சிறந்த பரிசு' ஒன்றுக்காக. கலாய்ஸின் துரதிஷ்டம் அவனை விடாமல் துரத்தியது. அகடெமியின் செயலர் ஃபொரியர் அக்கட்டுரைகளை தன் வீட்டுக்கு எடுத்துச்சென்றார், ஆனால் கட்டுரைகளைப்பார்ப்பதற்குள் அவர் இறந்துவிட்டார். உரிய காலத்தில் அவருடைய காகிதங்களைத் தேடித் துழாவினார்கள். காலாய்ஸினுடைய கட்டுரைகள் கிடைக்கவேயில்லை!

காலாய்ஸ் வழ்க்கையையே வெறுத்து, அரசியலில் முழுமூச்சுடன் இறங்கினான். பல்கலைக்ககழக வாழ்க்கை அத்துடன் முடிந்தது.

“கணிதத்தின் சிகரத்தை அண்டுவார் இல்லை”

உயர்தர இயற்கணிதத்தில் சொந்தத்தில் ஒரு வகுப்பு நடத்தினான் 19 வயது இளைஞன், அக்காலத்துக் கணிதக் கண்டுபிடிப்புகளின் முதல்வன், கற்பனை எண்களைப்பற்றிய (COMPLEX NUMBERS) ஒரு புதுக்கோட்பாட்டையும், சமன்பாட்டுகளை விடுவிக்க புதுப்புது வழிகள், எண்கள் கோட்பாடு(NUMBER THEORY), ELLIPTIC FUNCTIONS இவைகளைப் பற்றி தான் சொந்தமாகக் கண்டுபிடித்ததையெல்லாம் சொல்லிக்கொடுக்க வகுப்பு நடத்துகிறான், அழைப்பு விடுகிறான் ஆனால் வருவார் யாருமில்லை. கடையைத் திறந்தேன் கொள்வார் யாருமில்லை என்று வள்ளலாரின் நிலைதான் அன்று காலாய்ஸுக்கு.

“காலாய்ஸ் கோட்பாடு”

ஒரு கடைசி முயற்சியாக அகெடெமிக்கு ஒரு பெரிய ஆய்வுநூலை (சமன்பாடுகளை விடுவிப்பதைப் பற்றியது - தற்காலத்தில் கால்வா கோட்பாடு என்று புகழ்பெற்றது) அனுப்பிவைத்தான். அதைப்படித்து தரம் பார்க்கும் பொறுப்பு பாய்சான் (POISSON- கணிதம் படித்ததவர்கள் "பாய்சான் பரவலை (POISSON DISTRIBUTION) ப்பற்றிப் படித்திருப்பீர்கள்) என்ற கணிதவியலரிடம் சென்றது. அவர் அதை எவ்வளவு ஆழ்ந்து படித்தாரோ தெரியாது. அவருடைய விமரிசனத்தில்

'இது ஒன்றும் புரிகிறமாதிரி இல்லை'

என்று எழுதிவிட்டார்.

“அரசியல் ஏற்றத்தாழ்வுகள்”

மே 9, 1831 ஒரு முறையும், ஜூலை 14, 1831 இல் மற்றொரு முறையும் கைது செய்யப்பட்டான். 1789, 1793 புரட்சிகளின் ஞாபகார்த்தமாக நடந்த ஒரு விழாவில் அவன் கையில் கத்தியுடன் அரசரைக் கொல்வதாக சப்தம் எடுத்துக்கொண்டதாக முதன் முறை கைது செய்யப்பட்டு பின்னால் விடுவிக்கப்பட்டான். இரண்டாவது முறை காரணமே இல்லமல் அவனைக் கைது செய்து இரண்டு மாதம் சிறையில் வைத்திருந்து விட்டனர். ஆனால் மே 29, 1832 அன்று இரவு எல்லா குடியரசுவாதிகளுக்கும் எழுதிய கடிதத்தில் தான் யாரோ இரண்டு நபருடன் கத்திப்போர் புரியவேண்டியிருக்கிறதென்றும் எல்லோரிடமும் விடைபெறுவதுபோல் எழுதியிருக்கிறான்.

நண்பர்களே! நம் கதையின் இறுதிக்கட்டத்துக்கு வந்துவிட்டோம் கவனமாகப்படியுங்கள்.

“கணித உயில்”

அன்று சிறையில் நடந்தது என்ன என்று மிகச்சரியாகக் கூறமுடியாவிட்டாலும் அவரின் நண்பர்களின் குறிப்புகளிலிருந்து நாம் தெரிந்துகொள்ளமுடிவது என்னவென்றால் ஒரு பெண்ணை மையப்படுத்திய பிரச்சனையாகத் தெரிகிறது. சில வலாற்று ஆய்வாலர்கள் அது ஒரு சதி என்கின்றனர். எது எப்படியோ அன்றைய இரவு மணிக்கணக்காக அமர்ந்து தனது கண்டுபிடிப்புகள் அனைத்தையும் தொகுத்து 60 பக்க கட்டுரையாக எழுதினார். அது பத்திரமாக தனது நண்பரிடம் போய்ச் சேர்வதற்கான ஏற்பாட்டையும் செய்திருந்தார்.

“காலோயிஸ் கணித உயில்” என அழைக்கப்படும் இந்த குறிப்புகளை எழுதிய அடுத்த நாள் காலை, காலாய்ஸ் எது நடந்துவிடக்கூடாது என்று நினைத்தாரோ அதுவே நடந்தது.

ஆம் குதிரையின் மீதமர்ந்த நிலையிலேயே கயவன் ஒருவனால் குத்திக்கொல்லப்பட்டான் இருபத்து ஒரு வயதே நிரம்பிய, நவீனகணிதத்தின் திறவுகோலை நமக்களித்த நான் ஆரம்பத்தில் குறிப்பிட்ட சபிக்கப்பட்ட ஜீவன்.

ஒரு 60-பக்கக்கட்டுரையாக எழுதி கணித உலகத்துக்கு தன் உயிலையே எழுதி வைத்தான் கலாய்ஸ். ***14 ஆண்டுகளுக்குப்பிறகு, லியொவில் journal de mathematique pure et appliques*** *என்ற ஆய்வுப்பத்திரிகையில், இதை பிரசுரிக்கும்போது எழுதுகிறார்:*

"இதை ஏற்கனவே அகெடெமியில் பிரசுரிக்காமல் விட்டதற்குக்காரணம் ஒருவேளை காலாய்ஸினுடைய சுறுக்க நடையினால் ஏற்பட்ட குழப்பமாகத்தன் இருக்கவேண்டும்".

(எப்படி சப்பைக்கட்டு கட்டுகிறோம் பார்த்தீர்களா?)

"காலோயிஸினுடைய முக்கிய தேற்றங்களில் ஒன்று"

"இயற்கணிதப் பல்லுறுப்புச்சமன்பாடு (POLYNOMIAL EQUATION) ஒன்றினுடைய காலாய்ஸ் குலம் (Galois Group) என்று சொல்லக்கூடியது தீர்வுடைகுலமாக (Solvable Group) இருந்தால், இருந்தால்தான், அதற்கு தனிமன்களால் (radicals) தீர்வு கிடைக்கும்."

(ஏதாவதுபுரிந்ததா? பாய்ஸானே புரியவில்லை என்று கூறிவிட்டார் நாங்கள் எம்மாத்திரம் என்கிறீர்களா? அதுவும் ஒருவகையில் சரிதான் !)



காலோயிஸின் கண்டுபிடிப்புகள் 14 ஆண்டுகளுக்குப் பிறகு பிரசுரிக்கப்பட்டு கணித உலகில் பரபரப்பை ஏற்படுத்தின.

20-ம் நூற்றாண்டில் காலோயிஸ் சமன்பாடு, காலோயிஸ் குழு சமன்பாடு, நுண் இயற்கணிதம், காலோயிஸ் தொடர்புகள், காலோயிஸ் கோட்பாடு எனக் குறிப்பிடப்பட்ட பல கணிதத் தீர்வுகளுக்கு இவரது ஆய்வுகள் அடித்தளம் அமைத்தன.

குறுகிய காலமே வாழ்ந்தாலும், கணிதத்தில் மாபெரும் சாதனைகளைப் படைத்த பிரான்ஸ் நாட்டின் கணிதவியலாளர் எவரிஸ்ட் காலோயிஸை(Evariste Galois) உங்களுக்கு அறிமுகம் செய்ததில் -எனக்கும் ஏதோ ஒரு திருப்தி.

பொறுமையாகப்படித்த அனைவருக்கு காலாய்ஸ் சார்பாக நன்றி

...பாலா





மருத்துவர் **மு. சுரேந்திரன்**

நாளமில்லாச் சுரப்பியியல் நிபுணர்,

வரலாறு மற்றும் கோயில்கட்டிடக்கலை ஆர்வலர்,

கோவை.

“சிறியதே அழகானது” இது ஒரு பிரபலமான ஜப்பானியப் பொன்மொழி.

வரலாற்றில் எப்போதும் பிரமாண்டமான உருவாக்கங்களே மக்கள் கவனத்தைக் கவர்ந்து பெரும் பேசுபொருளாக பிரபலமாகும் நிலையில் ஓர் சிறிய மிக அழகான கற்றளிக் கட்டுமானம் நம் கண்ணையும் கருத்தையும் கவர்ந்திழுப்பதாக அமைந்துள்ளது .

சிவகங்கை மாவட்டம், **பொன்னமராவதி** அருகே **ஏனாதி** கிராமத்தில் அமைந்துள்ள எளிய கற்றளி அதன் அளவு விகாதாச்சாரத்தாலும், அலங்கார உறுப்புகளின் அமைப்பாலும் நம்மைக் கவர்கிறது.



“நாகர விமானம்”

ஓர் விமானம் என்பது அடி முதல் நுனி வரை அனைத்து அங்கங்களையும் உள்ளடக்கிய கட்டுமானம். இது கருவறை மூலமூர்த்தியைக் கொண்ட ஓர் ஆலயத்தின் மையக் கட்டிடம்.

திராவிட மரபுக் கட்டுமானக் கலையில் மூன்று விமான வகைப்பாடுகள் உண்டு .அவை நாகரம் - சதுர அடிப்படையில், திராவிடம் - பலபக்க அடிப்படையில், வேசரம் - வட்டத்தின் அடிப்படையில்!

நாம் இங்கே காணும் ஏனாதி விமானம் நாகரத்தின் அடிப்படையில் கட்டப்பட்டது .



இந் நாகர விமானம் ஒரே ஒரு தளம் மட்டுமே கொண்டிருப்பதால் “**ஏக தள நாகர விமானம்”** ஆகும்.

இவ்விமானமானது, அடிப்படை அங்க மானங்களான **அதிட்டானம், சுவர், பிரஸ்தரம், கிரீவம், சிகரம், ஸ்தூபி** ஆறு உறுப்புகளையும் பெற்றுள்ளது .

“விமான வகைப்பாடு”

கட்டுமானப் பொருட்களின் அடிப்படையில் இவ்விமானம் ஒரே வகை சார்ந்து சிவப்பு கிரானைட் கற்களால் கட்டப்பட்டிருப்பதால் **“சுத்த விமானமாகும்”.**

அதிட்டானம் முதல் ஸ்தூபி வரையிலும் நாகர-சதுர வடிவத்தை அடிப்படையாக கொண்டிருப்பதால் இது ஓர் **“சுத்த நாகர விமானமாகும்”**

சந்தப் பிரமாண வகைப்பாட்டியல் அடிப்படையில், இதன் அடித்தள அகலத்தைப்

உயரம் 1 3/4 மடங்கு இருப்பதால் இது எப்போதும் வெற்றியும் புகழும் கொடுக்கும் **“ஜெயத விமானமாகும்”.**

ஜாதிப் பிரமாண வகைப்பாடு எனும் அகலம் மற்றும் தளங்களின் எண்ணிக்கைத் தொடர்பு அடிப்படையில், எளிய அழகுடன் விளங்கும் **“அல்ப விமானமாகும்”.**

“அங்கமானங்கள்”

அதிட்டானம்: உபானம், ஜகதி, முப்பட்டைக் குமுதம், கண்டம், பட்டிகை போன்ற பெரு உறுப்புகளும், கம்பு, உபரிக் கம்பு போன்ற சிற்றுறுப்புகளும் கொண்டு விளங்கும் **“பாத பந்த அதிட்டானம்”.**

பாதவர்க்கம்: சுவர்ப்பாகம் மூன்று அடிப்படைப் பத்திகளாகப் **பிரம்மகாந்தம்** எனும் சதுர சுவர்த்தூண்களால் பிரிக்கப் பட்டுள்ளது .

சுவர் தன் கீழ் பாகத்தில் வேதிகை எனும் உறுப்பை பெற்றுள்ளது. பிரம்மகாந்த தூண்களான சுவர்த்தூண்கள் அனைத்தும் பாதம், கால், சதுரம், கட்டு, தாடி, கலசம், கும்பம் கண்டம், பாலிகை, பலகை, வீரகண்டம், போதிகை பெற்று மேலே உத்தரம் தாங்கியுள்ளன.

பிரஸ்தரம்: எனும் கூரையானது வாஜனம், வலபி, கபோதம், பிரதி வரிசை உறுப்புகளுடன் பூமிதேசமாக மேலே கிரீவம் எழ இடமளிக்கிறது. கபோதங்கள் பக்கத்திற்கு நான்கு அல்ப நாசிகள் கொண்டுள்ளன.

கிரீவம்: எனும் கழுத்துப் பகுதி நாகர அடிப்படையில் கீழே வேதிகையும், கண்டமும், வாஜனம், வலபி

உறுப்புகளுடன் சிகரம் தாங்குகின்றது.

சிகரம்: நாகரச் சிகரமானது நான்கு திசை மகாநாசிகளுடன் ஆலம்பனச் சரிவுடன் எழும் சிகரம், கண்ணாடிச் சட்டகமும் மகாபத்மமும் பெற்றுள்ளது .

ஸ்தூபி: நாகரமாக எழும் ஸ்தூபி அடிப்பாகம் மட்டுமே காணக்கிடைக்கிறது. மேல் பகுதி சேதமடைந்துள்ளது .

அலங்கார உறுப்புகள்: மொத்தமே பத்து அடி உயரம் மட்டுமே கொண்ட இவ்விமானம். அதன் கம்பீரமும் அழகும் கலந்த விகிதாச்சார கட்டுமானத்தால் கருத்தைக் கவர்கிறது.

தூண்களின் தாமரை இதழ் தாமங்கள், கபோதகத்தில் நாவடைச் சந்திர மண்டலமும், மையப் பாளையும், கோடிப்பாளையும், நாசிகளின் சித்திரத் தோரணங்களும், பாண்டிய மண்டலத்திற்கே உரித்தான முழுமையான பிரதி உறுவங்களும் நுணுக்கமாகச் செதுக்கப் பட்டுள்ளன.

சிகரத்தில் காணும் நாவடைச் சந்திரமண்டலமும், அழகான கோடிப் பாளைகளும் சிகரத்தில் மேல் படர்ந்துள்ள சுருள் சுருளான கொடிக்கருக்குகளும் தனி அழகைத் தருகின்றன.

“முகமண்டபம்”

ஒற்றைக் கருவறை விமானம் தன் முன்றிலில் இரண்டு தூண்களுடன் முகமண்டபத்தைப் பெற்றுள்ளது. தூண்கள் சதுரம், கட்டு, சதுரம், கட்டு, சதுரம். போதிகை, உத்தரம் எனக் கூரையைத் தாங்குகின்றன.

“முடிவுரை”

சுமார் பத்தாம் நூற்றாண்டைச் சேர்ந்த கலைப் படைப்பாக ஏனாதி விமானம் கருதப் படுகிறது.

சிறிய அழகான இந்த சுத்த நாகர ஏகதள விமானம்.

அதன், ஆகிருதியாலும் அழகூட்டலாலும் தமிழ் கலை வரலாற்றில் உன்னத இடத்தைப் பெறுகிறது.

அனைவரும் நேரில் கண்டு மகிழவேண்டிய *“the little beauty “* இந்த ஏனாதிக் கற்றளி.



மேற்குத் தொடர்ச்சி மலை



விஜய் பாண்டியன்
Lawyer & Histoarchivist

திருநெல்வேலியின் மேற்கு எல்லையான மேற்குத் தொடர்ச்சி மலை, வடமேற்குப் பகுதியிலிருந்து தென்காசி வட்டத்தில் ஒரு சிறு வளைவுடன் பொருநைப் பள்ளத்தாக்கைத் தாண்டி பாவநாசம் வரை நீள்கிறது. பின்னர் தென்கிழக்காகப் பன்னிரண்டு மைல் தூரத்தில் ஒரு பெரும் வளைவாகச் சென்று, பின்னர் நேராக தெற்குப் பகுதியைத் தாண்டி கடல் வரை செல்கிறது.

மிகத் தொலைவிலுள்ள எந்தச் சமவெளியிலிருந்தும் கண்ணுக்குத் தென்படும் உயரமான இந்த மலைத்தொடர், பல முடிகளுடன் கூடியது. வடக்கில் சிவகிரியிலிருந்து தென்காசி வடக்கு எல்லை வரை இந்த மலை திடீரென உயரமாகின்றது. அடிவாரத்திலிருந்து நேர் கோடிட்டுப் பார்த்தால் உச்சி மூன்று அல்லது நான்கு மைல் இருக்கும். சராசரி ஐயாயிரம் அடி உயரமுள்ள இருபது முடிகள் குறைந்தது இவ்வெல்லையில் உள்ளன.

மேலும், சிவகிரியை ஒட்டியுள்ள கள்ளக்கடை மொட்டை 5,721 அடியும், புளியங்குடியை ஒட்டியுள்ள கோட்டை மலை 6,335 அடியும், கிருட்டினாபுரத்தை அடுத்துள்ள குளிராட்டி 5,876 அடியும் இவைகளில் முதன்மையானவை. தெற்கே வரவர உயரம் குறையும் இந்த மலைத் தொடரின் முதன்மைப் பகுதி ஆரியங்காவுக் கணவாய்க்குச் சென்று, பின்னர் மறுபடியும் உயரத்

தொடங்கி ஐந்தருவிக்கு மேலே 5,000 அடியாகிக் குற்றாலத்துக்கு மேலே 5,135 அடி உயரமுள்ள கண்ணைக் கவரும் **"பஞ்சந்தாங்கி"** என்ற பெயருடைய முடியாகத் திகழ்கிறது. பஞ்சம் வராமல் மழையைப் பெய்வித்து மக்களைத் தாங்கும் இம்முடி மக்களுக்கு முக்கியம்.


அம்பாசமுத்திர வட்ட எல்லையிலுள்ள மத்தாளம் பாறைக்கு மேலே சிறிது உயரம் குறைந்தாலும் இம்மலை பார்க்க இனிய குளிராட்டி முடியுடன் விளங்குகிறது. இங்கே இந்த மலைத் தொடர் விரியத் தொடங்கி, பாவநாசத்தை ஒட்டி மிக அகலமாக மிளிர்கிறது. இந்த இடத்தில் சிறப்போங்க 6,125 அடி உயரமான காட்சியளிக்கும் அகத்தியர் மலை. வடகிழக்குப் பருவக் காற்று, தென்மேற்குப் பருவக்காற்று ஆகிய இரண்டு பருவக்காற்றுகளின் முழுப் பயனையும் இம்மலை முடி அடைகிறது. இதனால் இதனை ஏகபொதிகை என்றும் கூறுவர்.

இங்கே தான் முத்தமிழ் வளர்ச்சிக்கு அகத்தியமான இலக்கணம் வகுத்த அகத்திய மாமுனிவர் எழுந்தருளியிருந்து இப்பகுதி மக்கள் வாழ்ந்தோங்கத் தண் பொருநை யாற்றைத் தோற்றுவித்தார். இதற்குத் தெற்கே இருப்பது ஐந்து தலைகளாக உள்ள முடி; அதனால் இது ஐந்தலைப் பொதிகை என்று பெயரடைந்துள்ளது.

இங்கிருந்து நாங்குநேரி வட்ட எல்லை வரை மலை தென்கிழக்காகச் சென்று அங்கிருந்து நேராக தெற்கு நோக்கிச் செல்கிறது. இப்பகுதி வர வர அகலம் குறைந்து செங்குத்தாகிச் சராசரி 5000 அடி உயரத்தை உடையது. திருக்குறுங்குடிப் பக்கமாக இது ஆறாயிரம் அடி உயர்ந்து மகேந்திரகிரியை ஒட்டிச் சிறிது உயரம் குறைகிறது. பணகுடிக்கு வடக்கே ஒரு கணவாய் இருக்கிறது; இந்த மலை தென்கிழக்காக உயரம் குறைந்து சென்று ஆரல்வாய்மொழி அருகே கணவாயாக நின்றுவிடுகிறது. ஆரல் - மதில், பொழி - எல்லை என்று இருசொற்களாகப் பிரிந்து எல்லையாகிய மதில் என பொருள்படும்.

திருவாங்கூருக்கும் திருநெல்வேலிக்கும் இது எல்லை. ஆரல்வாய்பொழி என்பது ஆரல்வாய்மொழி என்று மருவி வழங்கப்படுகிறது. இதன் பிறகு இந்தப் பெருமலை குன்றாகக் குன்றித் தெற்குக் கோடியில், கடலிலிருந்து இரண்டு மூன்று மைல் தூரத்தில் முடிகிறது. இந்த முடிவிடம் கன்னியாகுமரி முனைக்குச் சிறிது சரிவாக மேற்கில் உள்ளது.

“சிறு மலைகள்”





குன்று, பறம்பு, பொற்றை என்பன சிறு சிறு மலைகளைக் குறிப்பன. ஊற்றோடு கூடிய மலை ஊற்றுமலை. இதன் அருகில் ஊற்றுமலை எனும் பிரசித்தி பெற்ற ஜமீன் ஊர் இருக்கிறது. இது தென்காசி வட்டம். அம்பாசமுத்திரம் வட்டத்தில் கடையத்துக்கு அருகே முள்ளி மலையும், சேரன்மாதேவிக்குத் தெற்கே கொழுந்து மாமலையும், நெல்லைக்கு தென்கிழக்கே குன்னத்தூர்ப் பொற்றையும், பாளையங்கோட்டைக்குக் கிழக்கே சிவந்திபட்டிப் பறம்பும், நாங்குநேரிக்கு அருகே சூட்டுப் பொற்றை, கன்னிமார் பொற்றை, பிரண்டை மலை என்பனவும் சீவைகுண்டத்தின் வடமேற்கே வல்லநாட்டுப் பறம்பும், கோவிற்பட்டிக்குத் தெற்கே குருமலையும், சங்கரநயினார் கோவிலுக்கும் கோவிற்பட்டிக்கும் இடையே கழுகுமலையும் கோவிற்பட்டியை ஒட்டித் தென் மேற்கே பொன்மலைக் குன்றும், சங்கரநயினார் கோவிலுக்கு வட மேற்கே கூடலூருக்கு அருகே மூஞ்சிமலையும் உள்ளன. இவற்றுள் குருமலை, கொழுந்து மாமலை முதலியன மூலிகைகள் பல உடையன; அதனால் அவை அனுமன் இலங்கைக்கு தூக்கிச் சென்ற மருந்து மாமலையிற் சிதறி விழுந்த கொழுந்துகள் என்பது நம்பிக்கை.













சோழர்கள் போற்றிய திருவாண்டார் கோயில்



முனைவர் ப. காளீஸ்வரன்,
இளநிலை அறிவியல் அலுவலர்,
வட்டாரத் தடய அறிவியல் ஆய்வகம்,
மதுரை.

காவிரிக்கரையில் இருந்த செங்கல் கோயில்களை எல்லாம் கற்றளியாக மாற்றிய பெருமை **ஆதித்த சோழனைச்** சார்கிறது. நூற்றுக்கும் மேற்பட்ட திருத்தலங்களை கற்றளியாக மாற்றுகிறார். அந்த கற்கோயில்களில் எல்லாம் கல்வெட்டுக்கள் ஏற்றம் பெறுகின்றன. பழைய கோயில்கள் எல்லாம் ஆங்காங்கே ஆற்றோரத்திலும், மலை அடிவாரங்களிலும், மக்கள் வாழ்ந்த பகுதிகளில் செங்கல் கட்டிடங்களாகவோ அல்லது மரக் கட்டிடங்களாகவோ காணப்பட்டன. பல்லவர்கள் காலத்தில் தொண்டை நாட்டுப் பகுதியில் பல கற்கோயில்கள் எழுப்பப்பெற்றது. **பாண்டியர்கள் ஆட்சி** செய்த தென் மண்டலங்களில் பல குடைவரைக் கோயில்களும் எழுப்பப் பெற்றன.

சோழர்கள் ஆட்சி செய்த நிலப்பரப்பிலே **ஆதித்தர்** காலத்தில் எழுந்த கற்றளியாக்கும் பணி **மூன்றாம் ராஜராஜர்** காலம் வரையும் நீடித்தது. **குலோத்துங்க சோழர்** காலத்தில் கூட பல செங்கல் தளிகள் கற்றளிகளாக மாற்றப்பட்டன. பாடல்கள் பெற்ற திருக்கோயில்கள் தேவாரம் மூவர் பெருமானார்கள் வாழ்ந்த காலத்திலேயே சிறப்புற்று இருந்ததால், கோவில்கள் எல்லாம் கற்றளிகளாக மாற்றப்பட்டிருந்தன. அதனால் தான் பெரும்பாலான தேவார பாடல் பெற்ற திருத்தலங்களில் **ஆதித்த சோழர், பராந்தக சோழர்** காலத்தில் இருந்தே கல்வெட்டுகள் கிடைக்கின்றன. சோழர்கள் சிவ பூஜையில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தனர் என்பதை பாடல் பெற்ற திருத்தலங்களும்,

அப்பகுதிகளில் இருக்கக்கூடிய கல்வெட்டு பெற்ற கோயில்களும் பறை சாற்று நிற்கின்றன.

எந்த கிராமத்திற்கு சென்றாலும் அங்கே ஒரு கல்வெட்டுடன் கூடிய ஆலயத்தை தரிசனம் செய்ய முடிகிறது என்றால், சோழர்கள் பெற்ற பெருமைக்கு ஈடாகாது. பல்லவர்களும், பாண்டியர்களும் இதற்கு சளைத்தவர்கள் அல்ல. **பாண்டியர்கள்** பகுதியில் இருக்கக்கூடிய கோயில்கள் எல்லாம் **அப்புர் பெருமானார்** குறிப்பிட்டது போல பெருங்கோயில்களாகும். பெரும்பாலான பாடல் பெற்ற திருத்தலங்கள் எல்லாமே இரண்டு அல்லது மூன்றுக்கும் மேற்பட்ட திருச்சுற்றுகளைப் பெற்று பெருங் கோயில்களாகவே இருக்கின்றன.

கோவில்களுக்கு தொண்டு செய்த அதே நேரத்தில், தமிழக மன்னர்கள் வரலாற்றை நமக்கு கல்வெட்டுகளாக விட்டுச் சென்றிருக்கின்றனர். இன்று இந்திய தொல்லியல் துறையில் இருக்கக்கூடிய ஒரு திருத்தலம் தான் **திருவாண்டார் கோவில்** எனும் திருத்தலம். இந்த திருத்தலம் **திருஞானசம்பந்த பெருமான்** காலத்திலே **வடுகூர்** என்று அழைக்கப்பட்டு இருக்கின்றது. **முதலாம் திருமுறையிலே** இந்த திருத்தலம் பற்றிய பாடல் வருகிறது. முதலாம் திருமுறையிலே 87வது பதிகமாக **"சுடுகூர் எரிமாலை அணிவர் சுடர்வேலர்...."** என்று தொடங்கக்கூடிய பாடல் **திருவடுகூர்** எனும் **ஆண்டார்** கோயிலையே குறிக்கிறது.

ஆண்டார்கோயில் இருக்கக்கூடிய புதுச்சேரி விழுப்புரம் பகுதியானது நடுமண்டலமாக சோழர்கள் காலத்திலே காணப்பெற்றது. இவற்றில் சில பகுதிகள் ஜெயங்கொண்ட சோழமண்டலம் எனும் தொண்டை மண்டலத்திலும் இருந்தன. திருவாண்டார் கோயிலில் காணப்படும் சில கல்வெட்டுகளில் **ஜெயங்கொண்ட சோழமண்டலம்** என்றும், சில கல்வெட்டுகளில் மண்டலம் குறிப்பிடப்படாமல் வளநாடு குறிப்பிடப்படுவதால் அவை சோழ நாட்டைச் சேர்ந்த பகுதியாகவும் இருக்க பல்வேறு வாய்ப்புகள் உள்ளன. நிர்வாகப் பிரிவின் காரணமாக பல மன்னர்கள் கிராமங்களை, நகரங்களை, வளநாடுகளை, கோட்டங்களை சில மாற்றங்கள் செய்வர் அவ்வாறு இவ்வடுகூர் பகுதியும் நிர்வாக மாற்றங்களை பெற்றிருப்பதை இக்கல்வெட்டுகள் வாயிலாக அறிய முடிகிறது.


இத்திருக்கோவில் விழுப்புரத்திலிருந்து புதுச்சேரி செல்லும் வழியில் முதன்மைச் சாலையில் அமைந்திருக்கக் கூடிய ஊர். ஒரு காலத்தில் இந்த ஊரின் அருகில் இருக்கக்கூடிய **மதகடிப்பட்டி, திருபுவனை, ஆண்டார் கோவில்** ஆகிய இவ்வூர் மூன்றும் ஒரே ஊராக இருந்ததாகவும், தற்பொழுது தனித்தனி ஊர்களாகப் பிரிந்து இருப்பதாகவும் ஆய்வாளர்கள் கூறுகின்றனர். திருப்புவனை திருத்தலத்தில் தான் பாண்டிச்சேரி மாநிலத்திலேயே அதிகமான கல்வெட்டுக்கள் காணப்படுகிறது. தற்பொழுது திருக்கோவில் புதுச்சேரி மாநிலத்தில் அமைந்துள்ளது.

இத்திருக்கோவில் ஒரே ஒரு திருச்சுற்று மட்டுமே கொண்டு விளங்கக்கூடிய சிறிய திருக்கோயில் ஆயினும் திருக்கோயிலில் இருக்கக்கூடிய கல்வெட்டுக்கள் ஏறத்தாழ கோயிலின் பெருமையை பறைசாற்றுகின்றன. கருவறையைச் சுற்றி ஒரே ஒரு திருச்சுற்று மட்டுமே இருக்கின்றது. கருவறையின் கோஷ்டத்திலே **விநாயகர், தட்சிணாமூர்த்தி, லிங்கோத்பவர், பிரம்மா, துர்க்கை, சந்திரசேகரர்** ஆகியோர் இருக்கின்றனர். இத்திருக்கோவில் **அருணகிரிநாதரால் திருப்புகழ் பாடப்பெற்ற திருத்தலமாகும்.**

வெளிப்பிரகாரத்திலே அதாவது கருவறையை சுற்றி இருக்கக்கூடிய பிரகாரத்திலே **விநாயகர், முருகன் சன்னதிகளும், பைரவர், நவகிரக சன்னதிகளும்** இருக்கின்றன. கோவில் வாசலை கடந்த உடன் நந்தி, பலிபீடம் காணப்படுகிறது. திருத்தலத்தில் கொடிமரம் இல்லை. இறைவனுக்கு இடப்புறம் தெற்கு பார்த்து அம்மன் சன்னதி அமைக்கப்பட்டுள்ளது. அம்மன் சன்னதியும் சுவாமி சன்னதியும் ஒரே வாசல் வழியாக சென்று தரிசிக்கலாம்.

இத்திருக்கோவிலில் மொத்தம் 29 கல்வெட்டுக்கள் படி எடுக்கப்பட்டுள்ளன. படியெடுக்கப்பட்ட கல்வெட்டுகளில் சோழர் காலத்திய கல்வெட்டுகளே அதிகம். பாண்டிச்சேரி மாநிலத்தில் கிடைக்கக்கூடிய கல்வெட்டுகளில்,





































சோழ மன்னர்கள் 17 பேருடைய கல்வெட்டுக்கள் கிடைத்திருக்கின்றன. அப்படி கிடைத்த கல்வெட்டுகளில் காலத்தால் பழைமையான கல்வெட்டு இருக்கக்கூடிய இடம் இத்திருக் கோவிலாகும்.

சுந்தரச் சோழர் காலத்திலே சோழர்கள் இழந்த நிலப்பரப்பினை மீண்டும் போரின் மூலம் பெறுகிறார்கள். அதற்குப் பிறகு உத்தமசோழர் ஆட்சி செய்த கிபி 971 முதல் 987 ஆண்டு கால கட்டங்களில் இரண்டு கல்வெட்டு இங்கு காணப்படுகிறது.

முதலாம் இராசராசரின் கல்வெட்டுக்கள் 5

முதலாம் இராசேந்திரன் கல்வெட்டுகள் 2

முதலாம் ராசாதி ராசன் கல்வெட்டுகள் 4

முதலாம் குலோத்துங்கன் கால கல்வெட்டு 1

விக்கிரமச் சோழர் கல்வெட்டு 1

இரண்டாம் குலோத்துங்கன் காலத்து துண்டு கல்வெட்டுகள் 3

பிற்காலப் பல்லவர்களைச் சார்ந்த கோப்பெருஞ்சிங்கர் கல்வெட்டு 1

விஜயநகர மன்னர்கள் காலத்து கல்வெட்டுகள் 7

கன்னரதேவன் கல்வெட்டு 1 என 29 கல்வெட்டுகளை பார்க்க இயலுகிறது.

இத்திருக்கோவிலில் பாண்டியர்கள் காலத்திய கல்வெட்டுகள் ஏதும் காணப்படவில்லை.

இவற்றில் உள்ள துண்டு கல்வெட்டுகள், ஒரே கல்வெட்டாகவும் இருக்கலாம் அல்லது பல கல்வெட்டுகளைச் சேர்ந்ததாகவும் இருக்கலாம். எனவே அவற்றை தனித்தனி எண்களாகக் கொண்டு 29 கல்வெட்டு இருப்பதாக நாம் கணக்கில் வைத்துக் கொள்ளலாம். இவற்றில் பத்து கல்வெட்டுகள் துண்டு கல்வெட்டுகள் எனில், கிடைத்திருக்கக்கூடிய 29 கல்வெட்டுகளில் 19 கல்வெட்டுக்கள் தெளிவாக சில செய்திகளை உணர்த்தி நிற்கின்றன. இந்த 19 கல்வெட்டுகளிலும் சில கல்வெட்டுக்கள் முழுமை அடையாத கல்வெட்டுகளாகவும் உள்ளன. எஞ்சிய கல்வெட்டுகளின் மூலம் இத்திருத்தலத்தின் நிர்வாகத்தினையும், இப்பகுதி நிர்வாகத்தினையும், இந்த திருக்கோவிலில் வழிபாட்டு முறைகளையும், மக்கள் வாழ்க்கை முறையையும் அறிந்து கொள்ள ஏதுவாக கல்வெட்டுகள் உள்ளது என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

தற்பொழுது **பஞ்சநதீஸ்வரர்** என்று இத்திருக்கோவில் இறைவனை அழைக்கின்றோம். இதே திருக்கோவில் இறைவனாகப்பட்டவர் திருஞானசம்பந்தர் தேவாரத்தில் வடுகூர் புனல் சூழ்ந்த வடுகூர் அடிகளே ...என்று வடுகூர் நாதராக அழைக்கப்பட்டிருக்கிறார். ஆனால் இத்திருக்கோவில் சோழர்கள் காலத்தில் திருவாறையாள்வார் பரமஸ்வாமி என்று அழைக்கப்பட்டிருக்கிறது. இத்திருக்கோவில் இறைவன் திருவாறையாள்வார் என்றும், திருவாறையாளும் பரம சுவாமி என்று அழைக்கப்பட்டிருக்கிறார். திருவாறை உடைய பரமசாமி என்று கல்வெட்டுகளில் இத்திருத்தலத்து இறைவன் குறிப்பிடப்படுகிறார். தற்பொழுது பஞ்சநதீஸ்வரர் என்று அழைக்கப்படும் பெயருக்கு இணையான ஒரு பழைய பெயர் சோழர்கள் காலத்திலேயே வழங்கப்பட்டுள்ளது. அதனை கட்டுரையின் பின்பகுதியில் காணலாம்.

"முதலாம் பராந்தகர்"

முதலாம் பராந்தகருடைய காலத்து கல்வெட்டு ஒன்று இத்திரு கோவிலில் காணப்படுகிறது. இதுதான் இத்திருக்கோவிலில் காணப்படக்கூடிய சோழர் காலத்திய பழமையான பாண்டிச்சேரி மாநிலத்துக் கல்வெட்டு ஆகும். முதலாம் பராந்தகரின் 40 ஆவது ஆட்சி ஆண்டிற்கு பிறகு காணப்படக்கூடிய ஒரு கல்வெட்டு. ஆண்டை சரியாக கணிக்க இயலாத அளவுக்கு கல்வெட்டு சிதைந்துள்ளது. ...யாண்டு நால்ப்ப....என்னும் வார்த்தையின் மூலம் நாற்பதாவது ஆட்சி ஆண்டுக்கு பிறகு, அதாவது கிபி 947 ஆம் ஆண்டிற்கு பிறகு எடுக்கப்பப்பட்ட ஒரு கல்வெட்டு, இக்கோவிலுக்கு விளக்கு எரிப்பதற்காக 90 ஆடுகள் வழங்கிய செய்தியைக் குறிப்பிடுகிறது. இப்பகுதி முதலாம் பராந்தகரின் காலத்தில் திரிபுவனமாதேவிசதுர்வேதி மங்கலம் என்று அழைக்கப்பட்டிருக்கிறது. திரிபுவன

மாதேவி என்பது இவருடைய பட்டத்தரசியின் பெயர்.

பராந்தகச் சோழர் கிபி 907 முதல் 954 வரை ஆட்சிப் பொறுப்பில் இருந்தார். இவர் காலத்திலே சோழர்களின் ஆட்சி பரப்பானது விரிந்து கொண்டே சென்றது. பராந்தக சோழரின் காலத்திற்குப் பின்பு தக்கோலத்தில் நடைபெற்ற போரில் கன்னர தேவன் எனும் மூன்றாம் கிருஷ்ணன் சோழதேசத்தின் சில பகுதிகளை கைப்பற்றுகிறார். அவ்வகையில் இவருடைய 18-வது ஆட்சி ஆண்டு கி.பி 957 வது ஆட்சி ஆண்டு கல்வெட்டு ஒன்று இத்திருத்தலத்தில் காணப்படுகிறது. கி.பி 957 வது ஆண்டு கண்டராதித்தர், அரிஞ்சயர், சுந்தர சோழர் ஆகியோரெல்லாம் ஆட்சிப் பொறுப்பேற்று இருந்த காலகட்டம்.

"உத்தம சோழர்"

உத்தம சோழருடைய மூன்று கல்வெட்டுகள் இங்கு கிடைக்கின்றன.

இந்த நிலப்பகுதி சோழர்களிடமும், பல்லவர்களிடமும் ,ராஷ்டிர கூடர்களிடமும், விஜயநகர மன்னர்களிடமும் பல காலங்களில் மாறி மாறி இருந்திருக்கின்றது. இத்திருக்கோயிலில் ராஷ்டிரகூட மன்னர் கன்னர தேவன் என்று சொல்லக்கூடிய மூன்றாம் கிருஷ்ணன் காலத்து கல்வெட்டும் காணப்படுகிறது.

உத்தமசோழரை பெரும்பாலும் நாவல்கள் ஒரு மாதிரியாக சித்தரித்து விட்டன. பின்னால் பல நாவல்கள் வந்த பொழுதும் உத்தமசோழரை ஒரு வில்லன் போலவே காட்டி விட்டு சென்று இருக்கின்றனர். உத்தமசோழருடைய காலம் அப்படி ஒன்றும் வில்லன் ஆட்சி செய்த காலம் எல்லாம் கிடையாது. அவருடைய காலத்து கல்வெட்டுகள் தொண்டை மண்டலம், பாண்டி மண்டலத்திலும் கூட கிடைக்கின்றன. அவர் சிவன் கோவிலுக்கு செய்த பணிகள் ஏராளம்.

கிபி 985 ஆம் ஆண்டு கல்வெட்டு ஒன்று கிபி 987 ஆம் ஆண்டு கல்வெட்டு இரண்டு மாக மூன்று கல்வெட்டுகள் கிடைக்கிறது. இதில் 987 ஆம் ஆண்டு காணப்படக்கூடிய கல்வெட்டு இரண்டும் ஒரே கல்வெட்டுக்களாக இருக்கும் என்று ஆய்வாளர்கள் கருதுகிறார்கள். உத்தமசோழர் பரகேசரி என்ற பட்டப்பெயருடன் ஆட்சி செய்தார்.

கிபி 985 ஆம் ஆண்டு கல்வெட்டு கருவறையின் தெற்கு சுவரிலே காணப்படக்கூடிய கல்வெட்டு. இந்த கல்வெட்டு குறிப்பிடும் செய்தி என்னவென்றால் திருவாண்டார் கோயில் சுவாமிக்கு ஒரு பங்கு நிலம் கொடுத்தது பற்றி கூறுகிறது.

இன்றைய தேதியில் பஞ்சநதீஸ்வரர் என்று அழைக்கப்படக்கூடிய ஆண்டார் கோயில் இறைவன், உத்தம சோழர் காலத்தில திருவாறை நக்கன் கோயில் பரம சுவாமிகள் என்றே அழைக்கப்பட்டிருக்கிறார். இப்பகுதியானது திருவாறை என்று அந்த காலத்தில் அழைக்கப்பட்டிருக்கிறது. சுவாமிக்கு பெயர் பரம சுவாமிகள் என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த கிபி 985 ஆம் ஆண்டு கல்வெட்டு கூறும் செய்தி என்னவென்றால், உத்தமசோழருடைய ஆட்சி ஆண்டின் 15 வது ஆண்டில் வடகரை பிரம்மதேயம் திரிபுவன மாதேவி சதுர் வேதி மங்கலத்தை ஆளும் கணத்தார் ஒருவரான ஸ்ரீ நாராயணசேரி ஆரமூர் ஒரம்மனான ஆதித்தன் சங்கரன் என்பவர் முழையூர் நாட்டு பிரம்மதேயம் திருநள்ளாறு பரமேஸ்வர பட்டாரகர் கோயிலில் வைத்து, இடையாற்றுக்குடி கிளி மாடத்துப் பிள்ளை சதாசிவன் நாராயண பட்டன் கையிலே திரிபுவனமாதேவி சதுர்வேதி மங்கலத்து திருவாறை நக்கன் கோயில் பரம சுவாமிகளுக்கு மனை நீங்களாக ஊரில் ஒரு பங்கு கொடுக்கின்றார்.

வடகரை என்று சொல்லப்படும் இடமானது ஆற்றிற்கு வடக்கு பகுதியிலேயே இருக்கக்கூடிய நிலம் என்று பொருள்படுகிறது. இங்கு முழையூர் நாடு என்று சொல்லப்படக்கூடிய இடம் ஆனது உய்யக் கொண்டார் வளநாட்டிற்குள் அமைந்திருக்க கூடிய ஒரு நாட்டுப் பகுதியாகும். தொண்டை மண்டலத்தில் கோட்டம் என்ற கொடுக்கப்பட்ட பகுதியானது சோழநாட்டில் வளநாடு என்று

வழங்கப்பட்டது. இவை தவிர கூற்றம் என்ற பகுதியும் சோழ நாட்டில் வழங்கப்பட்டிருக்கிறது.

வளநாடு என்று சொல்வது முதலாம் ராஜராஜன் காலத்திலே அறிமுகப்படுத்தப்பட்ட முக்கியமான நாட்டு பிரிவு ஆகும். பெரும்பாலான வள நாடுகள் மன்னர்களின் பட்டப்பெயரிலே அழைக்கப்பட்டன. அரு மொழி தேவ வளநாடு, ராசாதி ராச வளநாடு, ராஜராஜ வளநாடு, ராஜேந்திர சோழ வளநாடு, உய்யக்கொண்டார் வளநாடு, உத்தமர் சோழ வளநாடு, கரிகாலச் சோழவள நாடு, கங்கைகொண்ட சோழ வளநாடு, குஞ்சிரமல்ல வளநாடு, குலோத்துங்க சோழ வளநாடு , ஜெயங்கொண்ட சோழவள நாடு, நித்த வினோத வளநாடு, பரகேசரி வளநாடு, பவித்திரமாணிக்க வளநாடு, பாண்டி குலாசினி வளநாடு, மணிகொண்ட சோழவள நாடு மதுராந்தக வளநாடு, ராஜநாராயண வளநாடு, விருதராஜ பயங்கர வளநாடு, ராஜநாராயண வளநாடு, வீரநாராயண வளநாடு, வீராவதார வளநாடு என்று சில குறிப்பிட்ட வளநாடுகளின் பெயரை நாம் இங்கு நினைவு கூறலாம். இது தவிர நிறைய வளநாடு என்று சொல்லக்கூடிய பிரிவுகள் கல்வெட்டுகளில் காணப்படுகின்றன. தொண்டை நாட்டிலே கோட்டம் என்று குறிப்பிட்டு அழைக்கப்பெற்ற பகுதிகள் இங்கு வளநாடு என்று நாம் அழைக்கலாம்.

உத்தமசோழன் காலத்தில் இருக்கக்கூடிய இந்த கல்வெட்டில் எவ்விடத்திலும் இந்த வளநாடு பற்றிய செய்தி திருவாண்டார் கோவிலுக்கு குறிப்பிடப்படவில்லை. நிலத்தின் எல்லைகளும் இந்த கல்வெட்டிலே குறிப்பிடப்படுகிறது. எந்தெந்த பக்கத்தில் எவ்வகையான நிலம், அதற்கு அருகில் உள்ளவர்களுடைய நிலம் என்று இக்கல்வெட்டுகள் குறிப்பிடும் பொழுது அந்த காலத்தில் வாழ்ந்த மக்களுடைய பெயர்களை நாம் அறிந்து கொள்ள முடிகிறது.

தமிழில் சிறப்பு எழுத்து என்று சொல்லக்கூடிய 'ழ' இந்த கல்வெட்டில் காணப்படுகிறது. இங்கு நிலத்தை குறிப்பிடும் பொழுது வதி, கண்ணாறு, சதுரம் என்ற இடம் குறிப்பிடப்படுகிறது. வதி என்ற சொல் வாய்க்காலை குறிப்பிடுகிறது. பெரிய வாய்க்கால் நீரோட்டத்தை வடக்கு தெற்காக செல்லும் நீரோட்டத்தைக் குறிக்கின்றது. வாய்க்கால் என்று கல்வெட்டுகளில் குறிப்பிடுவது கிழக்கு மேற்காக நீரோட்டம் இருக்கக்கூடிய நீர் செல்லும் பாதையை குறிப்பிடுவதாக சில ஆய்வாளர்கள் குறிப்பிடுகிறார்கள். அவ்வகையில் இங்கு வீணாவதி என்று ஒரு பெரிய கால்வாய் குறிப்பிடப்படுகிறது. வதி, வாய்க்கால் என்பது பெரிய கால்வாயாகும். கண்ணாற்று பகுதி அல்லது கண்ணாறு என்பது பெரிய வாய்க்காலில் இருந்து பிரிந்து செல்லக்கூடிய சிறிய வாய்க்காலாகும். வீரசோழ வாய்க்கால் என்று ஒரு வாய்க்கால் இங்கு குறிப்பிடப்படுகிறது. இந்த நிலத்தின் மூலம் திருவாறை நக்கன் பரம சுவாமிகளுக்கு நந்தா விளக்கும், திருவமுதும் செய்து வைத்திடுமாறு சங்கரன் குறிப்பிடுகிறார்.

கிபி 987 ஆம் ஆண்டு கல்வெட்டு. அர்த்தமண்டபத்தின் தெற்குச் சுவரிலே காணப்படக்கூடிய உத்தமச் சோழர் கால கல்வெட்டு. இக்கல்வெட்டு முற்றுப்பெறாது ஐந்து வரிகளை மட்டுமே கொண்டுள்ளது ஆனால் இதனுடைய தொடர்ச்சியாக அர்த்தமண்டப கிழக்குச் சுவரின் வலது புறத்திலே இருப்பதாக புத்தகம் குறிப்பிடுகிறது. கோப்பரகேசரி என்று இக்கல்வெட்டு உத்தமசோழரை குறிப்பிடுகிறது. அவருடைய 16ஆவது ஆட்சி ஆண்டிலே வடகரை பிரம்மதேயம் திரிபுவனமாதேவி சதுர்வேதி மங்கலத்து திரு நாராயணசேரி சாத்தமங்கலத்தில் பரத்வாஜி ....

என்பதோடு ஒரு கல்வெட்டு முடிகிறது. இதன் தொடர்ச்சி கோவில் அர்த்த மண்டப கிழக்குச் சுவரிலே இருக்கலாம் என்று குறிப்பிட்டு இதே வாசகத்தையும், இதற்கு கீழ் சில வாசகத்தையும் கொண்டு அந்த கல்வெட்டு காணப்படுகிறது. கோப்பரகேசரி என்று சொல்லக்கூடிய உத்தமசோழருடைய ஆட்சி ஆண்டு 16 ல், வடகரை பிரம்மதயம் திருபுவனமாதேவி சதுர்வேதி மங்கலத்து ஸ்ரீ நாராயணசேரி சாத்தமங்கலத்தில் பரத்வாஜி சாத்தன் நிலக்கிழவன், திருவாறை உடைய பரம சுவாமிகளுக்கு கன்னர தேவருடைய ஆட்சி ஆண்டு 25 ல் நந்தா விளக்கு எரிப்பதற்காக 90 ஆடுகளை கொடுத்திருக்கிறார். அச்செய்தியானது

உத்தமசோழருடைய 16 வது ஆட்சி ஆண்டிலே கல்வெட்டாக எடுக்கப்பட்டுள்ளது.

கன்னர தேவர், ராஸ்டிரகூட மன்னருடைய 25ஆவது ஆட்சியாண்டில் அளிக்கப்பட்ட செய்தி உத்தமச் சோழருடைய 16 ஆவது ஆட்சி ஆண்டில் குறிப்பிடப்படுகிறது, கன்னர தேவருடைய 25 ஆம் ஆட்சியாண்டு என்பது கி.பி 957 உத்தமச் சோழருடைய ஆட்சி ஆண்டான 987ல் இச்செய்தி குறிப்பிடப்படுகிறது, என்றால் 957 இல் இருந்து 987 வரை 30 ஆண்டு காலம். இந்த குறிப்பிட்ட காலத்தில் இப்பகுதியில் திருப்பணி நடைபெற்றிருக்கும் வாய்ப்புகள் உள்ளது.

"ராசராச சோழர்"

கல்வெட்டுகளில் மெய் கீர்த்தியை முதன் முதலில் அறிமுகம் செய்து வைத்தது இராசராச சோழன் தான்.

விண்ணைத் தொடும் அளவுக்கு விமானம் எழுப்பி வியந்து பார்க்க வைத்தவரும் இராசராசசோழர்தான், ஒரே ஒரு சிறிய கருவறை மட்டும் அமைக்கப்பெற்ற திருக்கோயில்களிலும் சிற்பக் கலைகளை சிறந்த முறையிலே வைத்து இன்றும் நாம் போற்றக்கூடிய அளவு செய்து வைத்தவரும் இராசராச சோழர் தான்.

முதலாம் ராசா ராசா சோழனின் ஐந்தாவது ஆட்சி அன்று அதாவது கிபி 990 ஆம் ஆண்டில் பழைய கல்வெட்டு பற்றிய செய்தியைக் கூறுகிறது. கன்னர தேவனின் 28 வது ஆட்சியாண்டு, அதாவது கிபி 967 ஆம் ஆண்டு இத்திருக்கோவில் அணிகலன்கள் மற்றும் பண்டாரத்தில் இருந்த பொன் ஆகியவை சபா விநியோகத்திற்காக அழித்து விட்டமையால் அதற்கு ஏற்ற நிலம் வழங்கப்படுகிறது. அந்த நிலத்தின் எல்லையும் குறிக்கப்படுகிறது. நிலம் விற்றுக் கொடுத்த செய்தி கன்னர தேவரின் ஆட்சி காலத்தில் கல்வெட்டில் ஏற்றப்படாமல், முதலாம் ராசராச சோழரின் காலத்தில் தான் கல்வெட்டில் வெட்டப்படுகிறது. இக்கல்வெட்டின் முழு பகுதி கிடைக்காமல் உள்ளது.

இராசராச சோழரின் பன்னிரண்டாவது ஆட்சியாண்டு, கிபி 996 இல் திருவாண்டார் கோயிலில் வடகரை பிரம்மதேயம் திருபுவனமாதேவி சதுர்வேதி மங்கலத்து பெருங்குறி பெருமக்கள் மும்முடிச் சோழ உம்பள நாட்டு மூவேந்த வேளாளர் எடுப்பித்த மண்டபத்திலே கூடியிருந்து இத்திருக்கோயிலுக்கு வழங்கப்பட்ட நிலம் தொடர்பாக சில ஆலோசனைகளை மேற்கொள்கின்றனர். இருமுடி சோழ மூவேந்த வேளாண் என்னும் அதிகாரி திருவாறை ஆளும் பரம சுவாமிகள் ஆன திருவாண்டார் கோயில் இறைவருக்கு இவ்வூருக்கு தென்பிடாகையில் இருக்கக்கூடிய முண்டியன் வள்ளைபாக்கத்தில் நிலத்தை, பொன் கொடுத்து மகாசபையாரிடமிருந்து வாங்கி கோவிலுக்கு நிவந்தம் செய்து கொடுக்கிறார். இதனால் இந்த நிலத்திற்குரிய அத்துணை வரிகளும் விலக்கப்பட வேண்டும் என்று குறிப்பிடப்படாமல், பிற நிலங்களைப் போலவே இந்த நிலத்தின் வரியும், தரமும் இருக்க வேண்டும் என்றும், சிறிய வரிகள் வாங்க வேண்டாம் என்றும் முடிவு செய்து அதனை கல்வெட்டாக திருக்கோயிலில் பதிவு செய்கின்றனர். இக்கல்வெட்டில் மாதம் நட்சத்திரம் போன்றவை குறிப்பிடப் பெற்றிருப்பதால் இக்கல்வெட்டின் காலம் 1.12.996

ராசராச சோழரின் பனிரெண்டாவது ஆட்சியாண்டு அதாவது கிபி 997 ஆம் ஆண்டைச் சார்ந்த ஒரு கல்வெட்டு காணப்படுகிறது. இந்தப் பகுதிகளில் காணப்படக்கூடிய பெரும்பாலான கல்வெட்டுகளில் ஜெயங்கொண்ட சோழமண்டலம் என்று வருகிறது. திருவாண்டார் கோவில் பகுதி ஜெயங்கொண்ட சோழமண்டலத்தின் கீழ் இருந்திருக்க வேண்டும். இத்திருக்கோவிலை குறிப்பிடும் பொழுது வடகரை பிரம்மதேயம் திரிபுவன சதுர்வேதி மங்கலம் என்று குறிப்பிடுகிறார்கள். இறைவன் திருவாறை உடைய பரமசுவாமி என்று குறிப்பிடப்படுகிறார்.

வடகரையில் உள்ள பிரமதேயம், அதாவது பிரமதேயம் என்பது பிராமணர்களுக்குத் தானமாக வழங்கப்பெற்ற கிராமம். இந்த வடகரை பிரமதேயம் திருபுவன மாதேவி சதுர்வேதி மங்கலத்து தென்பிடாகை சிக்கல் சிக்கலுடையான்

பெருந்தாமன் நக்கன் கணிச்சனான இருமுடி சோழ மூவேந்த வேளாண் என்பவர், திருபுவன மாதேவி சதுர்வேதி மங்கலத்து மகா சபை அவர்களிடம் பொன் கொடுத்து நிலத்தை வாங்குகிறார். அந்த நிலத்தை திருவாறை ஆளும் பரம சுவாமிகளுக்கு கொடுத்ததை இந்த கல்வெட்டு தெரிவிக்கிறது .இந்த கல்வெட்டில் இவர் பொன் கொடுத்து வாங்கிய நிலத்தின் எல்லைகள் குறிப்பிடப்படுகின்றன.

ராஜகேசரி வதி அதாவது ராஜகேஷரி வதிக்கு மேற்கு என்று அந்த எல்லை ஆரம்பித்து வடவெல்லை, தென் எல்லை, கிழக்கு எல்லை ஆகியவற்றை குறிப்பிட்டு, அந்த நிலத்தினுடைய அளவையும் இக்கல்வெட்டு குறிப்பிடுகிறது.

இவ் ஊரில் தென்பிடாகையில் இருக்கும் முண்டியன் வள்ளப்பாக்கம் என்ற ஊரை விலை கொடுத்து வாங்குகிறார். இந்த ஊர் பெரும்பாலும் தற்பொழுது இங்கு இருக்கக்கூடிய முண்டியம்பாக்கமாக கூட இருக்கலாம். சாத்தனூர், இருங்கைப்பாக்கம் என்ற ஊர் பெயர்களும், ராஜகேசரி வதி, கருணாகர வாய்க்கால் என எல்லைக்கான அடையாளங்கள் குறிப்பிடப்படுகின்றன. விலை கொடுத்து வாங்கப்பட்ட இந்த நிலமானது சிறிய நிலமல்ல, மிகப்பெரிய நிலம் என்பதை இந்த நிலத்தின் எல்லையானது நமக்கு சுட்டிக்காட்டுகிறது. இந்த எல்லைக்குள் இருக்கக்கூடிய குடும்பங்கள் அதாவது ஊரின் ஒரு பகுதி நீக்கி மற்ற பகுதியை விலை கொண்டு வாங்கி கோவிலுக்கு அளிக்கிறார்.

இந்த அதிகாரியான தென்பிடாகை சிக்கல் சிக்கலுடையான் பெருஞ்சாமன் நக்கன் கணிச்சனான இருமுடிச் சோழ மூவேந்த வேளாண், முண்டியம் வள்ளப் பாக்கத்தில், அவர் வாங்கிய நிலத்தை இறைவனுக்கு காணிக்கையாக கொடுக்கிறார். மேலும் சில நன்கொடைகளையும் இறைவனுக்கு அளிக்கின்றார்.

அதாவது தினமும் உச்சி கால பூஜையில் திருவமுதுக்கு ஏற்பாடு செய்கிறார்.

நான்கு நாழி பழவரிசி கொண்டு திருவமுது செய்யவும், குருணி இரு நாழி நெல்லினை கொண்டு கரியமுது செய்யவும், கும்மாயம், பொறிக்கறி, மிளகு பொடி, புழுக்கை கறி போன்ற நான்கு வகை கறி செய்வதற்கும் , நெய், தயிரமுது, அடைக்காயமுது இவற்றையெல்லாம் கொண்டு உச்சிக்கால பூஜையை சிறப்பாக நடத்திட வேண்டும் என்று சொல்கின்றார்.

இறைவனுக்கு திருமேனிப் பூச்சாக அதாவது சந்தன அலங்காரம் செய்வதற்கு சந்தனம் உழக்கு அளிக்கின்றார்.

தினமும் நந்தா விளக்கு ஒன்று எரிப்பதற்கு உழக்கு எண்ணெயை அளிக்கின்றார்.

திருப்பதிகம் பாடுவார் இருவருக்கும், திருநந்தவனத்தில் நீர் இறைப்பவர்களுக்கும் ஆடைகளும் நெல்லும் அளிக்கின்றார்.

நந்தவனக் குடிகள் இருவருக்கு நெல்லும் ஆடையும் அளிக்கின்றார்.

மடை விடுவான் ஒருவருக்கு நெல் நான்கு நாழி அளிக்கின்றார்.

திருவாறையாள்வார் திருச்சுற்று மாளிகையில் இருக்கக்கூடிய சூரியதேவருக்கும் திருவமுது, கரியமுது, நெய் அமுது, நிதமும் படைப்பதற்கு தேவையானவற்றை செய்கின்றார்.

மேலும் இத்திருக்கோவில் வரும் பக்தர்கள் உண்பதற்கு நான்கு வகை கறி அமுதும், நெய், மோர், பாக்கு, வெற்றிலை இவற்றையெல்லாம் அவர்களுக்கு வழங்குவதற்கும் ஏற்பாடு செய்கின்றார்.

சாலை அடுவானுக்கும் நெல் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்கின்றார்.

இவருடைய தந்தை பிறந்த நாளான சித்திரை புனர்பூச நாளன்று 108 கலசம் கொண்டு திருவாறை ஆளும் பரம சுவாமிக்கு அபிஷேகம் செய்வதற்கு ஏற்பாடு செய்கின்றார். கலப் பழவரிசி கொண்டு பெருந்திருவமுது செய்ய ஏற்பாடு செய்திருக்கின்றார்.

கரியமுது , நெய் அமுது, அடைக்காய் அமுது போன்றவற்றைப் படைத்து பெருந் திருவமுது செய்து மக்களுக்கும் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்திருந்திருக்கின்றார்.

இதற்கான நெல் 20 கலத்தை தனியாக கோவிலுக்கு கொடுக்கின்றார். ஆயிரம் கலம் நெல் திருவாறை ஆள்வாருக்கு கொடுக்கின்றார். இவையனைத்தும் முண்டியம் வள்ளப் பாக்கத்தில் இருக்கக்கூடிய அந்த நிலத்தில் வரும் வருமான மூலம் செய்கின்றார்.

ஒரு கிராமத்தையே விலைக்கு வாங்கி அதன் மூலம் இறைவனுக்கும், கோவில் மூலமாக மக்களுக்கும் தொண்டு செய்யக்கூடிய இத்தகைய மகத்தான அதிகாரிகளை அன்று இராஜராஜ சோழன் பெற்றிருந்தார் என்பது இந்த கல்வெட்டு மூலம் புலனாகின்றது.

அரசன் மட்டுமல்ல அதிகாரிகள், மக்கள் என்று எல்லா தரப்பினரும் இறைவனுக்கு அளிக்கும் கொடையினை கல்வெட்டுகள் மூலம் இன்றும் அவர்களை நாம் நினைக்குமாறு செய்த செயல் பெறுதற் கரிய பேறு ஆகும்.

முதலாம் இராசராசரின் 27-வது ஆட்சி ஆண்டு அதாவது கிபி 1012 இல் உள்ள கல்வெட்டில் இப்பகுதியானது ஜெயங்கொண்ட சோழ மண்டலத்து பிரம்மதேயம் திரிபுவனமாதேவி சதுர்வேதி மங்கலம் என்று குறிப்பிடப்படுகிறது. இராசராச சோழரின் காலத்தில் தான் இப்பகுதி ஜெயங்கொண்ட சோழமண்டலத்துடன் இணைக்கப்பட்டுள்ளது என்ற செய்தியை அறிய முடிகிறது. இக்கல்வெட்டு இராசராச சோழரின் "திருமகள் போல பெருநிலச் செல்வியும்..." என்னும் மெய்கீர்த்தியுடன் தொடங்குகிறது.

திருவாறை உடைய பரம சுவாமிகளுக்கு இவ்வூர் கீழ் பிடாகையான மருதூரான பரகேசரி நல்லூரில் இருக்கும் வெள்ளாளன் நென்மலி உடையான் அடிகள் சூரியன் என்பவர் இராசராச சோழரின் 26 ஆவது ஆட்சி ஆண்டிலே நந்தா விளக்கு எரிப்பதற்காக 90 ஆடுகள் கொடுத்துள்ளார். மேலும் இவ்வூரில் இருக்கக்கூடிய மெள்ளாட்டி நக்கன் கண்ணவடி என்பவரும் நந்தா விளக்கு எரிக்க 90 ஆடுகள் கொடுத்துள்ளார். இவ்விரண்டு செய்திகளும் ராசராச சோழரின் 27 ஆவது ஆட்சி ஆண்டிலே கல்வெட்டாக எடுக்கப்படுகிறது.

முதலாம் இராசராச சோழரின் ஒரு கல்வெட்டு சிதைந்த பகுதியாக கிடைக்கிறது. மெய் கீர்த்திகள் இக்கல்வெட்டு முதலாம் இராசராசரின் கல்வெட்டிற்கு சான்றாக நிற்கின்றன. செயங்கொண்ட சோழ மண்டலத்து எனும் வார்த்தை இதில் பயின்று வருகிறது. உச்சிகால பொழுதில் இத்திருக்கோயில் பரம சுவாமிகளுக்கு திருவமிர்துக்கு நிலம் கொடுத்த செய்தியை இக்கல்வெட்டு தாங்கி நிற்கிறது.

"முதலாம் ராசேந்திர சோழர்"

பரகேசரி எனும் பட்டப் பெயருடன் ஆட்சி செய்த முதலாம் ராசேந்திர சோழரின் இரண்டு துண்டுக் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. இந்த இரண்டு துண்டுக் கல்வெட்டுகளிலுமே மெய் கீர்த்தி மட்டுமே இடம்பெற்றுள்ளது. அதில் ஒரு துண்டு கல்வெட்டில் ஜெயங்கொண்ட சோழமண்டலம் என்ற வார்த்தை வந்துள்ளது. திருவாண்டார் கோயில் இராஜராஜ சோழர் காலத்திற்குப் பிறகு ஜெயங்கொண்ட சோழமண்டலத்தில் இருந்ததை இக்கல்வெட்டும் உறுதி செய்கிறது.

"முதலாம் இராசாதி ராசர்"

முதலாம் ராசேந்திரரின் காலத்திலேயே தந்தையுடன் சேர்ந்து ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருந்த முதலாம் இராசாதி ராசரின் இரண்டு கல்வெட்டுக்கள் இக்கோயிலில் காணப்படுகிறது. முதலாம் ராசாதிராசன் கிபி 1018 முதல் 1054 வரை ஆட்சிப் பொறுப்பில் இருந்தார். முதலாம் ராசாதிராசரின் 27 ஆவது ஆட்சி ஆண்டு அதாவது கிபி 1045இல் ஒரு கல்வெட்டும், மூன்று துண்டு கல்வெட்டுகளும் கிடைக்கின்றன. இவர் ராஜகேசரி என்ற பட்டப் பெயருடன் ஆட்சி செய்தார்.

முதலாம் ராசாதி ராசரின் 27 ஆவது ஆட்சி ஆண்டில் இப்பகுதியானது ராஜேந்திர சோழ வளநாட்டின் நிர்வாகப் பிரிவின் கீழ் கொண்டு செல்லப்படுகிறது. எனவே தொண்டை மண்டலத்திலிருந்து ராஜேந்திர சோழ வளநாடு எனும் பகுதிக்கு மாற்றப்படுகிறது. வளநாடு எனும்

சொல் தொண்டை மண்டலத்தில் பயன்படுத்தப்படுவது கிடையாது. பராந்தகர் காலத்தில் உள்ளது போல அதே திரிபுவனமாதேவி சதுர்வேதி மங்கலம் என்று அழைக்கப்பட்டிருக்கின்றது.

இவ்வூரில் எடுக்கப்பட்ட பெரும்பாலான முடிவுகள் மூவேந்த வேளாளர் எடுப்பித்த மண்டபத்தில் வைத்து மேற்கொள்ளப்பட்டு இருக்கிறது. முதலாம் ராசாதிராசர் காலத்திலும் இவ்வூர் பெருங்குறி பெருமக்கள் எல்லாம் உம்பள நாட்டு மூவேந்த வேளாளர் எடுப்பித்த மண்டபத்திலிருந்து சில முடிவுகளை மேற்கொண்டுள்ளனர். இக்கல்வெட்டு முற்றுப் பெறாத நிலையில் உள்ளதால் இவர்களின் முழுமையான முடிவு பற்றி அறிவதற்கு வாய்ப்பு இல்லாமல் உள்ளது. தரம் இடப்படாத சில நிலங்களுக்கு வரி வாங்குவது தொடர்பாக ஆலோசனை மேற்கொள்ளப்பட்டிருக்கிற செய்தியை அறிய முடிகிறது. மேலும் முதலாம் இராசாதிராச சோழரின் மூன்று துண்டு கல்வெட்டுகளில் ஒரு துண்டு கல்வெட்டு நந்தா விளக்கு தொடர்பாக செய்தியை தாங்கி நிற்கின்றது.

இவரின் காலத்திற்குப் பிறகு வந்த சோழப் பேரரசர்களின் கல்வெட்டுகள் பெரும்பாலும் கோயிலில் காணப்படவில்லை. ஆட்சி ஆண்டுகளின் அடிப்படையிலேயே முதலாம் குலோத்துங்கரின் இருபதாவது ஆட்சி ஆண்டு கிபி 1090 சார்ந்த ஒரு கல்வெட்டு காணப்படுகிறது.

“முதலாம் குலோத்துங்கர்”

புகழ் மாது விளங்க என்னும் மெய் கீர்த்தியுடன் கல்வெட்டு தொடங்குவதால் மூன்று குலோத்துங்கச் சோழர்களில், இது முதலாம் குலோத்துங்க சோழருடைய கல்வெட்டு என்று உறுதியாக கூற இயலும் வகையில் இக்கல்வெட்டு அமைந்துள்ளது. இவருடைய காலத்திலும் இப்பகுதி திரிபுவனமாதேவி சதுர்வேதி மங்கலம் என்று அழைக்கப்பட்டுள்ளது. பரந்தகர் காலம் தொட்டு இப்பகுதி சதுர்வேதிமங்கலமாகவே இருந்துள்ளது. இருப்பினும் பெரிய நிர்வாக அமைப்புகளைக் காணும் போது முதலாம் குலோத்துங்கர் காலத்திலும் இப்பகுதி ராஜேந்திர வளநாட்டு, விழுப்பறைய நாட்டு பகுதியில் இருந்துள்ளது. இவர் காலத்தில் இப்பகுதி திருக்கோயில் இறைவர் திருவையாறுடைய மகா தேவர் என்று குறிப்பிடப்படுகிறார். இன்று திருத்தல இறைவர் பஞ்சநதீஸ்வரர் என்று அழைக்கப்படுகிறார்.

இப்பெயர் மாற்றம் முதலாம் குலோத்துங்க சோழர் காலத்தில் ஏற்பட்டுள்ளது அறிய இயலுகிறது. கால அடிப்படையில் முதலாம் ராசாதி ராசன் காலத்திற்குப் பிறகு, முதலாம் குலோத்துங்கரின் 20 ஆவது ஆட்சியாண்டு கல்வெட்டு காணப்படுவதால் இதற்கு இடைப்பட்ட காலத்தில் திருவாறை ஆள்வாரின் பெயரானது திரு ஐய்யாற்றுடைய மகாதேவர் என்று பெயர் மாற்றம் கண்டு இருக்கின்றது. அந்தப் பெயர் தான் தற்பொழுது பஞ்சநதீஸ்வரர் என்று இத்தல இறைவருக்கு வழங்கப்பெறுகிறது.

திரு ஐய்யாறுடைய மகா தேவருக்கு இதே ஊரைச் சேர்ந்த வீரசிகாமுகச்சேரி சாத்தமங்கலத்து கூத்தபிரான் அடிகணம்பி என்பவர் கிளி நங்கை சாணியிடம் திருநந்தா விளக்கு எரிப்பதற்காக 90 ஆடுகள் கொடுக்கிறார்.

இவருடைய காலத்திற்குப் பிறகு வந்த விக்கிரம சோழரின் மெய்க்கீர்த்தி பகுதியை கொண்ட ஒரு துண்டு கல்வெட்டு காணப்படுகிறது. இவை தவிர இரண்டாம் குலோத்துங்கனின் மெய்க்கீர்த்தியினை சிறு சிறு பகுதிகளாகக் கொண்ட துண்டு கல்வெட்டும் இத்திருக்கோவிலில், சிதைந்த அம்மன் கோயில் பகுதியில் காணப்படுகிறது.

“தொகுப்புரை”

இவ்வாறு சோழர்கள் காலத்தில் நிர்வாக வசதிக்காக தொண்டைமண்டலம் மற்றும் ராஜேந்திர வள நாட்டு பகுதிகளில் இத்திருக்கோவில் அமைந்து இருந்துள்ளதை அறிய முடிகிறது.


திருக்கோயிலில் காணப்படும் கல்வெட்டுகளில் நிறைய வாய்க்கால்கள், வதிகள், கண்ணாறு ஆகியவை கூறப்படுகிறது. ஆகவே

இப்பகுதி வயல்வெளி நிறைந்த விவசாயம் செழித்திருந்த பகுதியாக இருக்கவே வாய்ப்பு இருக்கின்றது.

இத்திருக்கோவிலை ஒட்டி அமைந்த பாகூர், திருப்புவனை திருத்தலத்திலும் சோழர்கள் காலத்து கல்வெட்டுக்கள் நிரம்ப காணப்படுகின்றன.

முதலாம் குலோத்துங்கர் காலத்தில் இத்திருத்தலத்து இறைவனுக்கு வழங்கப்பட்ட பெயரே தற்பொழுதும் வழங்கப்பட்டு வருவது வியப்பிற்குரிய செய்தியாக உள்ளது.

வயல்வெளி சூழ்ந்து, சதுர்வேதி மங்கலத்து சபையோரால் நிர்வாகம் செய்யப்பெற்று, மன்னர்களின் நிவந்தங்களையும் கொடைகளையும் பெற்று, வடுகூர் அடிகள், திருவாறை ஆழ்வார் என்ற பெயர்களை எல்லாம் பெற்று, திரு ஐய்யாற்றுடைய மகாதேவர் என்னும் பஞ்சநதீஸ்வரராக இன்றும் வயல் சூழ, விழுப்புரம் பாண்டிச்சேரி நெடுஞ்சாலையில், வடுகூர் அடிகளார் சிறப்புற கோயில் கொண்டுள்ளார்.





நா. நாராயண மூர்த்தி,
உதவிப் பொறியாளர்,
வேளாண்மைப் பொறியியல் துறை,
கீரனூர்,
புதுக்கோட்டை மாவட்டம்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் சில நினைவு தூண்கள்

(பகுதி - 1)

தம்முடன் வாழ்ந்து மறைந்த சக மனிதர்களின் நினைவுகளை போற்றுதல் என்பது மனித இனத்தின் தொன்மையான பண்பாடாகும். உலகம் முழுவதும் நமக்கு கிடைக்கும் தொன்மையான பெருங்கற்படை சின்னங்களே அதற்கு சான்று. ஈமச் சின்னங்களில் தொடங்கி நடுகற்கள், நினைவு தூண்கள் என இன்றைய கண்ணீர் அஞ்சலி சுவரொட்டி வரை இந்த நெடிய பண்பாட்டு தொடர்ந்து வருகிறது.

தொல்லியல் சிறப்பு மிக்க புதுக்கோட்டை மாவட்டத்தில் இந்த பண்பாட்டை பொறுத்தவரையில், தொன்மையான வரலாற்று காலத்திற்கு முந்தைய பெருங்கற்படை சின்னங்களை நீங்கள் எங்கு திரும்பினாலும் காணலாம். சுமார் 150 க்கும் மேற்பட்ட இடங்களில் **குரங்குப்பட்டறை, குரங்குப்படை, கல்லாங்குத்து** *என பல பெயர்களில் இந்த நீத்தார் நினைவு சின்னங்கள் காணப்படுகின்றன.*

ஆனால் அதன்பின் வரலாற்று காலத்தில் தமிழகத்தில் தொடர்ந்த வீரர்களுக்கு உருவத்துடன் கூடிய நடுகல் எடுக்கும் மரபு இங்கு பெரிய அளவில் நடைமுறையில் இருந்திருக்கவில்லை போலும். ஏனெனில் அரிதாக **வாழைக்குறிச்சி, நாங்குப்பட்டி, குன்றாண்டார்கோவில், இலுப்பூர், கீழக்குறிச்சி, நார்த்தாமலை** *என சில இடங்களில் மட்டுமே வீரர்களின் உருவகங்கள் பொறித்த நடுகற்கள் காணப்படுகின்றன.*


எனில் இடைக்காலத்தில் உயிர் நீத்த வீரர்களின் நினைவை இம்மக்கள் போற்றவில்லையா எனில், கண்டிப்பாக போற்றியுள்ளனர் நினைவு தூண்கள் வாயிலாக.

கடந்த ஜூன் மாதத்தில் நமது ஆர்வலர் குழு புதுக்கோட்டை மாவட்டம் குளத்தூர் வட்டம் கிள்ளனூர் கிராமத்தில் மூன்று கல்வெட்டு தூண்களை உள்ளூர் நண்பர்கள் உதவியுடன் கண்டெடுத்தது. இந்த தூண்களின்

1.சோறன் சோழன் ஆன இளஞ்சிங்க பேரையன்

2. சோறன் ....யன் ஆன தெங்குல தரையன்

3. திருவன் மாயியான வளநாடன்







என் பெயர்கள் பொறிக்கப்பட்டிருந்தன. எழுத்தமைதியை கொண்டு இவை கி.பி 13 ம் நூற்றாண்டை சேர்ந்ததாக இருக்கலாம் என கருதப்படுகிறது. தற்போது உடைந்து கிடக்கும் இந்த தூண்கள் கிள்ளனூர் பூவன் ஊரணி கரையில் சில ஆண்டுகளுக்கு முன்பு வரை ஊன்றி வைக்கப்பட்டிருந்ததாக உள்ளூர் மக்கள் தெரிவித்தனர். மேலும் கிள்ளனூர் மற்றும் சுற்று கிராமங்களில் வைகாசி மாதத்தில் ஊர் ஆண்கள் படை வீரர்கள் போல கைகளில் வாள் மற்றும் ஈட்டிகளை போன்ற மூங்கில் கம்புகளுடன் அணிவகுத்து செல்லும் **பிலி சோறு எறிதல்** நிகழ்வு பன்னெடுங்காலமாக நடைபெற்று வருவதாக தெரிவித்தனர்.

எனில் இந்த கல்வெட்டு தூண்கள் ஒருவேளை வீரர்களின் பெயர்களை தாங்கி நிற்கும் நினைவு தூண்களாக இருக்குமோ என்ற ஐயப்பாட்டில் மாவட்டத்தில் வேறு எங்கும் இது போன்று நினைவு தூண்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதா என தேடுகையில், மாவட்டத்தில் பலவேறு இடங்களில் இது போன்ற தூண்கள் கல்வெட்டுகளுடன் ஒரு பொதுவான வடிவமைப்பில் ஊன்றப்பட்டிருப்பது தெரியவந்தது. இவற்றில் பெரும்பாலான நினைவு தூண் கல்வெட்டுகளை மாவட்டத்தின் மூத்த தொல்லியல் ஆய்வாளரான திரு. கரு. இராசேந்திரன் ஐயா அவர்கள் பதிவு செய்திருக்கிறார்.

இந்த கல்வெட்டு தூண்கள் அனைத்தும் அடிப்பகுதியில் சதுரம் அல்லது செவ்வகம், நடுவில் எண்பட்டை தூண் வடிவம், கழுத்தில் வரந்தை கோடுகள் மற்றும் தலைப்பகுதி வட்ட வடிவம் என பொது அமைப்பில் காணப்படுகின்றன. மேலும் இடத்திற்கு ஏற்ப சிறு சிறு மாறுபாடுகளும் உள்ளன. மாவட்டத்தின் மேற்கு வட்டங்களில் அதிக அளவில் இந்த கல்வெட்டு நினைவு தூண்கள் ஊன்றப்பட்டுள்ளன. இந்த தூண்களை அவற்றில் உள்ள செய்திகள் மற்றும் வடிவமைப்பை கொண்டு நான்கு வகைகளாகப் நாம் பிரிக்கலாம். அவை

1. **தலை நீராழிக் கால்கள்**
2. **பெயர்கள் மட்டும் பொறிக்க தூண்கள்**
3. **உருவ பொறிப்பு உள்ள தூண்கள்**
4. **கல்வெட்டு இல்லாத தூண்கள்**


ஒவ்வொரு வகை நினைவு தூணும் சொல்லும் செய்திகளை அடுத்தடுத்த பகுதிகளில் காண்போம்.


- தொடரும்.

அன்புடன்,


நா. நாராயணமூர்த்தி.

நன்றி: புதுக்கோட்டை வட்டாரக் கல்வெட்டுகள், திரு. கரு. இராசேந்திரன் - 2017























- தோட்டக்கள்ளன் - INDIAN PITTA -

சிறகுகள் விரியும்



சரவணமணியன்.ப.அ
பொறியாளர்
சூழலியலாளர், வரலாற்று ஆர்வலர்,
காளையார்கோவில்

INDIAN PITTA - PITTA BRACHYURA

CONSERVATION STATUS: LEAST CONCERN

(POPULATION DECREASING)

உடல் பச்சை, நீலம், கருப்பு ஆகிய நிறங்களிலும், மார்பு மற்றும் வயிறு செம்பழுப்பு நிறத்திலும், குட்டையான வாலின் அடிப்பகுதி குங்கும சிவப்பாகவும், தொண்டை வெண்மை நிறத்திலும், புருவக்கோடுகள் இளம்பழுப்பு மஞ்சள் நிறத்திலும், நீண்ட கால்கள் பழுப்பு நிறத்திலும், உச்சந்தலை லேசான பழுப்பு மஞ்சள் நிறத்திலும் னு ஒன்பது வண்ணங்களில் காணப்படும் இவர்தான்ங்க **தோட்டக்கள்ளன்.**



“வாழிடமும் உணவு முறையும்”

இமயமலை, வட இந்தியா மற்றும் அதை ஒட்டிய நேபாள், பாகிஸ்தான் மற்றும் மியான்மார் பகுதிகளில் மட்டுமே வாழுகின்ற ஓரிடவாழ்வி பறவைங்க*(endemic bird)* இவர். குளிர்காலங்களில் இமயமலையிலிருந்து கிழக்கு மாவட்டங்களின் வழியாக இலங்கை வரை வலசை போறவர நீண்ட நாள் தேடலுக்கு பின்னர் ஒருவழியாக ரசித்து பார்த்து கவர்ந்து வந்தாச்சுங்க.

அடர்த்தியான பரந்த சமவெளிக்காடுகளிலும், கிழக்கு மற்றும் மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதிகளிலும், நீரோட்டம் உள்ள தாழ்வான பகுதிகளிலும், தோட்டங்களிலும் இவரை பார்க்க முடியுதுங்க. மரக்கிளைகளின் கீழ் தரையில் ஊர்ந்து செல்லும் பூச்சிகளையும், சிலந்திகளையும், நத்தைகளையும், மண்ணை கிளரி வெளிப்படும் புழுப்பூச்சிகளையும் விரும்பி சாப்பிடுறதை பார்க்க முடியுதுங்க.

அதிகாலை மற்றும் அந்திமாலை வேளைகளில் சுமார் ஆறு மணியளவில் இவர் உற்சாகமாக வீஇட்டியு.. வீஇட்டியு.. என சீழ்க்கை எழுப்புவதை கேட்க முடியுதுங்க. அதன்பின்னர் மரக்கிளைகளில் இரவில் அடைந்து கொள்றாப்ள. பகல் நேரங்களில் இவரை பார்ப்பது வெகு அரிதுங்க.



“நாட்டுப்புற பாடல்”

இவரை பற்றிய நாட்டுப்புறப் பாடலும் உண்டுங்க.



ஆட்டான் குருவி ஆடாதே, காட்டுக்கு கரைக்கு போகாதே...

பிடிச்ச காட்டுல விடமாட்டேன், பிடிக்காத காட்டுல விட்டுவிடுவேன்...

பொன்னான் தட்டான் குருவியே,

பொழுது பட்டால் வருவியே,

சுக்குத்தானை கண்டவுடனே,

சுருண்டு சுருண்டு விழுவியே..

"வட்டார வழக்கு பெயர்கள்"

இவருக்கு பொன்னுத்தொட்டான் - தோட்டக்கள்ளன் - ஆறுமணிக் குருவி - பஞ்சவர்ணக் குருவி - காளி - பச்சைக் காடை - மொட்டைவால் குருவி - காசிக்கட்டிக் குருவி - கஞ்சால் குருவி - காச்சில் குருவி - மின்னல் குருவி - காத்தளாச்சி - காசுக் கரடி - சருகு திருப்பி என தமிழில் பல வட்டார வழக்கு பெயர்களும் காரணப்பெயர்களும் உண்டுங்க.

சிறகுகள் விரியும் 🥰

அன்பன்,

ப.அ.சரவண மணியன்




PHOTOGRAPHY

இலங்கையின் வரலாற்றுக்கு முற்பட்ட பாறை ஓவியங்கள்



நெடுங்கேணி சானுஜன்
BA(Hons) in History (spl), MA
இலங்கை

வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் வாழ்ந்த மக்களால் வரையப்பட்ட ஓவியங்களே வரலாற்றுக்கு முற்பட்ட கால ஓவியங்களாகக் கருதப்படுகின்றன. வரலாற்றுக்கு முற்பட்ட கால ஓவியங்களை உலகெங்கும் காணக்கூடியதாக இருக்கின்றது. இலங்கையிலும் பல பிரதேசங்களில் இதுவரை வரலாற்றுக்கு முற்பட்ட (54) இடங்களில் ஓவியங்கள் உள்ளன. இவை பாறை ஓவியங்கள் அல்லது கல் ஓவியங்கள் (Rock Art) எனப்படுகின்றன. இவ்வகை ஓவியங்கள் உள்ள முக்கியமான இடங்களாக👇

கொனத்தேகொட கல்கே, பில்லேவ, ஆண்டியாகல, தந்திரிமலைக் குகைகள், தொரவக்கந்த குகை, கதுருபொக்குண குகை, பிகில்லேகொட, திம்புலாகல, அரங்கொட கல்கே, ரஜகல கன்த, கொனாகொல்ல தொறவக்க, பிஹில்லே கொட, கொனத்தேகொட கல்கே, புஞ்சிகிரி அம்மா கல்கே, உமாகே கந்த, ஹுலன்னுகே, அலுகல்கே, புது கல்கே, குடிம்பிகல, லிகினியாகல, மகுல் மகாவிகாரை, ஹக்பெலிகந்த, வெட்டம்பிகல, பியன்கல, ரஜகல, ஹுலுகல்கே, தொவக்கந்த, ஊராகந்த போன்ற இடங்களாகும்.

இலங்கையில் வரலாற்றுக்கு முற்பட்ட காலப்பகுதி ஓவியங்களை தொல்பொருள் ஆய்வாளர் **எச்.சீ.வீ. பெல்** என்பவரே முதன் முதலில் கண்டுபிடித்தார். இவர் 1897இல் கொனத்தேகொட கல்கேயில் வேடுவர்களால் வரையப்பட்டவை என்று கூறியுள்ளார். 1910 ஆம் ஆண்டு ஜோன் ஸ்டீல் அவர்களால் வட மத்திய மாகாணத்தில் பில்லேவ,

ஆண்டியாகல, தந்திரிமலைக் குகைகள் கண்டுபிடிக்கப்பட்டன. 1917 இல் P.F.R.பிறெளனின் என்பவரால் தொரவக்கந்த குகைகளில் உள்ள கற்பாறையைக் குடைந்து வரையப்பட்ட ஓவியங்களும் (Engraving) பல்வேறுபட்ட குறியீடுகளும் கண்டுபிடிக்கப்பட்டன. சிரான் தெரணியகல என்பவரால் 1950 இல் கதுருபொக்குண குகையில் பலவித விலங்குருவங்கள் அதிகளவில் கண்டுபிடிக்கப்பட்டன. மேற்படி ஆய்வாளர்களின் கருத்துகளுக்கு அமைவாக இவை கற்கால வேடுவர்களால் அல்லது வரலாற்றுக்கு முற்பட்ட மனிதர்களால் வரையப்பட்டவையாகும். பெல் மற்றும் இசெட் செலிக்மான் அம்பாறை மாவட்டத்தில் பிகில்லேகொட வேடுவர்களுடனும் 1910 இல் ஜோன் ஸ்டீல் தந்திரிமலை பகுதி வேடுவர்களுடனும் கலந்துரையாடி இவ் ஓவியங்கள் பற்றிய ஆய்வுகளைச் செய்துள்ளனர்.

அதிகளவான குகைகளில் வரலாற்றுக்கு முற்பட்ட காலப்பகுதிக்குரிய ஓவியங்கள் காணப்பட்டதாகப் பதிவாகியுள்ள போதிலும் தற்போது பெரும்பாலான ஓவியங்கள் சிதைவடைந்ததுமுள்ளன. அல்லது மனிதர்களின் செயற்பாடு காரணமாக சிதைவடைந்த வண்ணமுள்ளன. அவற்றுள் நல்ல நிலையில் உள்ள ஓவியங்கள் ஒரு சில இடங்களில் அதாவது பில்லேவ, தந்திரிமலை, தொரவக்கந்த, வெட்டம்பிகல ஆகிய இடங்களில் காணப்படுகின்றது.

இலங்கையின் வரலாற்றுக்கு முற்பட்ட கால ஓவியங்கள் (01) இயற்கை தொடர்பான உணர்வுகளை ஏற்படுத்தும் உருவங்கள், (02) இயற்கை தொடர்பான உணர்வுகளை ஏற்படுத்தாத உருவங்கள் ஆகியவையாகும். இவற்றுள் முதலாம் வகையைச் சேர்ந்த உருவங்களாக யானை, மரை, மான், சிறுத்தை, உடும்பு போன்ற விலங்குகளின் உருவங்கள் காணப்படுகின்றன. குறித்த உருவினால் காட்டப்படுவது யாது எனத் தெளிவாக இனங்காண முடியாத குறியீட்டு ரீதியான உருவங்கள் இரண்டாம் வகையைச் சேர்ந்தவையாகும். இந்த உருவங்கள் மூலம் ஆதி மனிதனின் வாழ்க்கை முறை தொடர்பான விடயங்கள் காட்டப்படுகின்றன என்பது ஆய்வாளர்களின் கருத்தாகும்.

கண்டுபிடிக்கப்பட்ட பாறை ஓவியங்களுள் கதுறுப்பொக்குண, ஆண்டியாகலை, பில்லாவை, தொரவக்கை, தந்திரிமலை போன்ற ஓவியங்கள் முக்கியம் பெற்றவையாகக் காணப்படுகின்றன. அவற்றுள் பில்லாவ பாறை ஓவியமானது வட மத்திய மாகாணத்தில் அனுராதபுர மாவட்டத்தில் பில்லாவ கற்குகை அமைந்துள்ளது. சிராண் தெரணியகல என்பாரால் 1951 ஆம் ஆண்டில் கண்டுபிடிக்கப்பட்ட இக்குகையின் ஓவியங்கள் வர்ணங்களைப் பயன்படுத்தி வரையப்பட்ட கோட்டுச் சித்திரங்களைக் காணலாம். கலப்பு ஊடகங்களைக் கொண்டு வரையப்பட்ட சில சித்திரங்கள் காணப்படுகின்றன. ஜோன்ஸ்டில் என்பவரின் கருத்துப்படி இங்கு காணப்படும் முக்கியமான படைப்பு கட்டிடமொன்றினுள் (வீடொன்றினுள்) உள்ள இரண்டு மனித உருவங்களைக் கொண்ட ஓவியமாகும். இக்குகை ஓவியங்களில் யானை, மரை, மயில் உருவங்களும் சிறப்பானவை கேத்திரகணித குறியீடுகளைக்கொண்ட உருவங்களும் இவற்றில் அடங்கியுள்ளன.


அடுத்து, தொரவக்கைக் குகை கேகாலை மாவட்ட பெலிகல் கோரளையில் வரக்காப்பொளை நகரை அண்டிய மல்தெனியா எனும் பெருந்தோட்டத்தில் அமைந்துள்ளது. இது ஒன்றை மற்றொன்று தங்கியுள்ளது போன்று ஏறத்தாழ 1500 அடி உயரமான பாரிய மலைக்குன்றுகளிரண்டினாலான இயற்கையான ஒரு கற்குகையாகும். G.M.R.புரோவியனர் என்பவர் 1919 இல் கண்டுபிடிக்கையில் நிலத்திலிருந்து 61/2 அடி உயரத்திலேயே ஓவியங்கள் தீட்டப்பட்டு இருந்தது. இவ் ஓவியங்கள், கோடுகளால் வரைந்தும், கரண்டியும் ஆகிய இரண்டு முறைகளிலும் வரையப்பட்டவையாகின்றன. இந்த குகைச் சித்திரங்களுள் சிறப்பான படைப்பாக யாளையும், யானைக் குட்டியும் எனும் படைப்பு குறிப்பிடப்பட்டுள்ளது. மீனும், மனித வடிவும், உடும்பு எனும் என்னும் முக்கியமான ஒரு

படைப்பாகக் கருதப்படுகின்றது. அத்தோடு சூரிய சந்திரனைக் காட்டும் சித்திரமொன்றும் உள்ளது.

அடுத்து, தந்திரிமலை குகை ஓவியங்கள் இலங்கை வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தைச் சேர்ந்தவை எனக் கருதப்படுகின்றன. இப்படைப்புக்களும் வில்வித்தைக்காரன், ஒரு மிருகத்தின் முதுகின் மீது செல்லும் மனித உருவமும். கட்டிடமொன்றினுள் (வீடொன்றினுள்) மனித உருவங்களைக்கொண்ட சித்திரமும் வரலாற்றுக்கு முந்திய முக்கியமான படைப்புக்களாகக் கருதப்படுகின்றது, விலங்கு உருவங்களுள் உடும்பு' எனும் உருவமும் சிறப்பானது.


தொகுப்பு✍ [நெடுங்கேணி சானுஜன்]

தொரவக்கை வரலாற்றுக்கு முற்பட்ட கால பாறை ஓவியங்கள்



பில்லாவ வரலாற்றுக்கு முற்பட்ட கால பாறை ஓவியங்கள்.





கதுறுப்பொக்குண, ஆண்டியாகலை, பில்லாவை, தந்திரிமலை வரலாற்றுக்கு முற்பட்ட பாறை ஓவியங்கள்.

தந்திரிமலை வரலாற்றுக்கு முற்பட்ட பாறை ஓவியங்கள்.






Figure 1

A scene of the painted cave at *Konattegodagalge* (*after* Bell 1907).



Figure 5

Two parallel dotted lines drawn in the *Alugalge* cave in the Ampara District, probably signifying a meandering water flow (pic. by *author*).



Figure 6

A creature identified as a crocodile and a color patch painted in close proximity seen in the cave at *Hulannuge* in the Ampara District (pic. by *author*).



Figure 7

A rectangular structure filled with dots, probably depicting a natural water pool painted on the interior wall of *Alugalge* in the Ampara District (pic. by *author*).



Figure 8

A herd of elephants painted on the interior wall of the cave in *Vettambugala* (pic. by *author*).



Figure 9

A human figure depicting as carrying water drawn at the cave in *Hulannuge* (pic. by *author*).



Figure 10

A man standing behind an animal, painted in cave number 1 in *Tantirimale* (pic. by *author*).




Figure 11

A figure of a fish engraved at the cave in *Dorawakakanda* (pic. by *author*).



Figure 12

A cluster of 'man & elephant' compound in triplicated by different hands at the cave in *Hulannuge* (pic. by *author*).




Figure 13

Some of the intricate designs painted on the interior wall at *Streepura* cave in Panama (pic. by *author*).

நாட்டு ரக மீன்கள்

அறிமுகம்



நாய் கெளுத்தி / நாய்கெளிரு.

மதுரைப் பகுதியில் **நரிக்கெளுத்தி.**

Indian Potasi.

Neotropius Atherinoides.



இந்தியாவிலும் சரி தமிழ்நாட்டிலும் சரி ஆறு, குளம், ஏரி உள்ளிட்ட நன்னீர் நிலைகளில் வாழும் முக்கியமான உணவாகும் மீனினம் **கெளுத்தி மீன்கள்** ஆகும். இதில் தமிழ்நாட்டில் பல வகைகள் உள்ளன. அதில் ஓர் வகையே இந்த நாய் கெளுத்தி ஆகும்.



திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழக பேராசிரியர் **செல்லம் பாலசுந்தரம்** தலையிலான ஆய்வுக்குழுவினர் கல்லணை, திருச்சி முக்கொம்பு உள்ளிட்ட பகுதிகளில் உள்ள காவேரி ஆற்று மீன்களையும், கொல்லி மலைப் பகுதிகளிலும் உள்ள நன்னீர் தொகுத்து ஆய்வு நிகழ்த்தியுள்ளனர்.

ஆனால் அவர்கள் இட்ட மீன்களின் வட்டார தமிழ்ப் பெயர்களில் சில முரண்பாடுகள் உள்ளன. "**நாய்க்கெளுத்தி**" என்று ***Mystus cavasius*** மீனை அடையாளப்படுத்தி உள்ளனர். ஆனால் மீன்களின் சொர்க்க பூமியான **கீழத்தஞ்சையில்** நாய்க்கெளுத்தி என பொதுவாக அழைக்கப்படுவது ***Neotropius atherinoides*** எனப்படும் இப்பதிவில் காணப்படும் மீனே.

பொதுவாக சிறுமீன்களில் நிரம்பிய ஊட்டச்சத்துகள் காணப்படுகின்றன. இந்த நாய்கெளுத்தி மீனும் பல்வேறு வகையான



இராமமூர்த்தி நாகராஜன்
வீரமரசன் பேட்டை
தஞ்சாவூர் மாவட்டம்.

ஊட்டச்சத்துக்கள் நிரம்பிய உணவு வகை மீன் ஆகும். இம்மீன் இயற்கையான சூழலில் மட்டுமே கிடைக்கின்றன.

அளவும் எடையும்:

அதிகபட்சமாக 10-15 செமீ வளரக்கூடியது. எடையும் 10-20 கிராம் அளவிலேயே இருக்கும்.





அடையாளம்:

கெளுத்தி மீன்களுக்கே உரிய அடையாளமான வாயருகே உள்ள மீசைகள் இதில் உள்ளன. பூனைபோல மீசை உள்ளதாலேயே கெளுத்தி மீன்களின் அனைத்து வகையும் பொதுவாக ஆங்கிலத்தில் *Catfish* என்று அழைக்கப்படுகின்றன.









மேலும் தலைப்பகுதியில் செவுள் அருகே இருபக்கமும் இரண்டு கூரிய முட்கள் உள்ளன. மேலும் தலையின் மேல்பகுதியில் ஒரு முள் உள்ளது. உடல் சற்று தட்டையாக காணப்படுகிறது. தலையிலிருந்து வால் வரை சற்றே கருமை நிற நீளமான கோடுகள் உண்டு. வாலின் அருகே ஒரு மச்சம் உண்டு.

உணவுமுறை:

பொதுவாக கெளுத்தி மீன்கள் அனைத்தும் ஊன் உண்ணிகளே. இம்மீனும் சிறு சிறு பூச்சி புழுக்களை உணவாக உட்கொள்கின்றன.

-நீந்துவோம்...

நன்றி!

எழுத்தும் புகைப்படங்களும்...

இராமமூர்த்தி நாகராஜன்



செப்பேடு வழி சோழர் வரலாறு



மா.மாரிராஜன்
சோழர் வரலாற்று ஆய்வுசங்கம்
காரைக்கால்

எசாலம் செப்பேடு.

இராஜேந்திரனின் 25ஆம் ஆட்சியாண்டு.

கி.பி.1037.


விழுப்புரம் அருகே உள்ள **எசாலம்** என்ற கிராமம். இக்கிராமத்தில் உள்ள **இராமநாதசுவாமி ஆலயம்**. *1987*ம் ஆண்டு ஆகஸ்ட் *11*ஆம் தேதி இக்கோவில் பராமரிப்பு பணியில் ஒரு



கற்பலகையை நகர்த்தியபோது அதனடியில் **இருபத்தாறு திருமேனிகளும், இந்த செப்பேட்டுத்** தொகுதியும் கிடைத்தது.

செப்பேட்டு விபரங்கள் தொல்லியல் அறிஞர் **ஆர்.நாகசாமி** அவர்களால் பதிப்பிக்கப்பட்டு தொல்லியல்த்துறை வெளியீடாக வெளிவந்தது.

முகப்பு இலச்சனையுடன் கூடிய *15* பட்டைகள் உள்ளன.



Esalam copper plate grant of Rajendra Chola I, (1012-1044 CE)

வழக்கமான மற்ற செப்பேடுகளில் காணப்படும் முத்திரையை விட எசாலம் செப்பேடு முத்திரையில் கூடுதல் விபரங்கள் உள்ளன.

எசாலம் செப்பேடு. முகப்பு இலச்சினை.



அமர்ந்துள்ள புலியின் முன் உள்ள இரு மீன்கள், பாண்டியர்களை வென்றதைக் குறிப்பிடும். கிடைமட்டமாய் உள்ள வில் சேரர்களை வென்றதை குறிக்கும். புலியின் பின்புறம் ஒரு விளக்குத்தாங்கி, ஒரு வாள், ஒரு அம்பு மற்றும் அங்குசமும் உள்ளது. மீனின் பின்புறம் விளக்குத்தாங்கி ,வாள் , அம்பு மற்றும் ஒரு கோடாரி உள்ளது. வில்லின் கீழே சூலம், தோரணம், மற்றும் சாளுக்கியர்களை வென்றதன் அடையளமாய் பன்றி உருவமும் காணப்படுகிறது. மேற்புரம் கொற்றக்குடையும் இருபுறம் கவரிகளும் உள்ளன. கவரிகளுக்கு மேலே ஒரு சுவஸ்திக் சின்னம் மற்றும் ஒரு சக்கரமும் உள்ளது. இச்சக்கரம் பல நாடுகளை வென்ற இராஜேந்திரனின் அடையாளமாகப் பொறிக்கப்பட்டிருக்கலாம் என்பது ஆய்வாளர்கள் கருத்து. இவ்வமைப்பு இந்த செப்பேட்டில் மட்டுமே காணப்படுகிறது.


செப்பேடு முகப்பு இலச்சினையில் இராஜேந்திரனின் சாசன சுலோகம் எழுதப்பட்டுள்ளது.

"ராஜத் ராஜன்ய மகுட ச்ரேணி ரத்னேஷூ சாஷநம்

ஏதத் ராஜேந்த்ர சோளஸ்ய பரகேசரி வர்ம்மண."

அரசர்களின் மகுடங்களில் ரத்தினம் போன்றும் திகழும் இது பரகேசரி வர்ம்மனான இராஜேந்திர சோழனின் சாசனம்.

இராஜேந்திரச் சோழனின் குருவானவர் **சர்வசிவபண்டிதர்.**


இராஜேந்திரனின் குரு சர்வசிவ பண்டிதர்.

இவர் கட்டிய **திரீவிராமீச்வரமுடையார் மகாதேவர் கோவிலுக்கு** தானங்கள் வழங்கப்பட்ட விபரமே இச்செப்பேட்டின் நோக்கம்.

வடமொழிப்பகுதி..

செய்யுள் 1 - 6

பவானி அன்னையோடு மணக்கோலம் பூண்ட பரமேஷ்வரன் உங்களுக்கு அருளட்டும்.

எழுத்துக்களின் எண்ணிக்கையோ ஐம்பதுததான். சூரியகுல சோழர்களின் நற் குணங்களோ எண்ணிக்கையை கடந்து இருக்கிறது. இந்த எழுத்துக்களைக் கொண்டு அவர்களின் பெருமையை எவ்வாறு கூறுவது. கலைமகளே, இவ்விடயத்தில் எனக்கு மேலும் சில எழுத்துக்களைக் கொடுத்து அருள் புரிவாயக.

கதிரவனுக்கு மகனாக மனு. அவனுக்கு இட்சுவாகு. அவனுக்கு முசுகுந்தன். அவனுக்கு மகனாக வளபன்.

அந்தக்குலத்தில் இராசகேசரி என்னும் மன்னன் தோன்றினான். அவனுக்கு மகனாக பரகேசரி பிறந்தான். அவன் எதிரிகளின் தொகுதியாகிய கடலுக்கு அகத்தியரை போன்றவன். இவர்களின் பெயர்களைக் கொண்டே சோழர் குலத்து அரசர்களின் ஆணை பிறப்பிக்கப்பட்டது.

செய்யுள் 7 - 11

அந்த வம்சத்தில் கரிகாலன் தோன்றினான். அவனுடைய ஆணையால் அரசர்கள் காவிரிக்கு கரை எடுத்தனர்.

அந்தப்பெருங்குலத்தில் இணையற்ற தோள்வலிமையுடைய விஜயாலயன் பிறந்தான். அவனுக்குப்பிறகு அவனுடைய மகனான ஆதித்தன் இப்புவியைக் காத்தான். ஆதித்தனுக்கு பராந்தகன் மகனாகப் பிறந்தான். சிதம்பரத்தில் எழுந்தருளியிருக்கும் பரமனுக்கு தங்கத்தால் கோவில் செய்தான். அவனிடத்தில் அரிந்தமன் தோன்றினான். அவனுக்கு பராந்தகன் (சுந்தரச்சோழன்) பிறந்தான்.

செய்யுள் 12 - 15

சுந்தரனுக்கு, திருமாலே அவதரித்தது போல் அருண்மொழிவர்மன் பிறந்தான். அவனுடைய கைகளில் வாழும் ரேகை வடிவில் சங்கும் சக்கரமும் இருந்தன.

அவன் கங்கம், வங்கம், கலிங்கம், மகதம், சிங்களர், ஆந்திரர், இரட்டர்கள் கேரளம், பாண்டியம், முதலிய எல்லா அரசர்களையும் வென்றான். தான் வென்ற செல்வத்தைக் கொண்டு தஞ்சையில் சிவனுக்கு இராசராசேச்சரம் என்னும் கோவில் எடுத்தான்.

அவனுடைய தமயனான கரிகாலன் போரில் பாண்டிய மன்னனை வென்று அவன் தலையை துண்டித்தான். துண்டிக்கப்பட்டத் தலையை தஞ்சை வாயில் மரத்தில் நட்டு வைத்தான்.

இராசராசனுடைய சிறியதந்தையான மதுராந்தகன் கலியின் வலிமையால் சாஸ்திரம் நழுவியதை சரிசெய்ய அவனுருவில் அவதரித்ததாகக் கூறுவர்.

செய்யுள் 16 - 20

இராஜராஜனின் மகன் இராஜேந்திரன். அழகின் மொத்த வடிவம். துணிவு, அறிவு, கருணை இவற்றின் பிறப்பிடம்.

சாளுக்கிய மன்னன் ஜெயசிம்மனை வென்றான். கடினமின்றி கங்கையை தன் நாட்டுக்கு கொண்டு சென்றதால் அவன் பகீரதனை வென்றவனாவான்.

தன்னால் நிறுவப்பட்ட கங்கை கொண்ட சோழபுரத்தில் சிவனுக்குக் கோயில் எடுத்தான்.

மதுராந்தகனுக்கு குருவாக, ஆகமங்களில் கரைகண்ட சிவபெருமானுக்குச் சமமான சர்வசிவாச்சார்யார் என்னும் பெயருடையவர் இருந்தார். அறிஞர்களின் நிதி போன்றவர் அவர்.

செய்யுள் 21 - 35

ஜெயங்கொண்ட சோழமண்டலத்தில் இராசராசசதுர்வேதி மங்கலம் என்னும் பெயருடைய கிராமம் உள்ளது.

இராஜேந்திரனின் குருவான அவர் எய்தார் என்னும் ஊரில் இராமேச்வரம் என்னும் பெயரில் சிவனுக்கு ஒரு கோவில் எடுத்தார். பவானியின் கணவனான பரமேச்வரன் கைலாயத்தை மறந்து இக்கோவிலில் வசித்தார். இராஜராஜனின் மகனான மதுராந்தகன் காஞ்சியில் வீற்றிருந்தான்.

தனது இருபத்துநான்காவது ஆட்சியாண்டில் இராமேச்வரத்தில் குடிகொண்ட தேவருக்கு பூஜைக்காக நிலங்களை வழங்கினான். பிடிசூழ்தல் முதலான பணிகளைத் துவங்க ஆணையிட்டான். பனையூர் நாட்டில் நன்னாடு மற்றும் மேல்பாக்கம் என்ற பெயரையுடைய இரு கிராமங்களை இணைத்து விக்ரமச்சோழநல்லூர் எனப்பெயரிட்டு மகிழ்வோடு சிவனுக்கு அளித்தான் விக்ரமச்சோழதேவனான இராஜேந்திரன்.

அவனுடைய இருபத்தைந்தாவது ஆட்சியாண்டு முந்நூற்று எழுபத்தைந்து நாளில் அதிகரண புத்தகத்தில் எழுதினர்.

அவனது குரு இத்தானத்திற்கு விண்ணப்பம் செய்தவராவார். இராமனின் மகனான ஜனநாதன் என்பவர் மத்யஸ்தன் ஆவார்.

சங்கரனின் மகனான நாரயணன் என்னும் கவியால் இந்த சாசனம் செய்யப்பட்டது.

தமிழ்ப்பகுதியில்....

கோனேரின்மை கொண்டான் 25ம் ஆட்சியாண்டில் பத்தாம் நாள்.. காஞ்சிபுர வீட்டில் இருந்து ஆணை பிறப்பித்தான் இராஜேந்திரன்.

பிடிசூழ்தல் வேலை நடைபெற்ற விபரங்கள் உள்ளன.

பனையூர் நாட்டு இராசராச சதுர்வேதிமங்கலம்.. அந்நாட்டு வேறளந்த நன்னாடு ஏர்பாக்கமும் இணைந்து விக்ரமச்சோழ நல்லூர் எனப்பெயரிடப்பட்டது.

இவ்வூர் எய்தார் என்னும் கிராமத்தில் இராஜேந்திரனின் குரு சர்வசிவபண்டிதரால் எழுப்பப்பட்ட ஸ்ரீராமீச்வரமுடையார்க்கு தேவதான இறையிலியாக வழங்கப்பட்டது.

நிலத்தின் மொத்த அளவு, நீக்கப்பட்ட நிலத்தின் அளவு கழித்து மீதம் உள்ள நிலங்களின் வருவாய் கோவிலுக்கு வழங்கப்பட்டது.

ஒப்பு நோக்கிய அரசு அதிகாரிகள்..

1.கங்கை கொண்ட சோழபுர இராசவிச்சாதிர பெருந்தெருவில் வசிக்கும் சோனகன் சாவூர் பரஞ்சோதி.

2.கோவனாச்சனான கங்கை கொண்ட சோழ அணிமுரி நாடாழ்வான்.

3.நராக்கன் மாராயன் அருமொழியான் உத்தமச்சோழ பிரம்மராயன்.

4.நாரயணன் எடுத்தபாதமான உத்தமச்சோழக்கோன்.

வரியிடுதல், கணக்குப்புத்தகத்தில் குறித்தல், ஸ்ரீமுக ஆணைப்படி பிடிசூழ்ந்து எல்லைகள் வகுக்கப்பட்டு தானமாக பெறப்பட்ட பகுதி நிர்ணயம் செய்யப்பட்டது.

இச்செப்பேட்டின் மூலம் நமக்கு கிடைக்கும் சில அவசியத் தகவல்கள்.

தஞ்சைப் பெரியகோவிலை இராஜராஜன் எடுத்தது கல்வெட்டுகளால் அறியப்பட்டாலும், அச் செய்தி இச்செப்பேட்டிலும் காணப்படுகிறது.

கங்கை கொண்ட சோழபுரம் சோழீஸ்வரர் ஆலயத்தை இராஜேந்தின் எடுத்த செய்தி இச் செப்பேட்டில் மட்டும் காணப்படுகிறது. வேறு எந்த கல்வெட்டிலோ, செப்பேட்டிலோ இத்தகவல் இல்லை.

இராஜேந்திரனின் குருவாக சர்வசிவபண்டிதர் வடமொழிப் பகுதியில் ஐந்து சுலோகங்களில் இடம்பெறுகிறார். தமிழ்ப்பகுதியில் இவர் ***"உடையார் சர்வசிவபண்டிதர்"*** *என்று அழைக்கப்படுகிறார்..*

தஞ்சை பெரியகோவிலில் உள்ள இராஜேந்திரனின் கல்வெட்டிலும் இவர்

"உடையார் சர்வசிவபண்டித சைவாச்சார்யார்" *என்றே அழைக்கப்படுகிறார்.*

ஆகமங்களில் கரைகண்டவர் இவர் என்று செப்பேட்டில் குறிக்கப்பட்டாலும் இவர் ஆலயத்தில் பூஜை செய்யும் சைவாச்சார்யார் என்பது குறிப்பிடத்தக்கது.

இவரது உருவம் படிமமாக எசாலம் கோவிலில் உள்ளது.

இந்த சாசனத்தை ஒப்பு நோக்கும் அரசு அதிகாரியாக இருந்தவர்களில் ஒருவர் ***சோனகன் சாவூர் பரஞ்சோதி.*** *பெரியகோவில் கல்வெட்டில் நாயகம் செய்யும் அதிகாரியாக இருந்தவர், இராஜேந்திரன் காலத்திலும் உயர் அதிகாரியாக இருந்துள்ளார். இவர் ஒரு இஸ்லாமியர் என்பது பெரும்பாலான அறிஞர்கள் முடிவு.*

தொடர்வோம்...

அன்புடன்..

மா.மாரிராஜன்.

Reference:

"சோழர் செப்பேடுகள்".

க. சங்கரநாராயணன்.

தமிழிணையம் தகவலாற்றுப்படை இணையப்பக்கம்.

புகைப்படம்.

வரலாறு.Com

கற்களின் பயணம்

பகுதி:1



வெ.பாலமுரளி
தமிழர் தொன்மவியல் ஆய்வாளர்
மதுரை





அற்புதமாக பராமரிக்கிறார்கள்

வீட்டில் சாப்பிடும்போது சாப்பாட்டில் கல் வந்து விட்டால், நம்மில் பலருக்கும் நெற்றிக் கண் திறந்து விடும். நிறைய பேர் மனைவி மீது அதை தூக்கி எறிய முடியாத ஆத்திரத்தில் அந்தக் கல்லை தூக்கி தரையில் வீசுவார்கள் (நான் அப்படி இல்ல. நான் அப்படி இல்ல).

ஆனால், மனித வரலாற்றில் கற்களை அவ்வளவு எளிதாக வீசி எறிந்து விட முடியாது.

காரணம், என்றைக்கு மனிதன் தன் பாதுகாப்பிற்காவும், தன் இரையைத் தேடுவதற்காகவும் கற்களைக் கையில் எடுத்தானோ, அன்றே கற்களும் நம்முடன் இணைந்து தங்கள் பயணத்தைத் தொடங்கி விட்டன (இதைச் சொல்றதுக்கு ஏண்டா மனைவிமார்களையும் சாப்பாட்டில் இருக்கும் கல்லையும் இழுக்குற?????).

முதலில் பாதுகாப்பிற்காக, பின்னர் வேட்டையாட, பின்னர் தீயை உருவாக்க, அதைத் தொடர்ந்து இயற்கை வழிபாட்டிற்காக, பின்னர் முன்னோர்களை புதைத்து அவர்களை நினைவு கூர்ந்து வழிபட, வானியல் மாற்றத்தை

கண்காணிக்க, நமக்காக உயிர் துறந்த வீரர்களை நினைவு கூற என்று பயணித்து இன்று அனைத்து கட்டுமானத்திற்கும் என நம் வாழ்வில் கற்களின் பங்கு அலாதியானது.

அதிலும் **பெருங்கற்காலப் பண்பாடு** என்பது ஒரு அற்புதம் கலந்த அதிசயம்.

பெருங்கற்காலப் பண்பாடு என்பது ஏதோ ***6000 அல்லது 7000 ஆண்டுகள் பழைமை*** என்று நினைத்துக் கொண்டிருக்கிறோம். அது உண்மையல்ல.

இதுவரை நமக்குக் கிடைத்திருக்கும் பெருங்கற்காலச் சின்னங்களிலேயே ***மிகப் பழைமையான சின்னத்தின் வயது 75,000 ஆண்டுகள்***. நம்ப முடியவில்லையா? ஆனால் அதுதான் உண்மை.

ஆம். தென்னாப்பிரிக்காவில் உள்ள **எலன்சேனி** மலையில் உள்ள மிகப் பெரிய **கல்வட்டம்தான்** இதுவரை கண்டுபிடிக்கப்பட்டதிலேயே மிகவும் பழைமையான பெருங்கற்கால சின்னம். அதற்கு ***"ஆதாமின் நாள்காட்டி" (Adams Calendar)*** என்று பெயர் வைத்துள்ளனர் (நாங்க சோறு வைக்காட்டியும் பேரு மட்டும் கரெக்டா வச்சிறுவோம்ல-புயல் சீற்றத்திற்கு வைப்பது போல). இது எப்படி கண்டுபிடிக்கப்பட்டது என்பதே ஒரு சுவையான விஷயம். பிறிதொரு சமயம் எழுதுகிறேன்.


அதென்ன ஆதாமின் நாள்காட்டி? இந்த கல்வட்ட அமைப்பில் வானியல் கண்காணிப்பிற்கான கூறுகளும் தெரிவதால், இதுவே



மனிதனின் முதல் கண்காணிப்பு மையமாக இருந்திருக்க வாய்ப்புள்ளது என்பதால் எல்லோருக்கும் தெரிந்த ஆதாமின் பெயரை வைத்து விட்டார்கள்.

ஆனால், இந்தக் கல்வட்டத்தின் உண்மையான நோக்கம் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. இயற்கை வழிபாட்டிற்காக அல்லது வானியல் நோக்கத்திற்காக இருக்கலாம். ஆம். "லாம்" தான்.

இதற்கு அடுத்த பழைமையான பெருகற்கால சின்னம் அன்றைய **அனட்டோலியாவில்** அதாவது இன்றைய துருக்கியில் உள்ள **"கொபெக்லிதெபே".** இதுவும் முன்னோர்களை புதைத்த இடம்போல் தெரியவில்லை. இயற்கையையோ அல்லது வேறெதையோ வழிபட்ட இடமாக இருக்கலாம் என்பதால் இதை வழிபாட்டு தலம் என்னும் அர்த்தத்தில் **" டெம்பிள்"** என்றே குறிப்பிடுகின்றனர். இதன் வயது ***11,500 ஆண்டுகள்***.




பிறகு, 6000 அல்லது 7000 வருடங்களுக்கு முன்னால் வடக்கு சுடான், எகிப்து, மொரோக்கொ போன்ற வட ஆப்பிரிக்கப் பகுதிகளில் ஆதாம் நாள்காட்டி போல, பெரிய பெரிய கற்களை இறந்தவர்களின் புதைவிடத்தைச் சுற்றி வைக்கும் பண்பாடு தோன்றி மள மளவென்று மத்திய தரைக்கடல் பிரதேசங்கள், சுமேரியா, இந்தியா என்று மற்றைய இடங்களுக்கும் தீயாய் பரவியது.

இது தொடங்கி சில காலங்களிலேயே அதே மக்களிடம் இன்னொரு வித்தியாசமான பண்பாடும் தொடங்கிறது. மண்பானை செய்து , அதன் உள்ளே புகையைப் போட்டு காற்று புகாவண்ணம் செய்து வெளிப்புறத்தை மட்டும் சுட்டு,உள்ளே கருப்பு நிற வண்னமும் வெளியில் சிவப்பு நிற வண்ணமுமாக வரச் செய்யும் கருப்பு சிவப்பு மண்பானை பண்பாடுதான் அது (ஆனால், அந்த மக்கள்தான் பின்னாளில் திமுகவினராக பரிணமித்தனரா என்பது பற்றி ஆராய்ச்சியாளர்களிடம் இன்னும் ஒருமித்த கருத்து உருவாகவில்லை. ஹிஹிஹிஹி).

நிறைய இடங்களில் பெருங்கற்காலப் பண்பாடும், கருப்பு சிவப்பு மண்பானை கலாச்சாரமும் இணைந்தே பயணித்திருக்கின்றன – நமது தமிழ் நாட்டிற்கும் வந்தது போல. நம் ஊரில் அகழ்வாராய்வு செய்த பெரும்பாலான பெருங்கற்கால நினைவிடங்களில் கருப்பு, சிவப்பு மண்பானைகள் கிடைத்துள்ளன. சில மண்பானைகளில் இரும்புப் பொருட்களும் கிடைத்துள்ளன என்பது ஒரு கொசுறுத் தகவல்.

அதேபோல், நிறைய பெருங்கற்கால சின்னங்களில் வானிலை ஆய்வும் (அ) வானிலை கண்காணிப்பும் இருந்தது இன்னொரு ஆச்சரியம்.



பெரும்பாலான பெருங்கற்கால (நீத்தார்) நினைவுச் சின்னங்கள் மேடான பகுதிகளிலும் இருந்ததும் ஒரு காரணமாக இருந்திருக்க வேண்டும்.

அந்த நீத்தார் நினைவுச் சின்னங்களில் நான் சமீபத்தில் சென்று வந்த மூன்று இடங்களைப் பற்றி விளக்கவே இந்தக் கட்டுரை.

ஒன்று.

இங்கிலாந்தில் உள்ள **ஸ்டோன்ஹெஞ்ச்**. இது ஆம்ஸ்பர்ரி என்னும் ஊருக்கு மிக அருகில் **சாலிஸ்பர்ரி ப்ளெய்ன்ஸ்** என்னும் இடத்தில் உள்ளது.



ஸ்டோன்ஹெஞ்சில் ஒரு பாறையின் மாதிரி கல்
நானும் நண்பன் கோபியும்

ஏறத்தாழ 5000 ஆண்டுகளுக்கு முன்னரே **“ஐபீரியா”** என்னும் பகுதிகளிலிருந்து “ஒரு குறிப்பிட்ட" இன மக்கள் இங்கு வந்து வசித்ததாகவும் அவர்கள் தொடங்கியதே இந்த பெருங்கற்காலப் பண்பாடு என்கிறது அந்நாட்டு தொல்லியல்துறை. இன்றிருக்கும் ஸ்பெயின் மற்றும் போர்ச்சுகல் இணைந்த பகுதிதான் இந்த ஐபீரியா பிரதேசம்.

அந்த மக்கள் கருப்பு கலந்த பழுப்பு நிறத்தவராகவும், சுருட்டை முடி கொண்டவராகவும், நீல நிற கண்கள் உடையவராகவும் இருந்திருந்திருக்கின்றனர் என்று டி.என்.ஏ ஆய்வுகள் மூலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதை மிகவும் விரிவாக விளக்கினார் அங்கிருந்த கண்காணிப்பாளர் ஒருவர். இந்த அடையாளங்கள் வட ஆப்பிரிக்க மக்களுக்கு பொருந்துவதாக உள்ளன (இதில் தவறு இருந்தால் சுட்டிக் காட்டவும்).

இந்த இடத்தின் வெளிச்சுற்றில் கிட்டத்தட்ட 110 மீட்டர் விட்டத்தில் 56 புதை குழிகள் இருந்திருக்கின்றன (ஆனால் 100க்கும் மேற்பட்டவர்கள் புதைக்கப்படிருக்கலாம்). உள்புறத்தில் 4 மீட்டர் உயரத்தில் கிட்டத்தட்ட 7மீட்டர் அகலத்திற்கு நம் சுமை தாங்கி கற்கள் ஷேப்பில் பெரிய பெரிய கற்கள். ஒவ்வொன்றும் 25


டன் அதாவது 25,000 கிலோ வெயிட் வரை இருக்கக்கூடும் என்கின்றனர். லேசாக தலை சுற்றியது.

இங்குள்ள கற்கள் மணற்கற்கள் என்னும் சார்சென் ஸ்டோன் மற்றும் ப்ளூஸ்டோன் வகைக் கற்களைச் சார்ந்தவை.

இதில் சில கற்களை அருகில் கல் குவாரியில் வெட்டி எடுத்து வரப்பட்டிருப்பதும் நிறைய பெரிய சைஸ் கற்கள் கிட்டத்தட்ட 250 மைல் தொலைவிலிருந்து கொண்டு வரப்பட்டதாகவும் சொல்லப்படுகிறது. அவ்வளவு ஹெவியான கற்களை எப்படி எடுத்து வந்தார்கள், எத்தனை பேர் சுமந்து வந்திருப்பார்கள், எதற்கு இவ்வளவு பெரிய கட்டுமானம் போன்ற விடை தெரியாத கேள்விகள் நிறைய. ஈஸ்டர் தீவுகளில் எழுப்பப்பட்ட அதே கேள்விகள் இங்கும். அங்கு போலவே இங்கும் விடைகள் இல்லை. கேள்விகள் மட்டுமே தொக்கி நிற்கின்றன.


இந்த ஸ்டோன்ஹெஞ்ச் முழுமை பெற ஏறத்தாழ 1500 வருடங்கள் ஆகியிருக்கலாம் என்பது தொல்லியல் அறிஞர்களின் கருத்து. அதாவது கி.மு.3100 இல் தொடங்கி கி.மு.1600 வாக்கில் நிறைவு பெற்றிருக்க வேண்டும். ஒரேமரபினர், ஆனால் வெவ்வேறு குழுக்கள். ஆச்சரியம்.

அந்த மக்கள் ஒரு காலகட்டத்தில் இந்த ஸ்டோன்ஹெஞ்சை வானியல் மாற்றங்களை கண்காணிக்க பயன்படுத்தத் தொடங்கி விட்டனர்.



நாம் இங்கே சொல்லும் வடசெலவு, தென்செலவு, (உத்தராயணம், தட்சனாயணம்) போன்றவற்றை கண்காணிக்க கிழக்கு திசையில் மூன்று கற்களும், மெற்கு திசையில் மூன்று கற்களையும் ஸ்டோஹெஞ்சின் வெளிச்சுற்றில் நட்டு வைத்துள்ளனர்.

அவற்றில், கோடையில் ஒரு நாள் **(ஜூன்21)** வரும் நீண்ட பகல் பொழுதையும் **(Summer Solstice),** குளிர்காலத்தில் ஒரு நாள் **(டிசம்பர் 21)** வரும் குறைவான பகல் பொழுதையும் **(Winter Solstice)** கண்காணிக்க கிழக்கிலும், மேற்கிலும் இரண்டு பெரிய கற்களை நட்டு வைத்துள்ளனர். அதன் கீழே இன்றைய சுற்றுலாத் துறையினர் பித்தளைத் தகட்டில் **Mid-summer Sunrise, Mid-Winter Sunset** என்று பொறித்து தரையில் பதித்து இங்கு வரும் சுற்றுலாவாசிகளை கவர்கின்றனர். (இந்த விஷயத்தில் நாம் 100 ஆண்டுகளுக்கும் மேலாக பின் தங்கியிருக்கிறோம்).





சரி, அது என்ன *Summer Solstice, Winter Solstice* என்கிறீர்களா ?

சிம்பிளாக சொல்கிறேன். பூமி சூரியனைச் சுற்றி வரும்போது வருடத்தில் இரண்டு நாட்கள் **(ஜூன்21, டிசம்பர் 21)** தன்னுடைய நீள்வட்டப் பாதையில் சூரியனை விட்டு வெகு தொலைவில் இருக்கும். அதனால் ஏற்படும் மாற்றம்தான் நீண்ட பகல்பொழுதும், மிகக் குறைவான பகல் பொழுதும்.


அன்றைய மக்களுக்கு இதைக் கண்காணிக்க வேண்டிய அவசியம் இருந்திருக்கிறது. எனவேதான் இது போன்ற மேடான புதைவிடங்களை வானியல் ஆய்வுக்கும் பயன்படுத்தியிருக்கின்றனர்.

அது மட்டுமல்ல. இந்த ஸ்டோன்ஹெஞ்சைச் சுற்றி ஏராளமான புதை மேடுகளை இன்றும் காண முடிகிறது. அவை எதிலும் இன்னும் அகழ்வாராய்வு எதுவும் செய்திராவிடினும், அவற்றை முள்வேலி கொண்டு இன்றும் மிக அருமையாகப் பாதுகாத்து வருகின்றனர். ஒட்டு மொத்தமாக இந்த இடத்தை உலகத் தரத்திற்கு பாதுகாத்து, அவற்றை சுற்றுலா வாசிகள் கண்டுகளிக்கவும், பண்டைய மாந்தர்களின் அறிவை பறைசாற்றவும் மிக அருமையாக பயன்படுத்திக் கொள்கிறார்கள். அது மட்டுமல்ல, மிக பிரமாண்டமான டிஜிட்டல் ஸ்க்ரீனுடன் கூடிய ஒரு அற்புதமான அருங்காட்சியகத்தையும் அங்கு அமைத்திருக்கின்றனர் (இதெல்லாம் நம் ஊரில் சாத்தியமா என்று பெருமூச்சு விடுவதை என்னால் தவிர்க்க முடியவில்லை).


டிஜிட்டல் ஸ்க்ரீன் பின்புலத்தில் நான்

ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 21 அன்று இங்கிலாந்து மக்கள் மட்டுமல்லாது ஃபிரான்ஸ், ஜெர்மனி போன்ற அண்டை நாடுகளிலிருந்தும் ஏராளமான மக்கள் இங்கு குவிந்து அந்த **“நீண்ட பகல் பொழுது நாளை”** மிகவும் விமர்சையாக கொண்டாடுகின்றனர்.

இங்கிலாந்தில் லண்டனுக்கு வட மேற்கில் லேக் மாவட்டத்தில் உள்ள **ஸ்டோன் சர்க்கிள்** என்று ஒரு புதை மேடு இருக்கும் இடத்திற்கும் சென்றேன். நம் பூமியில் சொர்க்கத்தை பார்க்க வேண்டும் என்றால், இந்த இடத்திற்கு சென்றால் பார்த்து விடலாம். அந்த அளவுக்கு இயற்கை அழகு கொட்டிக் கிடக்கிறது இந்த இடத்தில். அங்கு ஸ்டோன் ஹெஞ்ச் போன்ற பிரமாண்டமான கல் அமைப்புகள் கிடையாது. நம் ஊரில் இருப்பது போன்ற ஆனால் அவற்றை விட மிகப் பெரிய விட்டத்தில் கல்வட்டம் உள்ளது. கிட்டத்தட்ட 100 மீட்டர் விட்டத்தில் ஒரு கல் வட்டம். இந்தக் கல்வட்டத்தோடு தொடர்பேயில்லாமல் சில கற்கள் எங்கள் வழி தனி வழி என்று நின்று கொண்டிருக்கின்றன. அவை வானியல் ஆய்வு தொடர்பானவை.


பூலோக சொர்க்கம் (ஸ்டோன் சர்க்கிள் - லேக் மாவட்டம், இங்கிலாந்து)




அதில் தனித்து நிற்கும் ஒரு **தாய்ப்பாறை** அனைவரின் கவனத்தையும் ஈர்க்கும் வகையில் உள்ளது. அதன் அச்சு அசல் வடிவத்தை நம் ஊரிலும் காணலாம்.

அது சரி.. இது போன்ற வானியல் கண்காணிப்பு மையத்தைக் கொண்ட பெருங்கற்கால நினைவிடங்கள் நம் ஊரில் ஏதும் இல்லையா என்ற கேள்வி உங்களுக்கு இயற்கையாகவே எழும்.

அதற்கான பரிதாபமான பதிலை இந்தத் தொடரின் அடுத்த பகுதியில் எழுதுகிறேன்.


காத்திருங்கள். அப்புறம், மறக்காமல் இத்துடன் இணைத்திருக்கும் அனைத்துப் படங்களையும் பாருங்கள். அப்போதுதான் இந்தக் கட்டுரையை ***Co relate*** பண்ண முடியும்.















Adam's Calendar
some astronomical sightlines
WINTER SOLSTICE
Sirius rising sightline
163 deg.
Winter solstice sunrise
63.1 deg.
WEST
EQUINOX
Circle centre
EQUINOX
EAST
TRUE NORTH/SOUTH LINE
Summer solstice sunrise
116.5 deg.
SUMMER SOLSTICE
Orion's belt setting vertically
212 - 214.5 deg.
Orion's belt rising horizontally
144 - 147 deg.


கொபெக்லிதெபே (துருக்கி)


கொபெக்லிதெபே காட்சியகப்படுத்தியிருக்கும் விதம்
என்றாவது இதுபோல் நம் ஊரிலும் செய்வோமா ?


Bala's Journey
ஸ்டோன்ஹெஞ்சின் மையப் பகுதி


Bala's Journey
நம் ஊர் சுமை தாங்கி வடிவில் கற்களின் அமைப்பு


சில கற்களில் சில குறியீடுகளும்
லத்தீன் எழுத்துக்களும் தெரிகின்றன.
பிற்காலமாக இருக்கலாம்.
Bala's Journey


ஸ்டோன்ஹெஞ்ச் ஒரு பார்வை


கொபெக்லிதெபெ யில் கழுகு சிற்பங்கள்


காணி நிலம் வேண்டும் பராசக்தி

ஆதாரங்களும் நன்றிகளும் :

· *உயர்திரு தங்கவேலு அவர்கள் எழுதிய தமிழரைத் தேடியும் அவருடன் தொலைபேசியில் கலந்துரையாடியதும் எனக்குப் பெருந்துணை புரிந்தன.*

· *நண்பர் பாலா பாரதியுடன் கொண்ட ஏராளமான கலந்துரையாடல்கள். வானியல் குறித்து அவர் எனக்கு எடுத்த பாடங்கள். (நன்றி சொல்ல உங்களுக்கு வார்த்தையில்லை எனக்கு)*

· ***www.thearchaeologist.org*** **,*www.nationalgeographic.com*** *மற்றும் விக்கிப்பீடியா இணையதளங்கள்*

· *தனக்கிருந்த ஏராளமான வேலைப்பளுக்கிடையிலும் பொறுமையாக என்னை ஸ்டோன்ஹெஞ்சுக்கு அழைத்துச் சென்ற நண்பன் கோபிநாத் கிருஷ்ணமூர்த்திக்கும் அவர் மனைவி ஹரிப்ரியாவிற்கும் என் நெஞ்சார்ந்த நன்றிகள் கோடி*

· *A year at Stonehenge by James O. Davies*

· *திரு. பிரபாகரன் எழுதிய சுமேரியமும் குமரிக்கண்டமும்*

· *"சில" படங்கள் உதவி: கூகுள் (ஆதாமின் நாள்காட்டி மற்றும் கோபெக்லிதெபே படங்கள் மட்டும்).*

இராஜேந்திர சோழனின் ஒரிசா மகேந்திர கிரி கல்வெட்டுகள்



ஸ்ரீநிவாஸ்
மென்பொறியாளர்
வேலூர்

இராஜேந்திர சோழரின் கங்கை படையெடுப்பின் மிக முக்கியமான சான்றாக விளங்குவது மகேந்திர கிரி கல்வெட்டுகள் தான்.

மகேந்திர கிரி மலைகள் ஒரிசா மாநிலத்தில் உள்ள ஓர் மலைத்தொடர் ஆகும், ஒடிசா மாநிலம் மகேந்திரகிரி மலை மீது அமைந்துள்ள குந்திதேவி கோவிலில் மூன்று கற்களில் இராஜேந்திர சோழனின் மூன்று தமிழ் கல்வெட்டுகள் காணகிடைக்கின்றன.

குந்திதேவி கோவிலுக்கு செல்ல வனத்துறையின் அனுமதி பெற்று பயணிக்கவேண்டும், அடர்ந்த வனங்கள் நிறைந்த பகுதி என்பதால் பயணிப்பது அத்தனை எளிதல்ல, இத்தகைய காரணங்களால் இக்கல்வெட்டை காண்பதும் அரிதாகிவிட்டது இதனை பொக்கிஷம் என்றே கூறலாம், இக்கல்வெட்டை நேரில் கண்டவர்கள் ஒரு சிலரே.

***South inscriptions volume 5 No 1352* இக்கல்வெட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது.**

"கல்வெட்டு"

1.ணயும் எறி ஹேந்திரண்டு ஸ்ரீ மஹேந்திரத்தில் ஜெயஸ்தம்பம் நாட்

2.ஸ்ரீ மஹா நாயக ராஜேந்திர சோழ பல்லவரையன் இராஜராஜ மாராயன் மகேந்திரகிரீஸ்வரத்து கொண்டான் வீராங்குசமும் விட்டி வாரணமல்ல

3.விமலாத்தினை யுங் கலங்கருத்தா

"கல்வெட்டு தரும் செய்தி"

1. ஸ்ரீ மகேந்திரத்தில் ஜெயஸ்தம்பம் நாட்டிய செய்தியும்

2. சோழப்படையின் மஹாநாயகன் ராஜேந்திர சோழ பல்லவரையனான இராஜராஜ மாராயன் என்பவருக்கு ஓட்ட தேசத்து அரசனின் வாரணத்தை (யானையை) கொன்றதற்கு பரிசாக மகேந்திரகிரீஸ்வரத்தில் வீராங்குசமும் வீட்டி வாரண மல்லன் என்ற பட்டதை இராஜராஜ மாராயனுக்கு வழங்கியுள்ளார் இராஜேந்திர சோழர்.

3. விமலாதத்தின் என்ற அரசனை வென்றதையும் கல்வெட்டில் செய்தியாக காணமுடிகிறது.

இக்கல்வெட்டுகள் மூலம் கங்கை படையெடுப்பு முடிந்த பின்னர் இராஜேந்திர சோழர் தலைமையில் சோழப்படைகள் ஓட்ட தேசம் சென்று அங்குள்ள மன்னர்களை வெற்றிக்கொண்டார் என்ற செய்தி உறுதியாகிறது.

மகேந்திரகிரீஸ்வரத்திலிருந்து பயணித்து மேற்பாடியில் உள்ள சோழர் கால நடுகற்கள் பாருங்கள், இதில் சோழ வீரர்கள் கைகளில் வீராங்குசம் ஏந்தியுள்ளனர். மேற்பாடி சோழ ராஷ்ட்ரகூடர் எல்லையாக திகழ்ந்தது இங்கு நடைபெற்ற போர்களில் இவ்வீரர்கள் பகை நாட்டு அரசன் அமர்ந்திருந்த யானையை கொல்லும் முயற்சியில் உயிர்துறந்திருக்கின்றனர் வீரர்கள் நினைவாக இந்த நடுகற்கள் உள்ளன.



திரு.அன்புவந்தியத்தேவன்
வரலாற்று ஆர்வலர்
காக்கைக்கூடு பதிப்பகம்



ஒப்பனை





அன்றிலிருந்து இன்றுவரை மக்களின் பொழுதுப்போக்குகளில் ஒன்று கூத்து பார்த்தல். அன்று தெருக்கூத்து இன்று திரைக்கூத்து (சினிமா). தெருக்கூத்தோ அல்லது திரைக்கூத்தோ இரண்டினுக்கும் முக்கியமானது ஒப்பனை செய்தல் அதாவது **அரிதாரம் பூசுதல் (மேக்கப்)**. கூத்து மாறினாலும் இந்த அரிதாரம் பூசுதல் மட்டும் என்றுமே மாறாது.

அதேசமயம் அரிதாரம் பூசுதலுக்கு பயன்படுத்தப்பட்ட பொருட்களும் மாறிவிட்டது. அன்று இயற்கையில் கிடைத்த வண்ணங்களைப் பயன்படுத்தினார்கள். இன்று முழுக்க கெமிக்கலால் உருவாக்கப்பட்டதைப் பயன்படுத்துகிறார்கள். ஆயிரமாண்டுகளுக்கு முன் தெருக்கூத்து கலைஞர்கள் ஒப்பனைக்கு என்னென்ன பயன்படுத்தியிருப்பார்கள்? இதற்கு பதில் ஒருசிலர் அறிந்திருக்கலாம். பலர் அறியாமலிருக்கலாம்.

ஆனால் 11 ஆம் நூற்றாண்டில் தெருக்கூத்து கலைஞர்கள் ஒப்பனைக்கு பயன்படுத்திய இரு முக்கியமான பொட்களைப்பற்றி ஒரு கல்வெட்டு குறிப்பிடுகிறது. அன்று ஒப்பனை செய்தலுக்கு வழங்கப்பட்ட பெயரையும் அக்கல்வெட்டு குறிப்பிடுகிறது.

அஃது,

பாண்டிச்சேரி, காரைக்கால் மாவட்டத்திலுள்ள **திருநள்ளாறு சிவன் கோவிலின் கருவறைத் தெற்குச்சுவரில் உள்ள முதலாம் இராஜாதிராஜ சோழரின் 31 ஆவது ஆட்சியாண்டு கல்வெட்டொன்றுள்ளது**.

அது,

"ஸ்வஸ்திஸ்ரீ கலியாண புரமும்

(வே)வெளிக்கிராமமுங் கொண்ட கோவிராஜகேசரி


பன்மரான உடையார்

ஸ்ரீவிஜய ராஜேந்திர தேவர்க்கு ......"

என்று தொடங்குகிறது. இக்கல்வெட்டானது அம்மன்னரின் காலத்தில் திருநள்ளாறுடையார்க் கோவிலில் மாசி மகம் அன்றும் வைகாசி மாத விசாகத்து நாளன்றும் ஸ்ரீகண்டன் கம்பனான அபிமான மேரு நாடகப் பேரரையனும் ஸ்ரீகண்டன் அரங்கனின் மக்களும் **"ஆரியக்கூத்து"** நிகழ்த்தி வந்தனர். இதனால் இவர்களுக்கு ஆரியக்கூத்துக் காணி எனும் பெயரில் 3 வேலி நிலங்கள் வழங்கப்பட்டது. இவர்கள் தாம் ஆடிய இரண்டுநாள் கூத்துக்களை ஐந்தைந்து அங்கங்களாகப் பிரித்து நிகழ்த்தினர். மேற்கூறிய விழா நாட்களில் ஆரியக்கூத்து நிகழ்த்தும் இக்கூட்டத்தார்களுக்கு **"விழாக் கொற்று"** எனும் 20 கலம் நெல்லும், ஒப்பனை செய்து கொள்ள அங்கம் ஒன்றுக்கு நாழி எண்ணெயும், ஒப்பனை அரிசிமாவு தயாரிக்க அங்கம் ஒன்றுக்கு நாழி அரிசியும் கொடுக்கப் பெற்றதை இக்கல்வெட்டு குறிப்பிடுகிறது.

இந்த கல்வெட்டு மூலமா ஒப்பனைக்கு **"எண்ணெய்"** பயன்படுத்தப்பட்டதும் முக்கியமாக **"அரிசிமாவு"** பயன்படுத்தப்பட்டதும் தெரிய வருகிறது. இதுக்கு தானமும் வழங்கப்பட்டுள்ளது. இக்கல்வெட்டில் ஒப்பனை செய்தலை **"முகமெழுதுதல்"** என்று குறிப்பிடுகிறது. முகத்தில் வண்ணம் கொண்டு எழுதுவதால் முகம் - எழுதுதல் என்று வழங்கியுள்ளனர். கூத்து முடிந்த பின்னர் அரிதாரத்தைக் களைக்க எண்ணெய் பயன்படுத்தியுள்ளார்கள்.









"விழாக் கொற்று இருபதின் கலம் நெல்லும் முகமெழுத எண்ணை அங்கத்தால் நாழியும் மாவுக்கு அரிசி

அங்கத்தால் நாழியும் பெறக் கடவர்களாகவும் ......"

ஆக, ஆயிரமாண்டுக்கு முன் கூத்துக் கலைஞர்கள் தங்களது ஒப்பனைக்கு எண்ணெய் மற்றும் அரிசிமாவும் பயன்படுத்தியது அறியமுடிகிறது. இந்த வழக்கம் இன்று தமிழகத்தில் வழக்கொழிந்துவிட்டது. இதுப்பற்றி தகவல் களஞ்சியம் வித்தகன் திரு. Saravanakumar Ramachandran அண்ணனிடம் கேட்டறிந்தது கேரளாவில் ஆடும் **"தெய்யம்"** (அ) **தையம்** ஆட்டத்தில் இன்றும் அரிசிமாவு பயன்படுத்துகிறார்கள் என்றும் ஆனால் அதுவும் அழிந்துவருகிறது என்றும் கூறினார். மேலும் அரிசிமாவைத் தனியாக பூசினால் முகத்தில் ஒட்டாது என்றும் **நாமக்கட்டியுடனோ (அ) சந்தனத்துடனோ** சேர்த்து பூசுவார்கள் என்றார்.

-அன்பு வந்தியத்தேவன்

காக்கைக்கூடு பதிப்பகம்

நாகப்பட்டினம்



கல்லும் சொல்லும்



ச.பாலமுருகன்
அலுவலக மேலாளர்(பொது)
மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம்
திருவண்ணாமலை

திருவண்ணாமலை - "மலை" நிலவியல் குறியீடு கொண்ட கல்வெட்டுகள்- ஏன் இந்த சிறப்பு?

நடுநாட்டுத்தலமான திருவண்ணாமலை பல்வேறு விதங்களில் புகழ்பெற்றது. கோயில், கல்வெட்டுகள், இலக்கியங்கள், ஞானிகள், வெளிநாட்டவர்கள் என அடுக்கிக்கொண்டு போகலாம். தமிழ்நாட்டில் எல்லா கோயிலுக்கு கல்வெட்டுகள் உள்ளன. ஆனால் திருவண்ணாமலை கோயில் குறித்த கல்வெட்டுகளில் சில தனித்தன்மை கொண்டு விளங்குகின்றன.

அது என்ன?

திருவண்ணாமலை கோயிலுக்கு தானமாக அளிக்கும் கல்வெட்டுகளில் திருவண்ணாமலை **மலை நிலவியலைக்குறிக்கும்** படத்தை கல்வெட்டில் வடிக்கப்பட்டுள்ளதாகும். இது திருவண்ணாமலைக்கு மேலும் ஒரு சிறப்பு. இதுபோன்று தமிழகத்தில் வேறு கோயில்களுக்கு இது போன்ற குறியீடுகள் கொண்ட கல்வெட்டு இல்லை.

திருவண்ணாமலையில் உள்ள **அண்ணாமலையார் கோயிலில் முற்கால சோழரான முதலாம் ஆதித்தியன் முதல் காடவராயர், வாணர்கள், சம்புவராயர்கள், பாண்டியர்கள், விஜயநகர நாயக்கர்கள், தஞ்சை நாயக்கர்கள், சிற்றரசர்களான மலையமான்கள், பிரிதிவிகங்கரையர்கள், தெலுங்கு**



சோழர்கள், நகரத்தார் வரை சுமார் 500 கல்வெட்டுகள் உள்ளன. இக்கல்வெட்டுகளில் விளக்குதானம், நிலதானம், திருவிழா நடத்த கொடை உள்ளிட்ட பல்வேறு நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளன.

திருவண்ணாமலை கோயிக்கு தானம் வழங்கும் கல்வெட்டுகள் திருக்கோயில் வளாகத்தில் மட்டுமில்லாது திருவண்ணாமலையைச் சுற்றிலும் பல்வேறு ஊர்களில் காணக்கிடைக்கின்றன. திருவண்ணாமலையைச் சுற்றி சுமார் 60 கிமி. சுற்றளவில் பலகைக்கல்லிலும், பாறைகளிலும்,



கோயில்களிலும் சுமார் 60க்கும் மேற்பட்ட கல்வெட்டுகள் கிடைக்கின்றன. தொலைவில் உள்ள சில ஊர்கள் - திருக்கோயிலூர் அருகே கடம்பூர், திருப்பத்தூர் அருகே உள்ள ஒரு கிராமம், தேவிகாபுரம் அருகே உள்ள நரசிங்கபுரம், செஞ்சிக்கடுத்து உள்ள தேசூர் சாலையில் என 60 கி.மீ. தொலிவில் சில கல்வெட்டுகள் கிடைக்கின்றன.

இக்கல்வெட்டுகளில் இந்தியத் தொல்லியல் ஆய்வுத்துறை சிலவற்றை பதிவுசெய்துள்ளது. **திருவண்ணாமைலை மாவட்ட வரலாற்று ஆய்வு நடுவம்** இது வரை **20 கல்வெட்டுகளை படியெடுத்து**



பதிவு செய்துள்ளது. இக்கல்வெட்டுகளில் சிறப்பம்சமாக விளங்குவது கல்வெட்டில் முகப்பிலோ, பக்கவாட்டிலோ அல்லது பின்பக்கதிலோ திருவண்ணாமலையின் உருவத்தை கோட்டுருவாமாக செதுக்கியிருப்பது ஆகும். கல்வெட்டை பார்த்த உடனே இக்கல்வெட்டு திருவண்ணாமலை கோயிலுக்கு கொடை அளிக்கும் கல்வெட்டு என எளிதில் உணரத்தக்கதாக இந்த மலை சிற்பம் அமைந்துள்ளது. திருவண்ணாமலை இயல்பாக ஒரு முக்கோண அமைப்பிலும் பக்க வாட்டில் இரண்டு இடங்களில் சற்று உயர்ந்தும் காணப்படும். இதை அப்படி படம்பிடித்தார் போல கல்வெட்டுகளிலும் பயன்படுத்தப்பட்டுள்ளது வியப்புக்குரியதாககும்.

திருவண்ணாமலையின் உருவத்தை கல்வெட்டில் சிற்பமாக வடிப்பதற்கு காரணங்களை ஆராயும் போது, **“மலை”** உருவம் பொறிக்கப்பட்டால் அது ஒரு தெய்வீகத்தன்மை அடையும் என்பதற்காகவோ அல்லது மக்கள் அக்கல்வெட்டை எந்நாளும் பாதுகாப்பார்கள்





என்றோ அக்காலத்தில் நினைத்து செய்திருக்கலாம். மேலும் மலையே சிவனாக வழிபடும் வழக்கம் அந்நாளிலிருந்தே மக்களிடம் இருந்ததை இது சுட்டிக்காட்டுவதாகவும் கொள்ளலாம்.

திருவண்ணாமலையை சிற்பமாக கொண்ட கல்வெட்டுகளில் காலத்தால் முந்தையதாக **செங்கம் வட்டம் வாய்விடாந்தாங்கல்** கிராமத்தில் அமைந்துள்ள பாறையில் உள்ள **சுந்தர பாண்டியன் கல்வெட்டைக்** கூறலாம். இக்கல்வெட்டில் சூரியன், சந்திரன், விளக்கு, சூலம் போன்ற வடிவத்துடன் முக்கோண அமைப்பில் திருவண்ணாமலையும் இடம்பெற்றுள்ளது. இந்த முறை விஜயநகர கல்வெட்டுகளில் அதிக அளவு பயன்படுத்தப்பட்டுள்ள. இது போல கல்வெட்டுகளில் மலையின் உருவம் பொறித்தது போல வேறு ஊர்களில் இது ஊருக்கான குறியீடுகள் கொண்ட கல்வெட்டுகள் காண்பதரிது. இது திருவண்ணாமலைக்கேயான சிறப்பு குறியீடாகும். இக்குறியீடு 13ஆம் நூற்றாண்டிலிருந்து 17ஆம் நூற்றாண்டு வரை கிடைக்கும் கல்வெட்டுகளில் இடம்பெறுவதால் திருவண்ணாமலை பகுதி மக்களுக்கு அம்மலையின் மீதான தாக்கம் நெடுங்காலமாக இருந்து வந்துள்ளதும், மலையே சிவனாக வழிபடும் வழக்கத்திற்கு இது ஒரு காரணமாகவும் இருந்துள்ளதை அறியலாம்.

AI வடிவில் வரலாறு

Aatrupadai





வே.பார்த்திபன்

ஆற்றுப்படை

திருச்சிராப்பள்ளி

மெட்டா நிறுவனம் இப்போது *AI* தொழில்நுட்பத்தில் களமிறங்கியுள்ளது. வாட்ஸ்அப் செயலியில் இப்போது இந்த மெட்டா *AI* வசதி இலவசமாக வழங்கப்படுகிறது. சாதாரணமாக நாம் மெசேஜ் செய்வது போல டைப் செய்து அனுப்பினாலே போதும்.. அதற்கான பதிலை மெட்டா ஏஐ அனுப்பும். அந்தளவுக்கு எளிதாக இதை வடிவமைத்துள்ளார். நமக்கு வரும் பதிலும் வாட்ஸ்அப் உரையாடல் போல தான் இருக்கிறது. இதனால் நமக்குப் படித்துப் புரிந்து கொள்ளவும் எளிதாக இருக்கிறது.

இதனை வைத்து நமது சங்க இலக்கிய சில நிகழ்வுகள், சோழர்கால ஒரு முக்கிய போர் குறித்து உரையாடல் நிகழ்த்துகையில் சில புகைப்படங்கள் கிடைத்தது. அவற்றை காண்போம்.



***Whatsapp AI* வைத்து, ஒரு சிறிய மீட்டுருவாக்கம்.**

பாகுபலி திரைப்படம் பார்த்திருப்போம், களத்தில் காளகேயரை வென்று அங்கேயே, இரத்தம் தோய தோய களத்திலேயே முடிசூட்டுவான் பாகுபலி. இப்படத்தில் காளகேயர் குணநலன்கள், செய்கைகள் குறித்து அப்படத்தில் வரும் ஒற்றன் கூறுவது, 11ம் நூற்றாண்டு, சாளுக்கிய புலவரான **"பில்ஹனன்"** நம் சோழப்படையை கூறுவதை போலவே இருக்கும்.

ஆனால் உண்மை அதற்கு நேர்மாறாய் சான்றளிக்கிறது. உலக வரலாற்றிலேயே கடுமையான போர்க்களத்தில் வெற்றிவாகை சூடி ரத்தம் ஒழுக ஒழுக போர்க்களத்திலேயே அரசனானவர் ராஜராஜசோழனின் பேரன் **"இரண்டாம் ராஜேந்திரன்"** மட்டுமே. இரண்டாம் ராஜேந்திரனின் அண்ணன் இராஜாதிராஜன் ஆட்சியேற்றபின் அவர் நடத்திய போர்களில் முக்கியமானது சாளுக்கியருடனான நான்கு போர்களே!



இராஜாதிராஜனின் சாளுக்கிய போர்கள்:

முதற்போர் கம்பிலிநகரில் நடந்தது, இன்றைய துங்கபத்திரைக்கு அருகேயுள்ள ஹொஸ்பேட் பக்கத்து ஊர்தான் கம்பிலி, இப்போரில் சாளுக்கியரின் பிரம்மாண்ட மாளிகையை அழித்தது சோழப்படை.

அதற்கடுத்த போர் பூந்தூர், மண்ணப்பை என்ற ஊர்களில் நடைபெற்றது, இதில் பூந்தூர் சாளுக்கியர்களின் படைவீடாகும், அப்பகுதியை





சோழப்படை முற்றிலும் அழித்தது. மூன்றாம்போர் கல்யாணிநகரில் நடந்தது. தூதுவனை அனுப்பி போரை நிறுத்த ஆகமவல்லன் முயற்சிக்க அத்தூதர்களை அவமானப்படுத்தி அனுப்பினார் ராஜாதிராஜன், இப்போரிலும் சோழர்கள் பக்கமே வெற்றி. இவ்வெற்றியின் நினைவாய் திருவீழிமிழலை சிவன் கோவிலுக்கு பொன் வேய்ந்தார் ராஜாதிராஜர். இவரின் அனுக்கியரான பட்டாலி நங்கையாரும் அச்சமயம் பொன் வேய்ந்திருக்கிறார்.

கொப்பத்து போர்:

இராஜாதிராஜனின் இறுதிப்போர் கிருஷ்ணநதிக்கரையில் அமைந்துள்ள கொப்பம் என்ற இடத்தில் நடந்தது. இம்முறை இராஜாதிராஜனை கொன்றே தீருவதென கங்கனம் கட்டி ஆகமல்லன் பெரும்படையை திரட்டி வந்தான். இப்போரினை தலைமையேற்று ராஜாதிராஜனே சென்றார். அச்சமயம் குறைந்தது அவருக்கு 65 வயதிற்கு மேல் இருக்கும்.

கடுமையான இப்போரில் சாளுக்கியபடைகள் ராஜாதிராஜனை குறிவைத்து தாக்கினர். ராஜாதிராஜனின் யானையை தாக்கி, அதன்பின் ராஜாதிராஜனையும் வீழ்த்தினர். பெருருவீரனான ராஜாதிராஜன் போர்க்களத்தில் இறந்ததும், அந்தரவானத்து அரம்பையர்



எதிர்கொண்டு இந்திரலோகம் அழைத்து சென்றதாய், இரண்டாம் ராஜேந்திரனின் மெய்கீர்த்தி கூறுகிறது. இதன்பின் இவர் **"ஆனைமேல் துஞ்சின தேவர்"** ஆனார்.

இப்போர் குறித்து ஆகமவல்லனின் கல்வெட்டுகள் கூறுவதை காண்போம்,

தமிழ்வேந்தனாகிய பாண்டியசோழன் எனும் **"மாபாதகன்"** தன் முன்னோர் கையாண்ட உயர்ந்த முறைகளுக்கு முரணாய் போள்வோலா நாட்டிற்குள் பெரும்படையுடன் புகுந்து கங்கர்களால் எழுப்பித்த சமணர்கோவில்களை அழித்து தீக்கிரையாக்கினான், இத்தீய செயலாளேயே கொல்லப்பட்டான் என சாளுக்கியரின் கல்வெட்டு கூறுகிறது.

அதன்பின் சோழப்படை பின்வாங்க ஆரம்பித்தது, பின்வாங்க ஆரம்பித்ததும் சாளுக்கியபடை திருப்பியடிக்க ஆரம்பித்தது(பாகுபலி படத்தினை நினைவில் கொள்க) அச்சமயம் கூற்றுவன் போல யானைமீதேறி **"அஞ்சேல் அஞ்சேல்"** என சாளுக்கியபடைகளை ஊடறுத்து, சோழப்படைகளுக்கு வீரமூட்டினார் இரண்டாம் ராஜேந்திரன். சிதறிய படைகளை ஒன்றிணைத்தார். ராஜாதிராஜனை கொன்றதுபோல அவரது தமையரை கொள்ளவும் எத்தனித்து சாளுக்கியகூட்டுபடை ராஜேந்திரனை முற்றுகையிட்டது. அந்த தாக்குதலில் ராஜேந்திரன் அமர்ந்திருந்த யானையின் நெற்றியில் அம்புதைத்தது. ஆகமவல்லனின் அம்புகள்



ராஜேந்திரனின் தொடையிலும், புயத்திலும் பாய்ந்தது. ஆயினும் அசராமல், தன்னை சுற்றி தாக்கிய சாளுக்கியபடைத்தலைவனான செயசிம்மன், புலிகேசி, தசபன்மன், நன்னி நுளம்பன், என முக்கிய தளபதிகளை கொன்று குவித்தான் இராஜேந்திரன். இதனை கண்ட சாளுக்கிய கூட்டுப்படை சிதறுண்டது, குறுநில மன்னர்கள் சிதறினர்.



சாளுக்கியர் களத்தில் விட்டுச்சென்ற குதிரைகள், யானைகள், ஒட்டகங்கள், வராகக்கொடி ஆகியவற்றை கைப்பற்றியதுமில்லாமல்,

தோற்றோடிய ஆகமவல்லனின் மனைவியரான சத்தியவப்பை, சாங்கப்பை ஆகியோறை கைப்பற்றி, பகைவனின் அம்புதைத்த காயம் ஆறும் முன்னே செங்குருதி ஒழுக, இப்போருக்கு முன் சோழபாண்டியன் என தன் தந்தையால் முடிசூட்டப்பட்டு பாண்டிய மண்டலத்தை நிர்வகித்து, தன் சகோதரனுக்கு பக்கபலமாய் இருந்த தப்ரசபாதிபன் எனும் இராஜேந்திரன், அப்போர்களத்திலேயே, **"கோப்பரகேசரி இராஜேந்திரசோழன்"** என அரசனாக மாபெரும் சோழசாம்ராஜ்யத்திற்கு அரசனானான்.

இவர் அன்று அப்போரில் ஒருங்கால் தோற்றிருந்தால், தமிழகத்தில் எப்போதோ அந்நியர் ஆட்சி முளைத்திருக்கும். இப்போரின் வெற்றியால் **கொல்லாபுரத்தில் உயரமான ஒரு ஜெயஸ்தம்பம் நாட்டிவிட்டு** வந்தார். போர்க்களத்தில் ஆயிரம் யானைகளை இவர் கைப்பற்றினார் என **கலிங்கத்துப்பரணி** கூறுகிறது.



கங்கையில் மறைத்து வைத்த பெருஞ்செல்வம்

அகநானூற்றின் 265 ஆம் பாடலில்,

'பல்புகழ் நிறைந்த வெல்போர் நந்தர் சீர்மிகு பாடலி
குழீஇக் கங்கை
நீர்முதல் கரந்த நிதியம் கொல்லோ'

என்று பாடலிபுரம் என்னும் தற்பொழுதைய **பாட்னாவில்** நிகழ்ந்த ஒரு வரலாற்று நிகழ்வைக் குறிப்பிடுகிறது. தலைவியைப் பிரிந்து தலைவன் சேர்க்க எண்ணிய பெரும்பொருள், முன்பு கங்கையில் மறைத்து வைக்கப்பட்டு பின்னர் காணாது போய்விட்ட பாடலிபுரத்தின் நந்தர்களின்



பெரும்பொருளுக்கு நிகராகுமோ என்று தலைவி தன் தோழியிடம் கேட்பதாக அமைந்தது இப்பாடல்.






பொருளின் நிலையாமையை உணர்த்துவது போன்றும் நிலையில்லாததும் அழியக் கூடியதுமான பொருளை விரும்பி நம்மைப் பிரிந்து சென்ற தலைவனின் செயலை நியாமற்றது என்று தலைவி கூறுதல் இங்கு நோக்கத்தக்கது.


நந்தர்களின் செல்வம் பற்றிய குறிப்புகள் சில சங்கப் பாடல்களில் இடம்பெற்றுள்ளன.

‘நந்தன் வெறுக்கை எய்தினும் மற்று அவண் தங்கலர்’

என்பது அகநானூற்றின் 251 ஆம் பாடலாகும்.

பெரும் பிரவாகமாய் ஓடும் கங்கையை எவ்வாறு அன்று நந்தர் நிறுத்தியிருப்பர் என்பது பெரும் உவகைக்குரிய விடயம். ஆகவேதான் அன்று பல தொலைவுள்ள தமிழகம் வரையிலும் இந்நிகழ்வு பேசு பொருளாய் இருந்திருக்கின்றது.







சங்க இலக்கியத்தில்

Weekend



“வருவி தந்த பழஞ்சிதை வெண்காழ்

வருவிசை தவிர்த்த கடமான் கொழுங்குறை

முளவுமாத் தொலைச்சிய பைந்நிணப் பிளவை

பிணவுநாய் முடுக்கிய தடியொடு விரைஇ

வெண்புடைக் கொண்ட துய்த்தலைப் பழனி

னின்புளிக் கலந்து மாமோ ராகக் கழைவளர் நெல்லி னரியுலை யூழ்த்து

வழையமை சாரல் கமழத் துழைஇ

நறுமல ரணிந்த நாறிரு முச்சிக்

குறமக ளாக்கிய வாலவிழ் வல்சி”

(கூத்தராற்றுப்படை175-183)

பெண்நாய் பிடித்த உடும்பின் இறைச்சியையும், விசையை வைத்து பிடித்த கடமானின் பசிய கொழுப்புடைய பன்றியோட தசையையும் உண்டு, அதன்பின் முற்றிய தேனால் செறிவூட்டப்பட்ட தெளிந்த கள்ளை மூங்கில் குழாயின் உள்ளேவிட்டு அருந்துங்கள்! நெல்லாற் சமைத்த கள் (சுண்ட கஞ்சி?) உண்ணுவீராக! கடைசியாய் அருவியில் அடித்து வரப்பட்ட பலாவின் விதையின் மாவையும், புளியம்பழத்தையும் அளவாய் கலந்து, மூங்கிலரிசியால் ஆகிய சோற்றையும் குறமகள் தருவாள் அதனையும் உண்பீராக!

என்று ***பத்துப்பாட்டில் ஒன்றான கூத்தராற்றுப்படை குறிஞ்சித்திணையின் உணவுபழக்கத்தில்*** *ஒன்றினை பற்றி கூறுகிறது.*

Happy weekend friends



சங்ககால மண்டபம்

“குழலகவ யாழ்முரல முழவதிர முரசியம்ப விழவறா வியலாவணத்துக்”

“காவிரிப்பூம் பட்டினத்துக் காவலனான”

என்று, சோழன் **கரிகாற் பெருவளத்தானை பெரும்பாணாற்றுப்படை பாடிய கடியலூர் உருத்திரங்கண்ணனார்** இப்பனுவலுக்குப் **பட்டினப்பாலை** எனப்பெயர் குறித்தார்.



திருவெள்ளரையில் உள்ள சுந்தரபாண்டியன் கல்வெட்டொன்று,

"வெறியார் தளவத் தொடைச்செய மாறன் வெகுண்ட தொன்றும்

அறியாத செம்பியன் காவிரி நாட்டிலரமியத்துப்

பறியாத தூணில்லை கண்ணன்செய் பட்டினப் பாலைக்கன்று

நெறியால் விடுந்தூண் பதினாறு மேயங்கு நின்றனவே"

என்கிறது. இச்செய்யுளில் கண்ணன் என்றது கடியலூர் உருத்திரங் கண்ணனாரை. அரமியம் என்றது அரண்மனை முற்றத்தை. இங்குக் குறித்த போர் நிகழ்ச்சியால் அரண்மனைப் பகுதிகளில் பதினாறு கால் மண்டபம் ஒன்று தவிர ஏனைய அனைத்தும் அழிவுற்றன.



மிகப் பூர்வகாலத்தே பட்டினப்பாலை அரங்கேறிய மண்டபம் ஆதலாலும், அதற்கு அழிவு செய்யின் தமிழிலக்கிய ஞாபகச் சின்னமொன்றினை அழித்ததாக முடியும் ஆதலாலும், அது அழியாது பாதுகாக்கப் பட்டது போலும்! இதனால் தமிழிலக்கியச் சின்னங்களை நம் மூதாதையர் எவ்வாறு போற்றிவந்தனர் என்பது விளங்கும்.

சோழ மன்னன் கரிகாலன், பட்டினப்பாலையை இயற்றிய புலவர்க்கு பதினாறு நூறாயிரம் பொன் பரிசு கொடுத்தான் என்பதைக் கலிங்கத்துப்பரணி கூறுகிறது.

"தழுவு செந்தமிழ்ப் பரிசில் வாணர் பொன்

பத்தொடு ஆறு நூறாயிரம் பெறப்

பண்டு பட்டினப்பாலை கொண்டதும்"

இது மட்டுமல்ல, பட்டினப்பாலை அரங்கேறிய 16 கால் மண்டபத்தையும் கரிகாலன் பரிசாகக் கொடுத்துவிட்டான். இச்செய்தியை சங்கர சோழன் உலா, தமிழ்விடு தூது, பாண்டி மண்டல சதகப் பாடல்களும் குறிப்பிடுகின்றன.



கரிகாலன் காலம் தொடங்கி சுந்தரபாண்டியன் காலம் வரையிலும் தப்பிப்பிழைத்த அந்த கல்மண்டபம், இடைப்பட்ட இந்த 700 வருடங்களில் அழிந்துவிட்டது. திருச்சிராப்பள்ளி உறையூர் கரிகாலனின் தலைநகர், இப்பகுதியில் எங்கேனும் அப்புகழ்பெற்ற மண்டபம் இருந்திருக்கூடும் அல்லது இக்கல்வெட்டு இடம்பெற்ற திருவெள்ளரை பகுதியில் எங்கேனும் இருந்திருக்ககூடும். புகழ்பெற்ற அந்த மண்டபத்தின் எச்சம் வருங்காலத்தில் வெளிப்படட்டும். சங்ககாலத்தில் கல்கட்டுமானம் இருந்ததற்கு இந்த கல்வெட்டும் ஒரு சான்று.

நடுகல் எடுக்கும் முறைகள்

தொல்காப்பியம் கூறும் **ஆறு கூறுகளை** ஆராய்ந்தால், அதில் **நடுகல்** எடுக்கும் முறை குறித்து வருவதை உணரலாம்.

*1.**(காட்சி)** இறந்த வீரனுக்கு நடுகல் எடுக்க விரும்புவோர், நல்ல வகையான கல்லைத் தேடி செல்வர்.*

*2.**(கால்கோள்)** கல்லைத்தேடி தேர்ந்தெடுத்தவுடன், மாலையிட்டு, மது படைத்து, அக்கல்லை கொண்டு வருதல். கல்லைக் கொண்டுவரும்பொழுது பறையிசை ஒலிக்க அதை எடுத்து வருதல்.*





*3.**(நீர்ப்படை)** கல்லை கொண்டுவந்த பின், அதனை நீர்நிலைப் பகுதியில் கிடத்தி அக்கல்லை முதலில் குளிர்வித்தல், கல்லின் வெம்மை தணிந்தபின், அக்கல்லில் இறந்தவரின் பெயர், குலம், என்ன காரணமாக இறந்தார் என்பதை எழுத்தாக வெட்டுதல்.*



*4.**(நடுதல்)** கல்லை வடிவுபடுத்தி, எழுத்து பொறித்தபின் செம்மறியாடு பலியிட்டு, மலரும் மயிற்பீலியும் அலங்கரிக்க அக்கல்லை நடுதல். பின்பு மது படையல் இடுதல்.*



*5.**(பெரும்படை)** நட்டக்கல்லிற்குக் கூரை அமைத்து வழிபடுதல்.*



*6.**(வாழ்தல்)**இறந்தவர் வழியினரும், நட்டவரும் நடுகல்லை வணங்குதல். அந்தக் கூரையே பின்னர் கோயிலாக மாறுதல்.*



தொல்லியல் செய்திகள்



வெம்பக்கோட்டை அகழாய்வில்

மாவுக்கல் அணிகலன் கண்டெடுப்பு

கீழடியில் கிடைத்த செம்பு உலோகத்தாலான பொருட்கள்

● சாத்தூர்

வெம்பக்கோட்டை அகழாய்வில் மாவுக்கல்லால் ஆன அழகிய அணிகலனும், கீழடி அகழாய்வில் செம்பு உலோகத்தாலான பொருட்களும் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

விருதுநகர் மாவட்டம் சாத்தூர் அருகே வெம்பக்கோட்டையில் கடந்த மாதம் 18-ம் தேதி 3-ம் கட்ட அகழாய்வுப் பணி தொடங்கியது. இங்கு சங்கு வளையல், கழுத்தில் அணியும் சுடுமண்ணால் ஆன பதக்கம் கண்டெடுக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து, தற்போது பச்சை நிறத்தில் கூம்பு வடிவில், மாவுக்கல்லால் ஆன தொங்கணி ஒன்றும் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

இதன் தலைப்பகுதியில் அணிகலனுடன் கோர்ப்பதற்கான துளையிடப்பட்டுள்ளது. 14.6 மி.மீ. நீளமும், 4.2 மி.மீ சுற்றளவும் 30 மி.கிராம் எடையும் உள்ளது.

3-ம் கட்ட அகழாய்வில் இதுவரை 220-க்கும் மேற்பட்ட பழங்காலப் பொருட்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

↑ கீழடி அகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட செம்பு உலோகத்தால் ஆன உடைந்த பொருட்கள். (வலது) வெம்பக்கோட்டையில் கிடைத்த மாவுக்கல் அணிகலன்.

கீழடி

சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் அருகே கீழடியில் 10-ம் கட்ட அகழாய்வுப் பணி நடைபெற்று வருகிறது. மொத்தம் 12 குழிகள் தோண்ட முடிவு செய்யப்பட்டு, இதுவரை 2 குழிகள் தோண்டப்பட்டுள்ளன.

ஏற்கெனவே பல வண்ண கண்ணாடி மணிகள், தமிழி எழுத்துள்ள பானை ஓடு, மீன் உருவம் பொறிக்கப்பட்ட பானைகள், பல வண்ணப் பானை ஓடுகள் கண்டெடுக்கப்பட்டன.

இந்நிலையில் 111 செ.மீ., ஆழத்தில் செம்பு உலோகத்தால் ஆன உடைந்த பொருட்கள் கண்டெடுக்கப்பட்டன.



நெல்லை டவுன் பகுதியில் கண்டெடுப்பு

350 ஆண்டு பழமையான 'அரிகண்டம்' வகை நடுகல்

பல்கலை மாணவர்கள் கள ஆய்வில் ருசிகர தகவல்



தினகரன் Dinakaran 2.7.2024

கலசபாக்கம் அடுத்த சோழவரம் கிராமத்தில்

கி.பி. 15ம் நூற்றாண்டு கழுமரம் நடுகல் கண்டெடுப்பு



கோம்பையில் 3 ஆயிரம் ஆண்டுகள் பழமையான பெருங்கற்கால முதுமக்கள் தாழி கண்டுபிடிப்பு

தேவாரம், ஜூலை 9–

தேனி மாவட்டம், தேவாரம் அருகே கோம்பை கரடு சிறுமலை பகுதியில் ஆய்வு மேற்கொண்ட போது பெருங்கற்காலத்தைச் சேர்ந்த முதுமக்கள் தாழிகளுடன், ஈம மண் கலன்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

தேவாரம் அருகே கோம்பையை சேர்ந்த சமூக ஆர்வலர் பிரகாஷ், வரலாற்று ஆசிரியர்கள் முத்தழகு, பாஸ்கரன், நாகராஜ், குமரேசன், உத்தமபாளையம் கர்த்தராவுத்தர் கல்லூரி முன்னாள் பேராசிரியர் வர்கீஸ் ஜெயராஜ் கொண்ட குழுவினர் கோம்பை கரடு பகுதியில் ஆய்வு மேற்கொண்டனர்.

இதில் பெருங் கற்காலத்தைச் சேர்ந்த மனிதர்கள் தங்களுடன் வாழ்ந்து இறந்தவர்களை அடக்கம் செய்ய பயன் படுத்திய முதுமக்கள் தாழிகள், ஈம மண்கலங்கள் கண்டறியப்பட்டுள்ளன. இவை 3000 ஆண்டுகள் பழமையானதாக இருக்கலாம் என கருதப்படுகிறது.

இது குறித்து வரலாற்று ஆசிரியர்கள் கூறியதாவது:

கோம்பை பகுதி 2500 ஆண்டுகள் பழமையான பல வரலாற்று சான்றுகளை பெற்றுள்ளன. இந்த ஊரின் வடகிழக்கில் உள்ள சாலை மலை கரடு என அழைக்கப்படும் சிறுமலை பகுதியில் விவசாய நிலத்தை சீர் செய்யும் போது பெரும் கற்காலத்தை சேர்ந்த புதைவிடமான கல்வட்டம் இருந்தது.

இதில் முதுமக்கள் தாழியின் உடைந்த பகுதிகள், தாழியின் மேல் பகுதியில் வைக்க பயன் படுத்தப்படும் பெரியபலகைகற்கள் வெளி வந்தன. முதுமக்கள் தாழியின் கழுத்து பகுதியில், கயிறு போன்று வடிவமைப்பு உடைய அலங்கார கோடுகள் இருந்தன.

அலங்கார வடிவமைப்புகளும், நெல்மணி அளவு உள்ள கோடுகளாலும் அலங்காரங்கள் போடப்பட்டு இருந்தன. இவை தாழிகள் சுடுவதற்கு முன்பு ஈரமாக இருக்கும் போது போடப்பட்டவை ஆகும்.

முதுமக்கள் தாழியுடன் இறந்தவர்களின் தேவைக்காக அல்லது பயன் படுத்திய பொருட்களும் வைக்கப்படும். இங்கு ஈம கலன்களான கலயம், கூஜா, தட்டு, கிண்ணம், தண்ணீர் குவளை, சிறிய மூடி போன்ற மண் கலன்கள் உடையாமல் முழு வடிவத்துடன் கிடைத்து உள்ளது.

இவற்றில் 14 செ.மீ., உயரம் உடைய சிறிய கலயம் என பல்வேறு வடிவ உயரத்திலும், அகலத்திலும் கிடைத்து உள்ளன. மண்கலன்களின் உடல் பகுதி அகன்றும், வாய் மற்றும் அடிப்பகுதி குறுகிய தோற்றத்தில் பார்ப்பதற்கு மிக அழகாக இருந்தன.

மக்கள் தரையில் வைப்பதற்கு பயன் படுத்தப்படும் தாங்கிகள் மட்கலன்களுடன் இணைத்தே வட்ட வடிவத்தில் தயாரிக்கப்பட்டு உள்ளன. இவை வெளிப்புறம் சிவப்பாகவும், உட்புறம் கருப்பாகவும் உள்ளன. மண்ணில் இருந்து கிடைக்கும் காவி அல்லது சிவப்பு நிற வண்ணத்தை மண்கலன்களை சுடுவதற்கு முன்பு பூசப்படுவதால் பார்ப்பதற்கு வழவழப்பான தோற்றத்தை தரும்.

இங்கு கிடைத்த பொருட்கள் மூலம் இப்பகுதியில் பல நூற்றாண்டுகளுக்கு முந்தைய மனிதகள் நாகரிகம், பண்பாடுகளை பெற்று வாழ்ந்து உள்ளது தெரிகிறது. பண்பட்ட வாழ்வியல் முறைகளை நன்கு எடுத்துரைக்கும் வகையில் மண் கலன்கள் உள்ளன.

இப்பகுதி பெருங்கற்கால மக்கள் இனக் குழுவாக வாழ்ந்த வாழ்விடப் பகுதியாக இருந்துள்ளது என தெரிய வருகிறது. மேலும் ஆய்வு மேற்கொண்டால் பல தொல் தடயங்கள் கிடைக்கும். என்றனர்.

■ தேவாரம் அருகே கண்டுபிடிக்கப்பட்ட பெருங்கற்கால கூஜா. அடுத்த படம்: தண்ணீர் குவளை.



துறையூர் அருகே கொப்பம்பட்டி சப்தரிஷி ஈஸ்வரர் கோயிலில்

கண்டறியப்பட்ட 300 ஆண்டுகள் பழமையான கல்வெட்டு



பெரியபட்டினத்தில் 'ஹீப்ரூ' கல்வெட்டு கண்டெடுப்பு

■ ராமநாதபுரம் மாவட்டம் பெரியபட்டினத்தில் உள்ள தென்னந்தோப்பில் கண்டெடுக்கப்பட்ட 'ஹீப்ரு' மொழி கல்வெட்டு.

பெரியபட்டினம், ஜூலை 5–


ராமநாதபுரம் மாவட்டம் பெரியபட்டினத்தில் 'ஹீப்ரு' மொழி கல்வெட்டு கண்டெடுக்கப்பட்டுள்ளது.

பெரியபட்டினம் விவசாயி பாலு தென்னந்தோப்பில் துணி துவைப்பதற்கு பழங்கால கல் பயன்படுத்தப்பட்டு வந்தது.

மூன்று அடி நீளம், இரண்டு அடி அகலம் கொண்ட இந்த கல்லை வரலாற்று ஆர்வலர் ஹாத்திம் ஆய்வு செய்தார். கல்லில் ஹீப்ரு மொழியில் வார்த்தைகள் இருந்தன.

ஹாத்திம் கூறியதாவது: 1946ம் ஆண்டு பெரியபட்டினத்தில் தாவீதின் மகள் மரியம் என்பவர் கல்லறையில் இதே போன்ற ஹீப்ரு மொழி எழுதப்பட்ட கல்வெட்டு கண்டுபிடிக்கப்பட்டது. ஆன்மா சாந்தியடைய பிரார்த்தனையும், யூதக்கோயில் இருந்ததாகவும் அதில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்தியாவிலேயே முதல் யூத கோயில் பெரிய பட்டினத்தில் இருந்தது என்பது அந்த கல்வெட்டு மூலம் தெரியவந்தது. அந்த கல்வெட்டு ராமநாதபுரம் வருவாய்த்துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டது. இது இரண்டாவது கல்வெட்டு. இதில் என்ன எழுதியுள்ளது என தொல்லியல் துறையினர் ஆய்வு செய்ய வேண்டும் என்றார்.



The painful spectacle of 47 wives of the Ramanathapuram king committing *sati*

@ilayarperumagan



காளையார்கோவிலில்

தமிழி எழுத்து பொறித்த பானை ஓடு கண்டெடுப்பு

சிவகங்கை,ஜூலை.15–

சிவகங்கை தொல்நடைக்குழு நிறுவனர் காளிராசா, செயலர் நரசிம்மன், கள ஆய்வாளர் சரவணன், துணைசெயலர் முத்துக்குமரன் ஆகியோர் காளையார்கோவில் பாண்டியன் கோட்டை பகுதியில் கள ஆய்வு மேற்கொண்டனர். இதில் தமிழி எழுத்து பொறித்த பானை ஓடு கண்டெடுக்கப்பட்டது.

இதுகுறித்து புலவர் காளிராசா கூறியதாவது:- காளையார் கோவிலில் சங்க கால கோட்டை இருந்த இடம் இன்று பாண்டியன் கோட்டை என அழைக்கப்படுகிறது. கோட்டையை சுற்றி அகழி, நடுவில் நீராவி குளம் உள்ளிட்டவை 37 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ளன. இப்பகுதி முழுவதும் பானை ஓடுகள் பெருமளவில் சிதறி கிடக்கின்றன. சிவகங்கை தொல்நடை குழு தற்போதைய ஆய்வில் 2 ஆயிரம் ஆண்டுகள் பழமையான தமிழி எழுத்தில் 'ன் கூட்டம்' என்று எழுதப்பட்ட பானையோடு ஒன்று கிடைத்துள்ளது. ன் என்பது தனி எழுத்தாகவும் அதனை அடுத்து இடைவெளியுடன் தொடர்ந்து கூட்டம் என்பது தொடர்ச்சியாகவும் உள்ளது. இப்பானை ஓட்டில் எழுத்துகள் கீழிருந்து மேலாகவோ, மேலிருந்து கீழாகவோ எழுதப்பட்டிருக்கிறது. இவ்வாறு அவர் கூறினார்.



பாண்டியர் கால கல்வெட்டு மேல்மலையனூரில் கண்டுபிடிப்பு



வேளாங்கண்ணியில் நேற்று வீடு கட்ட நிலத்தில் குழிதோண்டிய போது, சோமாஸ்கந்தர், ராமர், சிவகாமி அம்மாள், சுந்தரர், நர்த்தன விநாயகர் உள்ளிட்ட 13 பஞ்சலோக சிலைகள் கண்டெடுக்கப்பட்டன. இவை கீழ்வேளூர் தாலுகா அலுவலகத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டு உள்ளது.



ஆத்தூரில் முப்பட்ட குமுதக வர்க்க கல்வெட்டு கண்டுபிடிப்பு

ஆத்தூர், ஜூலை 20–

ஆத்தூர் அருகே கிடைத்த முப்பட்ட குமுதக வர்க்க கல்வெட்டு தொடர்பாக தொல்லியல் துறையினர் ஆய்வு நடத்தி வருகின்றனர்.

தூத்துக்குடி மாவட்டம் ஆத்தூர் அருகே தாமிரபரணி ஆற்றின் கரை ஓரத்தில் பெருமாள் கோயில் உள்ளது. இந்தக் கோயிலின் முன்பகுதியில் ஆத்தூரைச் சேர்ந்த ராஜசேகர பாண்டியன் என்பவர் இருபுறமும் எழுத்துக்கள் பொறித்த ஒரு கருங்கல் துண்டை கண்டுள்ளார்.

இதுகுறித்து அவர் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தின் தொல்லியல் துறை தலைவர் பேராசிரியர் சுதாகரிடம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து ஆய்வு செய்த பேராசிரியர் சுதாகர் அந்த கல்துண்டு அதிட்டானம் பகுதியிலுள்ள முப்பட்ட குமுதக வர்க்கத்தை சார்ந்தது. இதன் இரண்டு பக்கங்களில் வட்டெழுத்து கல்வெட்டுக்கள் உள்ளது.

முப்பட்ட குமுதக உறுப்புகள் கோயில்கள் மற்றும் கோயில் சார்ந்த மண்டபங்களில் தான் காணப்படும் என அவர் கூறினார். பின்னர் பேராசிரியர் சுதாகர் கல்வெட்டை படி எடுத்தார்.

கல்வெட்டு ஆய்வு

தொடர்ந்து நெல்லை பல்கலை., தொல்லியல் துறை உதவிப் பேராசிரியர்களான முருகன், மதிவாணன் கல்வெட்டை படித்தனர். கல்வெட்டின் முதல் பக்கத்தில் 3 வரிகளும், கீழே உள்ள அடுத்த பக்கத்தில் 4 வரிகளும் உள்ளது. இதிலுள்ள எழுத்துக்கள் அனைத்தும் வட்டெழுத்து வகையைச்சார்ந்தது.

இந்தக் கல்வெட்டு "ஸ்வஸ்தி ஸ்ரீ திருமகள் போலப் பெருநில" எனத் துவங்குகிறது.

இதிலிருந்து கல்வெட்டு சுமார் 950 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த சோழ மன்னன் ராஜராஜனின் புகழை பாடுகிறது என தொல்லியல் துறையினர் கூறினர்.

"மிதுன ஞாயிற்று நிலம் குடந்தமும் இரண்டு பரும் கண்ணமும் லத்து சாம் நாட்சன் வைகுந்தனான நாராயண வேள் இந்தன் எல்லை தென் எல்லைக் காட்டு மரம் அரைசோடு" என்ற வரிகள் உள்ளன.

இந்தக் கல்வெட்டு மாதம், கிழமையுடன் நிலத்தின் எல்லையைக் கூறி வைகுந்த நாராயணன் என்பவருக்கு நிலம் தானம் வழங்கியதை விளக்குகிறது.

ஒரு பெரிய கல்வெட்டின் பல பகுதிகளில் ஒன்றுதான் இந்தக் கல்வெட்டு என்பதால் முற்றுப்பெறாத தகவலையே இது தருகிறது. அதனால் இந்தக் கல்வெட்டு எந்தக் கோயிலைச் சார்ந்தது என கண்டறிய முடியவில்லை. மேலும் தானம் வழங்கிய எல்லைகளைப் பற்றிய தகவல்களையும் முழுவதுமாக தெரிந்து கொள்ள முடியவில்லை.

950 ஆண்டுகளுக்கு முற்பட்ட வரலாற்று சான்றுகளைத் தாங்கியுள்ள இந்தக் கல்வெட்டு பாதுகாக்கப்பட வேண்டும்.

இதே காலத்தைச் சார்ந்த பழமையான சோழ மன்னர்களின் கல்வெட்டு ஆத்தூரில் உள்ள சோமநாதர் கோயிலிலும் காணப்படுகிறது.

இந்தக் கல்வெட்டுக்களின் உதவியால் மன்னன் ராஜராஜனின் ஆட்சியில் பாண்டிய நாட்டின் தெற்குக் கோடியிலுள்ள ஆத்தூர் வரையிலான பகுதி சோழர்கள் ஆட்சியின் கீழ் இருந்துள்ளது என்பதை கண்டறிய முடிகிறது என தொல்லியல் துறை பேராசிரியர்கள் தெரிவித்துள்ளனர்.

ஆத்தூர் அருகே கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டு.



கையடக்க கணினியை வழங்கி பேசியதாவது:- தமிழக முதல்-அமைச்சரின் பல் | பெற்றோர்களின் சுமையை குறைக்கும் வகையில் மாணவர்களுக்கு பயனுள்ள வகை | யாசிரியர் மகாலிங்கம் மற்றும் ஆசிரியர்கள் உள்பட பலர் கலந்துகொண்டனர்.

மறவமங்கலம் அருகே

2,500 ஆண்டுகள் பழமையான கல்வட்டங்கள் கண்டுபிடிப்பு

சிவகங்கை, ஜூலை 18-

மறவமங்கலம் அருகே 2,500 ஆண்டுகள் பழமை வாய்ந்த கல்வட்டம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கல்வட்டங்கள்

சிவகங்கை மாவட்டம் மறவமங்கலம் அருகே புதுகுடியிருப்பு கண்மாய் மத்திய பகுதியில் கல்வட்டங்கள் இருப்பதாக இலந்தகரை ரமேஷ் கொடுத்த தகவலின் பேரில் காரைக்குடி வரலாற்று ஆய்வாளர் பாலசுப்பிரமணியன் அப்பகுதியில் கள ஆய்வு செய்தார். அப்போது அங்கு காணப்பட்ட கல்வட்டங்கள் 2500 ஆண்டுகளுக்கு முற்பட்டவை என்று தெரிந்தது. இது குறித்து அவர் கூறியதாவது:-

புதுகுடியிருப்பு கண்மாய் மத்திய பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட கல்வட்டம் 2 அடுக்கு உள்ள கல்வட்டம் ஆகும். இறந்தவர்களின் உடலை வைத்து அல்லது அவர்களின் நினைவாக எடுக்கப்படும் ஈமச்சின்னங்களின் கற்பாறைகளை கொண்டு ஒரு வட்டம் உருவாக்கப்படுகிறது.

ஈமச்சின்னங்களை பாதுகாக்கும், அடையாளப்படுத்தும் அமைப்பாக இது திகழ்கிறது. இதன் அருகே 20மீ தொலைவில் தட்டை வடிவ கல்வட்டம் காணப்படுகிறது. இதன் விட்டம் 15 மீ சுற்றளவு ஆகும். இது 2500 முதல் 3500 ஆண்டுகளில் வாழ்ந்த தமிழர்களின் கலாசாரம் என்பதை காட்டுகிறது. கல்வட்டம் பெரும் கற்காலத்தில் வாழ்ந்த மனிதர்களின் அடையாளம் ஆகும். இதில் இறந்தவர்களை அடக்கம் செய்து வழிபட்டுள்ளனர். மெகாலித்தி காலத்தில் ஆசியா, ஆப்பிரிக்கா, ஐரோப்பா கண்டங்களில் ஒரே மாதிரியான பண்பாடு கலாசாரங்கள் இருந்தது.

நாகரிக வாழ்க்கை

வயது முதிர்வு அல்லது வேட்டைக்கு போகும்போது உயிரிழப்பது அல்லது போரில் வீரமரணம் அடைந்தவர்களை அடக்கம் செய்வதற்கு இம்மாதிரியான செம்பூரான் ஆன கற்களை பயன்படுத்தினர். அவை இன்றும் அடையாளங்களாக காணப்படுகின்றன. தரையின் மேற்பரப்பில் பெரியகற்களை வட்டமாக நட்டு வழிபடுவது வழக்கத்தில் இருந்துள்ளது. இந்த கல்வட்டம் வடக்கு திசையில் 3 கற்களும், தென்திசையில் 3 கற்களும், கிழக்கு திசையில் 2 மற்றும் மேற்கு திசையில் 2 கற்களும் உள்ளன. மேலும் இவை தட்டை வடிவத்தில் உள்ள கல்வட்டம் ஆகும்.

இது புதைக்கப்பட்டவரின் தலை பகுதியை குறிக்கிறது. இம்மாதிரியான கல்வட்டம் கிடைப்பது வரலாற்றில் சிறப்பு மிக்கது. பெரிய கற்கள் மேற்பகுதியில் தெரிந்தால் அப்பகுதி தலைப்பகுதியாகும். பெருங்கற்கால கல்வட்டங்களில் புதைந்த பகுதியில் முதுமக்கள் தாழிகள், குழிகள், கற்பதுக்கைகள் காணப்படும். இந்த சடங்கு முறைகளை ஆரம்பகாலத்தில் நடைமுறைப்படுத்தி வாழ்ந்துள்ளனர். இவை தமிழர்களின் நாகரிக வாழ்க்கை வாழ்ந்ததற்கான ஒரு அடையாளச் சான்றுகள் ஆகும். தமிழ் கலாசார நாகரிகங்களை தெரிந்து கொள்ள ஒரு பயனுள்ள சான்றாக இது தெரிகிறது. இதனை பாதுகாக்க வேண்டும் என்றார்.

மறவமங்கலம் அருகே கண்டுபிடிக்கப்பட்ட பழமையான கல்வட்டங்களை படத்தில் காணலாம்.



தஞ்சாவூர் அரண்மனை வளாகத்தில் தென்பட்ட கருங்கல் தூண்கள்

முழுமையாக ஆய்வு செய்ய வரலாற்று ஆய்வாளர்கள் கோரிக்கை

தஞ்சாவூர்

தஞ்சாவூர் அரண்மனை வளாகத்தில் புத்தகத் திருவிழாவுக்காக தோண்டப்பட்ட குழியில் கருங்கல் தூண்கள் தென்பட்டுள்ளதால், அந்த பகுதியை முழுமையாக ஆய்வு செய்ய வேண்டும் என வரலாற்று ஆய்வாளர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

தஞ்சாவூர் அரண்மனையில் 8 மாடிகளுடன் 192 அடி உயரம் கொண்ட ஆயுத கோபுரம், செஞ்சி நாயக்கர்களின் பாணியில் வடிவமைக்கப்பட்டுள்ள 7 அடுக்குகள் கொண்ட கோபுரம், மராட்டியர்களின் தர்பார் மண்டபம், சார்ஜா மாடி ஆகியவை அழகுற கட்டப்பட்டுள்ளன. இவற்றை காண தினமும் ஏராளமான சுற்றுலாப் பயணிகள் வந்து செல்கின்றனர்.

இந்நிலையில், அரண்மனை வளாகத்தில் உள்ள திடலில் தஞ்சாவூர் புத்தகத் திருவிழா நடைபெற்று வருகிறது. இங்குள்ள அரங்கங்களுக்கு உள்ளே மழை நீர் புகாமல் இருக்க அரங்கத்தை சுற்றிலும் 3 அடி அகலத்துக்கு பள்ளம் தோண்டியுள்ளனர்.

அப்போது, கலைக்கூடம் மற்றும் மணிகோபுரம் ஆகியவற்றின் மேற்கு பகுதியில் தொடர்ச்சியாக, சுண்ணாம்பு பூச்சு கொண்ட கல் தூண்கள் வெளிப்பட்டுள்ளன.

மேலும், சீன பானை ஓடு, பழங்காலத்து ஓடு, அம்மி, குழவி போன்றவை கண்டெடுக்கப்பட்டதாக தமிழக தொல்லியல் துறையினர் உறுதி செய்துள்ளனர்.

இதுகுறித்து வரலாற்று ஆய்வாளர்கள் கூறியதாவது: அரண்மனை வளாகம் உள்ள பகுதியில் அகழாய்வு செய்தால் சோழர்களின் கட்டுமானங்களுக்கான சான்றுகள் கிடைப்பதற்கான சாத்தியக் கூறுகள் உள்ளன. அரசு இந்த இடத்தை ஆய்வு செய்ய வேண்டும் என்றனர்.

தஞ்சாவூர் அரண்மனை வளாகத்தில் புத்தகத் திருவிழாவுக்காக தோண்டப்பட்ட குழியில் தென்பட்ட கருங்கல் தூண்கள். (உள்படம்) தோண்டப்பட்ட குழியில் இருந்து எடுக்கப்பட்ட பானை ஓடுகள் உள்ளிட்ட பழமையான பொருட்கள். படங்கள்: ஆர்.வெங்கடேஷ்



மங்கோலியா மண்ணில் மணிமேகலை காப்பியம்!

மங்கோலிய பெண் டாக்டரின் தமிழ் இலக்கிய காதல்

தமிழ் இலக்கியங்கள் போல் தொன்மையும், செழுமையும் நிறைந்த தனி சிறப்பு கொண்டவை உலகில் வேறில்லை. முக்காலத்திற்கும் ஏற்ற திருக்குறள்: அறம், பொருள், இன்பம், வீடு போற்றும் ஐம்பெரும் காப்பியங்கள்... என தமிழ் கலாசாரம், பண்பாட்டின் பெருமை போற்றும் படைப்புகள் ஏராளம்.

ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்றான மணிமேகலை மீது கொண்ட காதலால் மங்கோலியாவின் பெண் டாக்டர் நொமின் செட்செக் தஷ்னியம், அந்நாட்டு மொழியில் மணிமேகலை காப்பியத்தை மொழி பெயர்த்து வெளியிட்டுள்ளார். இதற்கான அனைத்து உதவிகளையும் மத்திய அரசின் தமிழுக்கான செம்மொழி ஆராய்ச்சி நிறுவனம் செய்துள்ளது.

'மணிமேகலை' மீதான காதல் வந்தது குறித்து டாக்டர் நொமின் நம்மிடம்...

மங்கோலிய தலைநகரான உலான்பாட்டாரில் டாக்டராக உள்ளேன். கணவரும் டாக்டர். இந்தியாவின் தமிழ் கலாசாரம் மீது எனக்கு இனம் புரியாத ஈர்ப்பு உண்டு. இந்திய நண்பர்கள் அதிகம் உள்ளனர். அவர்களில் தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் விஞ்ஞானி ராமசாமி ராஜேஷ் குமார் மூலம் மணிமேகலை காப்பியம் குறித்த கதை, கதாபாத்திரங்களை அறிந்ததில் பெரும் ஆச்சரியமாக இருந்தது.

அதில் பவுத்த மத கருத்துகள் நிறைந்திருந்தன. பவுத்த மத நம்பிக்கை கொண்ட எங்கள் நாட்டு மக்களுக்கு இந்த படைப்பின் ஆழ்ந்த கருத்துக்களை கொண்டு சேர்க்க ஆர்வம் எனக்குள் ஏற்பட்டது.

இவருடன், தஞ்சை தமிழ்ப் பல்கலை பேராசிரியர் குறிஞ்சிவேந்தன் உதவியால் மத்திய அரசின் தமிழுக்கான செம்மொழி ஆராய்ச்சி நிறுவனம் மூலம் மொழி பெயர்ப்புப் பணிகளை 2020ல் தொடங்கி 3 ஆண்டுகளில் 414 பக்கங்கள் கொண்ட இந்நூலை எழுதி முடித்தேன். தற்போது பல ஆயிரம் பிரதிகள் வெளியாகியுள்ளன.

மங்கோலிய மண்ணுக்கு சொந்தமான பவுத்த கொள்கைகளை தமிழ் மண்ணில் இருந்து கொண்டு வந்துள்ள பெருமை எனக்கு மனம் நிறைவைத் தந்துள்ளது. ஆங்கிலத்தில் கேட்டு மங்கோலிய மொழியில் எழுதியபோது தான் தமிழின் பெருமை, மொழியின் செழுமையை என்னால் உணர முடிந்தது. தமிழின் சுவை, வார்த்தை அமைப்புகள் ஆச்சரியமூட்டியது. உலகம் முழுவதும் சென்று சேர வேண்டிய உன்னத காப்பியம் இது என்கிறார் பெருமையாக.

காண்டம் வாரியாக விவரித்தோம்

பேராசிரியர் குறிஞ்சி வேந்தன், விஞ்ஞானி ராமசாமி ராஜேஷ்குமார்:

தமிழ் மீது நொமின் கொண்டுள்ள ஆர்வம் எங்களை பிரமிக்க வைத்தது. அவரது மொழிமாற்றம் செய்யும் முடிவிற்கு மத்திய செம்மொழி நிறுவனமே நிதி ஒதுக்கீடு செய்து உதவிக்கு முன்வந்தது. இதனால் இப்பணி எளிதாக அமைந்தது. மணிமேகலையை காண்டம் வாரியாக ஆங்கிலத்தில் அவருக்கு மொழி பெயர்த்து கூறினோம்.

அதை உள்வாங்கி மங்கோலிய மொழியில் அவர் மொழிமாற்றம் செய்தார். ஒரு டாக்டராக 'பிஸி'யாக இருந்தும் இலக்கிய காதலால் சீத்தலை சாத்தனாரின் மணிமேகலை காப்பியம் மங்கோலிய மக்களின் மனங்களில் குடி கொண்டுள்ளது.

ஏற்கனவே தெய்வ புலவர் திருவள்ளுவரின் திருக்குறள் உலகப் பொதுமறை நூலாக உலகம் முழுவதும் புகழ் பெற்று வருகிறது.

அதையடுத்து ஐம்பெரும் காப்பியங்களில் தமிழர் தொன்மை, பெருமை போற்றும் சிலப்பதிகாரம், மணிமேகலை காப்பியங்கள் உலகம் முழுவதும் பயணிக்க தொடங்கியுள்ளது தமிழ் மொழிக்கு மேலும் பெருமை சேர்க்கும்.

தொடர்புக்கு: 93662 44656

— வியாஸ்

குறிஞ்சி வேந்தன்

ராமசாமி ராஜேஷ்குமார்



மதுரையில் ஒரு ஆதிச்சநல்லூர்!

கல்வட்டம்.. பானை ஓடுகள்...

மதுரை மாவட்டம், எழுமலை கல்லுப்பட்டியை அடுத்துள்ள துள்ளுக்குட்டி நாயக்கனூர் அருகே சல்பங்கரடு என்ற ஓணான் கரட்டின் வடபுறத்தில் சுமார் 100 ஏக்கர் நிலப்பரப்பில் பெருங்கற்கால நினைவுச் சின்னங்கள் நிறைந்து கிடக்கின்றன. இதனை கடமலைக்குண்டு அரசு மேல்நிலைப் பள்ளி முதுகலை ஆசிரியர், ஆய்வாளர் மு.செல்வம், அவரது மாணவர் ரித்திஷ்குமார் ஆகியோர் கண்டறிந்தனர்.

மு.செல்வம் கூறுகையில், "முதுமக்கள் தாழி, கல்வட்டம், நெடுங்கல், கற்பதுக்கை என அனைத்து வகை பெருங்கற்கால சின்னங்களும் இங்கு காணப்படுகின்றன. கருப்பு நிறத்தில் இரும்பு கற்களும், இரும்பு கசடுகளும் மேற்பரப்பில் அடர்த்தியாக பரவிக் கிடக்கின்றன. இவை ஈமப் பொருள்களாக பயன்படுத்தப்பட்டிருக்கலாம். மேலும், பெருங்கற்கால மக்கள் இரும்பு உருக்கு தொழில் மயான பகுதிக்கு அருகிலேயே செய்திருப்பதை அறிய முடிகிறது. பல இடங்களில் சிதைந்து நிலையில் கல்வட்டங்கள், கற்பதுகைகள், முதுமக்கள் தாழிகள் இருக்கின்றன. கருப்பு, சிவப்பு, கருப்பு சிவப்பு என பல வண்ணங்களில் அழகிய வேலைப்பாடுகளுடன் மண் ஓடுகள் அடர்த்தியாக காணக் கிடைக்கின்றன. நுண்கற்காலத்தைச் சேர்ந்த சர்ட் வகை கற்கருவிகளும் இப்பகுதியில் கிடைக்கின்றன. கிபி 17ம் நூற்றாண்டைச் சேர்ந்ததாக கருதப்படும் முகம் சிதைந்த நிலையில் நின்ற கோலத்தில் காவல் வீரன் நடுகல் ஒன்றும் அப்பகுதியில் உள்ளது.

ஒன்றரை அடி அகலமும் மூன்றடி உயரமும் கொண்ட இந்த நடுகல் இடது கையை தொங்க விட்ட நிலையில், வலது கையில் நீண்ட ஆயுதம் ஒன்றை பிடித்தவாறு உள்ளது. இரண்டாக உடைந்த சிற்பத்தை ஒன்றன் மேல் ஒன்றாக நிறுத்தி வைத்துள்ளனர். பல காலகட்டங்களில் மக்கள் வாழ்ந்த பகுதியாக இருப்பதால் தமிழக தொல்லியல் துறை கவனம் செலுத்தினால் ஆதிச்சநல்லூரைப் போல புகழ்பெற்ற இடம் மதுரையிலும் கிடைக்கும்" என்றார்.

காவல் வீரன் நடுகல்...

புதைந்த முதுமக்கள் தாழி..

Tue, 23 July 2024
https://epaper.dinakaran.com/c/75496378



Tamil Nadu's own Stonehenge left to rot with its potential for research

An ancient observatory is found at the State's first astro-archaeological site in Sivaganga. This points to a highly learned group called *Tamil Arivargal* which had resided in the region. This group, which finds a mention in *Tholkaappiyam*, was well versed in astronomy, tracking not only the movement of the sun and the moon but also of the stars

Beulah Rose



கீழடி அகழாய்வில் சுடுமண் அணிகலன் கண்டெடுப்பு

கீழடி, ஜூலை 28–

கீழடி, 10ம் கட்ட அகழாய்வில் சுடுமண்ணால் செய்யப்பட்ட பண்டைய கால அணிகலன் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

சிவகங்கை மாவட்டம், கீழடியில் 10ம் கட்ட அகழாய்வு பணிகள், கீழடி பிரிவு இயக்குனர் ரமேஷ், இணை இயக்குனர் அஜய் தலைமையில் தொல்லியல் துறை மாணவர்கள், தொழிலாளர்களுடன் ஒரு மாதத்திற்கும் மேலாக நடந்து வருகிறது. இதுவரை மூன்று குழிகள் தோண்டப்பட்டுள்ளன.


அகழாய்வில் பாசிகள், கண்ணாடி மணிகள், தமிழி எழுத்து பானை ஓடு, மீன் உருவ பானை ஓடுகள் உள்ளிட்ட பொருட்கள் கண்டெடுக்கப்பட்டு உள்ளன.

இந்நிலையில், அகழாய்வில் பண்டைய கால மக்கள் அணியும் அணிகலன் கண்டெடுக்கப்பட்டுள்ளது. கீழ்ப்பகுதி, 2.5 செ.மீ., விட்டமும் மேல் பகுதி 1.5 செ.மீ., விட்டமும் கொண்டதாக உள்ளது.

பக்கவாட்டில் நூல் அல்லது நார் கோர்த்து அணிவதற்கு வசதியாக ஒரே நேர்க் கோட்டில் ஆன துளை அமைக்கப்பட்டு உள்ளது.

செப்டம்பரில் அகழாய்வு நிறைவடைய உள்ள நிலையில், பணிகள் விறு விறுப்பாக நடந்து வருகின்றன.

கீழடியில் கிடைத்த சுடுமண் அணிகலன்.


www.aatrupadai.com
E- MAGAZINE